சிதம்பர சுவாமிகள் இயற்றிய

உபதேசவுண்மை.

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன் தெருவு,

தங்கசாலைபோஸ்டு, மதராஸ்.

1924.

[அணா 12.

உ

வேதசிரேணி

சிதம்பரசுவாமிகள்

அருளிச்செய்த

தண்டபாணிபேரில் பதிகமும்

உபதேசவுண்மையும்

உபதேசவுண்மைகட்டளையும்

தோத்திரமாலையும்

அடங்கியிருக்கிறது.

இவை

ம-ா-ா-ஸ்ரீ,

தி. சோமசுந்திரகவிராயரவர்கள்ால்

[இவர்கள்கேட்டுக்கொண்டபடி]

பு. சு. துரைசாமி முதலியார்

அவர்களால்

பிழையற பரிசோதிக்கப்பட்டு,

த. துரைசாமி முதலியாரவர்களால்

புவனேஸ்வரி அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை

1924.



சிதம்பர சுவாமிகள்.

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்

ஆசிரியப்பா.

அருமறையந்தமு மாகமாதிகளும்
தெரிவரும்பரமாய்ச் சத்தாய்ச்சித்தாய்
ஆனந்தமாகி யகண்டாகாரமாய்
தானந்தமில்லாத் தத்துவமுடிவாய்
நித்தமாய்ச்சுத்தமாய் நிருமலவடிவாய்
புத்தமாய்முத்தமாய்ப் பூரணவொளியாய்
சாக்ஷாத்காரந் தருபரம்பொருளாய்
மோக்ஷாதிக்ய முதலாய்முதலீ
றில்லாவொன்று மென்றுமோரியல்பாய்
நல்லாருளத்தி னண்ணுநிக்ஷேபமாய்
அடியவர்க்கென்று மருளாயருளில்
கொடியவர்க்கென்றுங் குறித்திடாவிருளாய்
சகலவுயிர்தோறுஞ் சகலவிடந்தோறும்
புகலொருதன்மையாப் பொருந்தியசிவமே
மன்னுயிர்க்கிரங்கி மனிதவடிவுகொண்
டிந்நிலத்தெய்திய தெனப்பழமலையில்வந்
தன்னையார்பெரியநா யகயருளாலே
முன்னுறவருளமு தூண்டுமூவாது
உரியஞானப்பொரு ளுணராதுணர்ந்து
தரணியிலெவர்களுந் தாமனுபவித்த
சமரசமௌன சதானந்தவாழ்வை
அமையொருகணத்தமிந் தளவில்வீட்டின்பம்
எளிதினிற்பெறவுளத் தெண்ணியெண்ணிரண்டாம்

தெள்ளிவுறுசாத்திரந் திருவாய்மலர்ந்தருள்
எங்கோன்குமர குருபரனிணையடிப்
பங்கயச்செழுந்தேன் பதைப்பறவுண்டு
முமலப்பகையோரீஇ முத்திநகர்க்கோர்
அமலவேந்தாகி யரசுவிற்றிருக்கும்
அடியவர்க்கடியா ரடியிணைமருமலர்
முடிமிசைதரித்திடு மூர்த்திமாதவக்
குழந்தைவேலென்னுங் குருபரனருளால்
அழுந்துமஞ்ஞான வகந்தையைமாய்த்து
ஞானமாமணியை நண்பினிற்கைக்கொண்
டீனமாமோக விருளணுகாவகை
இல்லறநீங்கிமே லின்புறு துறவெனும்
நல்லறங்கையறீஇ நற்குருலிங்க
ஜங்கமமெனச்சொலுந்தக்க மூன்றுருவையும்
துங்கமாய்ப்பணிந்து தொழுமறிவாளன்
வேதசிரேணி விமலன்சிவலாயத்
தோதுந்திருப்பணி யுள்ளனவெலாம்பர
பத்தியாற் செய்துயர் பஞ்சபர்வத்துடன்
நித்தியவிழாக்களொடு துறப்புரிந்து
பிரம்மோச்சவமுதற் பெருவிழாவென்றும்
திரமாய்நிகழ்வுறச்செய் வித்ததுமலால்
தண்டபாணியனார் தனித்தேர்த்திருப்பணி
மண்டலமுழுது மதித்திடச்செய்வோன்
திடமுறவினும்பல சிவாலயப்பணியும்
மடமறச்செய்தருள் வள்ளல்மனப்பகை
வீட்டிமெய்ப்போதக னாகிமெய்யடியவர்
ஈட்டும்பவப்பிணியெலா மொருநொடியில்
போக்குஞ்சிதம்பரப் புண்ணியனுயிர்த்தொகை
தாக்கும்பவப்பெருஞ்சா கரந்தாண்டியும்
முத்தியங்கரையிடை முந்திமாமகிழ்வுறச்
சத்தியமாகத் தனதகங்கருதியோ
அறிவறிந்தேயோ வறிவறியாமலோ
பிறிவறிந்தேயோ பிறிவறியாமலோ
வன்பினாலேயோ வன்பதின்றியோ

இலக்கியமிலக்கணமெனுமிருவகையின்
துலக்கமதுணர்கிலாத்தோன்றலாகியும்
முற்பவந்தன்னின் முதிர்வுறப்பயின்ற
நற்றவப்பேற்ரு னவிலுபதேச
உண்மையுமதன்கட்டளையு முகந்துரைத்
தெண்மைதீர்தோத்திர மாலையுமியற்றினன்
கருத்துறுமிவற்றினைக் கலியுகநாலா
யிரத்துத்தொளாயிரத் தைம்பத்தாறில்
பிரபவாதிநாற்பத்தெட்டின்மேற்பெருமை
மருவுமிராக்ஷசவருடமேடத்தில்
அஞ்ஞானிகட்குமமலர்க்குமுதவியாய்
மெய்ஞ்ஞானவிளக்க மென்னமேதினியில்
தழைவுறுமச்சுக்கூடந்தன்னில்
எழுதாவெழுத்திலிசைவித்தளித்தனன்
வரிவளையினங்கள்வயிறுளைந்தீன்ற
பெருகொளிமுத்தைப் பெருங்கருவென்று
குருகடைகிடக்குங்குளிர்வயலெங்கும்
பரவுசீராரியம் பாதைவாழுரவோன்
தகைமைசேர்தோன்றியந் தாரணிபுயத்தான்
மகிமைசேருந்தன வைசியர்குலோத்தமன்
முனியப்பவணிகனர் முற்றவப்பயனல்
நனியவதரித்துநலந்தருங்குமரன்
அண்ணலாரிடத்துமடியவர்பணியிலும்
எண்ணரும்பத்தி யியற்றுமுள்ளன்பினன்
விண்மணிபோல விளங்குஞானிகளெலாம்
கண்மணிபோலக் கருதுறப்பரிவோன்
சுகமிகு வீராசுவாமி
மகிபதியென்ன வருந்திருவாளனே

சிறப்புப்பாயிரம்-முற்றும்.

இங்ஙனம்,

பாரிப்பாக்கம்-முனியப்ப முதலி.

திருச்சிற்றம்பலம்.

வேதசிரேணி

தண்டபாணிபேரில்-பதிகம்.

(காப்பு-கணபதி துதி.)

ஆனைமுகத்தனை-ஞானமனத்தோடு
தானுனவிட்டிடும்-ஈனமனைத்துமே.

பதிகம்.

கங்கைவார்சடையுந் திங்களோர்முடியுங்
காதிலார்மகரகுண்டலமும்
மங்கையோர்புறமும் பொங்கராவணியும்
வண்டலைமாலைமார்பமுமாய்த்
துங்கநான்மறைக டுதித்திடவைந்து
தொழில்புரிநீதனேயெனையாள்
சங்கராவேதசிரேணிவாழ்பரனே
சம்புவேதண்டபாணியனே. (க)

முத்தனேமுக்கண் முதல்வனேநாளு
முகையருமலர்பறித்திறைஞ்சும்
பத்தரினுயர்ந்த வியாக்கிரமபாதர்
பதஞ்சலிமுனிவருண்மகிழ
நித்தமாந்தில்லை யம்பலத்தாடு
நிருத்தனேயென்னையாண்டருள்வாய்
அத்தனேவேத சிரேணிவாழ்பரனே
யப்பனேதண்டபாணியனே (உ)

சைவமும்வீர சைவமுநீயே
சமையமெவ்வகையினுநீயே
ஐவகைப்பூத பேதமுநீயே
யண்டமும்பிண்டமும்நீயே

மைவிழியார் தமயக்குறுநெஞ்ச
மடமைதீர்ந்துய்யுமா றருள்வாய்
தெய்வமேவேத சிரேணிவாழ்பரனே
சிவசிவதண்டபாணியனே (௩)

அந்தணர்மரபி லவதரித்துலகி
லாலயந்தொ றுந்தமிழ்பாடி
வெந்துயர்கொண்ட முதல்வாய்ப்பிள்ளை
வெளிப்படவன் றழைத்தருளும்
சுந்தரமூர்த்தி தனைத்தடுத்தாண்ட
தொன்மைபோ லென்னையுந்தடுத்தாள்
எந்தையேவேத சிரேணிவாழ்பரனே
யேகனேதண்ட பாணியனே. (௪)

உமையுயிரொளியிங் கிவையுறுமுறைமை
யுணர்ந்தசம் பந்தனுற்சித்த
அமைவுகண்ணுடைய வள்ளலார்க்கருளி
யதுமலாலென்பு பெண்ணுருவாச்
சமைதரச்செய்து கழுவினிலேற்றிச்
சமணரைவென் றனையதுபோல்
எமையருள்வேத சிரேணிவாழ்பரனே
யீசனேதண்ட பாணியனே. (௫)

பூதமோரந்தைம் பொறிபுலன்கரணம்
புகன்றிடுங் கருவிகளனைத்தும்
கோதறக்களைந்த பட்டினத்தடிகள்
கொள்ளைகொண்டுணக்கொடுத்ததுபோல்
ஏதமேதருமிவ் வுடன்மதித்திருக்கு
மேழையேற்கருளுவதென்றோ
நீதனேவேத சிரேணிவாழ்பரனே
நிமலனே தண்டபாணியனே. (௬)

அண்டர்நாயகனே வாதவூரடிகட்
கருமறை முடிவினுட்பொருளைத்
தொண்டர்கள்சூழக் குருந்தடிநிழற்கீழ்த்
துகளறவுரைத்தனையதனைக்

கண்டனரெவருங் காணுறவடியேன்
கழறுவதெந்தநாள் தனுவே
தண்டனேவேத சிரேணிவாழ்பரனே
தாணுவேதண்ட பாணியனே (எ)

தத்துவந்தொண்ணூற் றுறையுங்கழித்துத்
தத்துவமெனு மிருபதமும்
கொத்தறவிடுத்தங் கசிபதப்பொருளைக்
குடங்கையிற்கனி யெனவருளும்
சித்தனேயுன்றன் றிருவடிக்கடியேன்
சேருநாளெந்த நாள்புகலாய்
முத்தனேவேத சிரேணிவாழ்பரனே
முதல்வனே தண்டபாணியனே. (அ)

விண்ணவர்பரவுங் கயிலைவாழரசே
மெய்யறிவற்ற பொய்யமணர்
எண்ணருமெங்க ளப்பரைக்கற்றூ
ணிறுக்கிவாரிதி யிடைவீழ்த்தத
திண்ணியவஃதே தோணியாய்க்கரையிற்
சேர்த்தநின் றிருவடிக்கபயம்
நண்ணினேன்வேத சிரேணிவாழ்பரனே
நாதனே தண்ட பாணியனே. (௯)

பதிபசுபாச மூன்றையுமுணர்ந்து
பரமசற் குருவருள்புணர்ந்து
சதிசெயுங்கருவி கரணமும்விண்டு
சத்துவப் புசிப்பையுட்கொண்டு
விதிநிஷேதங்க ளற்றநின்னன்பர்
மெய்ப்பணியிடை புரிந்திடுநன்
மதியருள்வேதசிரேணி வாழ்பரனே
வாதனே தண்டபாணியனே. (௰)

முற்றிற்று.

உ

திருச்சிற்றம்பலம்

உபதேசவுண்மை.

பாயிரம்.

(காப்பு-விநாயகர்வணக்கம்.)

விருத்தம்.

அத்திமுகத்தனை-நித்தநினைத்திட
முத்தியளிப்பன்-சத்தியமிதுவே. (௧)

(வெண்பா—சுப்பிரமணியர்வணக்கம்.)

காணக்கிடையாதகற்பகமாநற்படிகம்
பேணுற்றமேனிப்பெருமானுங்-காணாத்
பேணுற்றமேனிப்பெருமானுங் காணாத்
திருவுருவனுந்தன்னைத் தேர்கிலார்க்கெங்கள்
குருபானுஞ்செவ்வேற் குகன். (௨)

(வேறு—சபாபதிவணக்கம்.)

நல்லசேர்க்கையுநற்பொருள்வசனமுநணுகும்
தொல்லையாம்பிறவியுமினித்தோன்றாதகலும்
கொல்லும்பாதகக்கூற்றும்வந்தணுகுறக்குலையும்
தில்லையம்பலவாணனைத்தினம்பணிந்திடவே. (௩)

(வேறு.—சிற்சத்திவணக்கம்.)

அருவாயுருவாயருவுருவா யகண்டவொளியாயமலபரா
பரையாய்மலருமணமும்போற் பரமசிவத்திட்கலந்திலகும்
ஒருநாயகியாய்சகலவுயிர் களையும்பெறாதுபெற்றுதவும்
திருவார்ஞானசத்தியருட்சிந்தித்திறைஞ்சிமலமொழிப்பாம். (௪)

(வேறு—சொரூபவணக்கம்.)

பிரணவவடிவைப் பேணிப்பொல்லாக்
கரணமதறவே கைக்கொண்டொழுகில்

புரணநல்லொளியும் பூவையுமிருபால்
மருவியகுருவாய் மகிழுவைமனமே. (ரு)

(வேறு—அல்லமாப்பிரபுதேவர்முதலிய அடியார்வணக்கம்.)

பொருவிலாப்பிரபுதேவர் பொற்பாதகமலம்போற்றி
அருமையாம்வசவதேவ ரடியிணைவனசம்போற்றி
வருநாவுக்கரையராரூர்வள்ளல்சிகாழிவள்ளல்
திருவாதவூரர்மற்றைச்சிவனடியவர்தாள்போற்றி. (சு)

(வேறு—மகாகுருவணக்கம்.)

முதுகிரியிலம்மையரு ளமுதுண்டுமெய்ஞ்ஞானமுழுதுந்தேர்ந்து
விதிமுறையினெண்ணிரண்டுசாத்திரங்களுரைத்தருளிவிரத்தராகித்
துதிபுரியுள்ளன்பினருமென்போலும்வன்பினருந்துரியாதீதப்
பதிபெறவோரிமைப்பிலருட்குமாரதேவன்கழல்கள்பரவிவாழ்வாம்

(வேறு—அருளிறைவணக்கம்.)

செழுந்திருமாலு நான்முகத்தேவுந்
தெளிகிலாவொருபரம்பொருளே
பொழிந்திடுகிருபா மூர்த்தியாயிங்குப்
புண்ணியவடிவெடுத்தடியார்க்
குழுந்துருள்போழ்தி னொருமொழியதனை
யுணர்த்திடவெழுந்ததென்றுரைக்கும்
குழந்தைவேலவன் றாண்மலர்முடிக்கணியாய்க்
கொண்டுவெம்பிறவிநோய்தணிப்பாம். (அ)

(வேறு—நூற்பெயர்)

நலமாயிதனைப்படிப்பவர்மெய்ஞ் ஞானமெளிதிற்பெறலாலும்
நிலையாமிதனிற் பயிலுவோர் நெஞ்சமிறக்குமதனாலும்
பலவாந்தொன்னூற்கருத்து மிதிற்பகுத்துக்கூறுமதனாலும்
உலவாவிந்நூற்குபதேச வுண்மையெனப்பேர்நாட்டியதே. (கூ)

வெண்பா—அவையடக்கம்)

எட்டோடிரண்டறியா வேழையேனிந்நூலைத்
திட்டமுடன்சொல்லத்தெரிகிலே-னெட்டிரண்டின்
அதந்தெரிந்தோ ரணைத்துந்திருவருளென்
றெத்துகந்துகொள்வா ருளத்து.

பாயிரமுற்றும்.

நூல்.

(அவதாரிகை.)

இந்நூல் உபதேசவுண்மையென்று வழங்குதலால் முதற்செய்யுளின்கண்ணே உபதேசிக்குமுறையையெடுத்து திருஷ்டாந்தபூர்வகமாய்ப் பொதுப்படக்கூறுதல்.

பூவுலகாளுமன்னன் பொருந்தியதனதுசெங்கோல்
மேவருந்துலைபோல்வேத விதிமுறையெங்குமோங்கப்
பாவனைமூன்றாற்காட்டிப் பழகியவமைச்சன்காணத்
தீவரமாகத்தானே தியக்கநடத்துமாபோல் (க)

(இதுவுமது.)

சாதனமுதிர்ந்தோனாகித் தன்னடித்துணைவிடாது
நீதமாம்மணிகணான்குநிகழ் வுறச்செயுஞ்சீடற்குப்
போதமுண்டாகுமாறு பொருந்து * கண்ணுதியாலே
வேதனைவிடப்போதிப்போன் மேதகுகுரவனாமே. (௨)

(வேறு-ஆசிரியர்தன்மையும் அனாசிரியர்தன்மையுமெடுத்துக்கூறல்.)

மெய்க்குருவையடுத்திடுங்கா லவர்நடையைவிசாரித்துமேவவேண்
டும், எக்குருவுஞ்சற்குருவாய்க் காணுவதாலிழுக்குநடையில்லோனா
மிக்கபரவுணர்வினனா யகமமதையிலனாகிமேன்மைகூறும் [கி
அக்குருவேசற்குருவா மவனிடஞ்சேர்ந்தரியபணியாற்னன்றே (௩)

வேறு—நான்குசாதனமும் உபதேசித்தருளுமென்றசீடனுக்கு முந்தி முதற்சாதனமுரைத்தல்.

முத்திவேட்கையினோர்சீடன் மோனசற்குருவைப்போற்றி
மெய்த்தசாதனங்கணான்கும் விளம்புவாயெனவவ்வாசான்
நித்தியாநித்தியவஸ்து விவேகநின்னெஞ்சகத்தே
சத்தியமாகக்கொண்டு தடையெலாங்கழிப்பாயென்றான் (௪)

(இதுவுமது.)

தடைகழியென்றுரைத்த சற்குருமூர்த்தியேயென்
மடமறநித்தியாநித்திய வஸ்துநிச்சயமனைத்தும்

---

* கண்ணுதியென்பது - கண்கை-தேசம்.

தெளிவுறுசாத்திரந் திருவாய்மலர்ந்தருள்
எங்கோன்குமர குருபரனிணையடிப்
பங்கயச்செழுந்தேன் பதைப்பறவுண்டு
மும்மலப்பகையோரீஇ முத்திநகர்க்கோர்
அமலவேந்தாகி யரசுவீற்றிருக்கும்
அடியவர்க்கடியா ரடியிணைமருமலர்
முடிமிசைதரித்திடு மூர்த்திமாதவக்
குழந்தைவேலென்னுங் குருபரனருளால்
அழுந்துமஞ்ஞான வகந்தையைமாய்த்து
ஞானமாமணியை நண்பினிற்கைக்கொண்
டூனமாமோக விருளனுகாவகை
இல்லறநீங்கிமே லின்புறுதுறவெனும்
நல்லறங்கையுறீஇ நற்குருவிலிங்க
ஜங்கமமெனச்சொலுந்தக்க மூன்றுருவையும்
துங்கமாய்ப்பணிந்து தொழிமறிவாளன்
வேதசிரேணி விமலன்சிவலாயத்
தோதுந்திருப்பணி யுள்ளனவெலாம்பர
பத்தியாற் செய்துயர் பஞ்சபர்வத்துடன்
நித்தியவிழாக்கணெடி துறப்புரிந்து
பிரம்மோச்சவமுதற் பெருவிழாவென்றும்
திரமாய்நிகழ்வுறச்செய் வித்ததுமலால்
தண்டபாணியனார் தனித்தேர்த்திருப்பணி
மண்டலமுழுது மதித்திடச்செய்வோன்
திடமுறவினும்பல சிவாலயப்பணியும்
மடமறச்செய்தருள் வள்ளல்மனப்பகை
வீட்டிமெய்ப்போதக னாகிமெய்யடியவர்
ஈட்டும்பவப்பிணியெலா மொருநொடியில்
போக்குஞ்சிதம்பரப் புண்ணியனுயிர்த்தொகை
தாக்கும்பவப்பெருஞ்சா கரந்தாண்டியும்
முத்தியங்கரையிடை முந்திமாமகிழ்வுறச்
சத்தியமாகத் தனதகங்கருதியோ
அறிவறிந்தேயோ வறிவறியாமலோ
பிறிவறிந்தேயோ பிறிவறியாமலோ
வன்பினாலேயோ வன்பதின்றியோ

முந்துறுசாதனங்கண் முதிர்தனேவழியீதென்று
சந்ததமகிழ்ந்திருத்தல் சமாதானமென்னலாமே. (௰க)

(சிரத்தையிலக்கணம்.)

நற்றவக்குருவாமீச னன்னூலின்விருப்பமாகிப்
பெற்றதுநழுவாவண்ணம் பெரியவைராக்கியத்தால்
சத்திய்ஞானனந்தத் தனிப்பரம்பொருளோநாடிச்
சுத்தமாய்நிற்றலென்னுஞ் சுகமுறுசிரத்தையாமே. (௰உ)

நான்காஞ்சாதன முரைத்தல்.

மூதறிவாகுமந்த முமுக்ஷுத்வமுறையேதென்னில்
கோதுறத்தலைமேல்வெய்ய கொடுந்தழல்பற்றக்கண்டோன்
வாதனைசகித்திடாமல் மடுசலந்தேடுமாபோல்
நீதமெய்க்குருவைத்தேடி நிற்றலென்றறிவாய்நீயே (௰௩)

வேறு:—தாபத்திரயவகை கூறுகவென்றுசீடன்வினவுதல்.

இந்நான்குசாதனமு மிறைவாவுன்றன்றிருவருளால்
சிந்தைமயக்கமில்லாமற் றிடமாய்ப்பெற்றேனதுவன்றி
தொந்தத்தாபத்திரயமெனைத் தொடர்ந்ததனுற்றுயருற்றேன்
அந்தத்தாபத்திரயவகையதுவும் புகல்வாயென்ப்பணிந்தான் (௰௪)

ஆதியாத்மீகவகையுரைத்தல்.

அரியதாபத்திரயவகை யறையக்கேளத்தியான்மீகம்,
பெரியசரீரநோயுறுத லல்லாற்பினுஞானேந்திரியம்
உரியகன்மேந்தியங்காண முறைத்தவிவ்வீரேழுமிக
வெருவுந்துன்புக்கிடமாகு மிவற்றைப்பகுத்துவிடுவாயே. ௰ரு

ஆதிபவுதிகவகையுரைத்தல்.

மானவாதிபௌதிக வகையுங்கேட்டியெந்நாளும்
ஆனமிருகாதிகளின லடருந்துன்புமஃதன்றி
ஞானகன்மவிஷயத்தா னண்ணுந்துன்புங்கரணநான்
கினமுறச்செய்துன்பமுமோ ரீரேழெனநீயறிவாயே. ௰சு

ஆதிதெய்வீகவகையுரைத்தல்.

இந்தவிதமவ்விரண்டொழிய விதன்மேலாதிதெய்வீகம்
சிந்தைகலங்கும்வெயிற்சாற்று சீதமழைமின்னிடிகுமுறல்

முந்தவருதல்மண்டபங்கோபுரங்கள் வெடித்துவிழுதலெனும்
தொந்தத்துயர்களல்லாம லின்னமுண்டு சொலக்கேட்பாய். (௰௭)

(தத்துவங்கட்குத் தேவதையுரைத்தல்.)

அந்தோமுந்துசுரோத்திராதி யதற்குத்திக்குதேவதையாம்
பிந்தவுரைத்தவாக்காதி யதற்குவெய்யோன்பிறங்குகால்
அந்தக்கரணநான்கினுக்கோ வமிர்தகிரணனரனயன்மால்
இந்தத்தேவர்பதினல்வ ரிவராற்றுன்புக்களவின்றே. (௰௮)

ஞானோபதேசஞ்செய்யும்படி சீடன்விண்ணப்பஞ்செய்தல்.

ஐயோவிந்தத்தாபத்தி லழுந்திச்சகிக்கவொண்ணமல்
மெய்யாவுன்றனிணையடிக்கீழ்வீழ்ந்த வென்னைத்தடுத்தாண்டு
பொய்யாந்தேகபோகமெலாம் போகமாவாக்கியப்பொருளை
அய்யாவடியேற்குபதேசித்தருளவேண்டும் மெனத்துதித்தான்.

நான்குமகாவாக்கியங்களையும் அதன்பயனையும்.

சாமானியமாகக்கூறுதல்.

அருளவேண்டுமென்றுமா ணக்கன்றன்னையருகிருத்தி
உரியபிஞ்ஞானம்பிரம முற்றவகம்பிரமாஸ்மியன்றி
விரியந்தத்வமசியுடனே விளங்குமயமான்மாப்பிரமம்
தெரியும்படியிந்நால்வகையுந் தெளியவுரைப்பர்பெரியோரே ௨௰

வேறு.—இருக்குவேத மகாவாக்கியார்த்தங்கூறுதல்.

இந்நால்வாக்கியத்தி னியல்பும்யாமறைந்திடக்கேள்
முந்துநால்வேதந்தன்னின் முடிந்ததோர்பொருளதாகும்
சிந்தனைக்கெட்டாஞானந் திகழ்வதேபிரமமென்ன
அந்தமாமிருக்குவேத மனுதினமறையுமன்றே. ௨௧

வேறு.—ஏனைய மூன்றுவேதமகாவாக்கியார்த்தமுங்கூறுதல்.

அந்நாமேபிரமமா னேமென்றறையுமெசுர்வேதம்
இந்தவதுவேநீயா னு யென்னப்புகலுஞ்சாமமறை
உந்துமயமான்மாப்பிரம மென்றேயுரைக்குமதர்வணந்தான்
முந்தவுரைத்தவிருக்குமறை மொழியினருத்தமொழிந்திடக்கேள்

இருக்குவேத மகாவாக்யார்த்தத்தைப்பிரிந்துக்கூறுதல்.

எந்தவறிவாற்சத்தாதி யிலகுமன்றித்தேவர்நரர்
இந்தமிருக்காலரங்க ளெல்லாமெதினுலியங்குமால்

அந்தவுணர்வேசைதன்னிய மதுவேபிரமம்வேறில்லை
முந்தவுரைத்தவாக்கியத்தின் முடிவுமிஃதென்றறிவாயே. உ௩

எசுர்வேதமகாவாக்கியார்த்தத்தைப் பிரித்துக்கூறுதல்.

எந்தவிடத்துநிறைந்தபர மிசையுந்தனுவிற்புந்திக்குச்
சொந்தசாக்ஷியாய்த்தானுய்ச் சுயமாயிலகும்பிரமமே
அந்தவ்கமென்றெசுர்வேத மறையுமகுதைத்தெரிந்துநீ
பந்தமுழுதுமறவிடுத்துப் பரமஞானம்பெறுவாயே. உ௪

சாமவேதமகாவாக்கியார்த்தத்தைப் பிரித்துகூறுதல்.

இந்தச்சீவதேகேந்திரி யாதிக்கப்பாலிலங்குவதாம்
அந்தப்பிரமநீயேயென் றறைந்ததல்லாலதன்பின்னும்
இந்தநீயேசெகமதனுக் கிசைந்ததொருகாரணமென்ன
அந்தச்சாமவேதமதே யறையுமதனையறிவாயே. உ௫

அதர்வணவேதமகா வாக்கியார்த்தத்தைப் பிரித்துக்கூறுதல்.

இந்தப்படியேசுயஞ்சோதி யாகவெழிலாயிலங்குவது
அந்தவயமான்மாப்பிரம மென்றேயறையுமதர்வணந்தான்
சிந்தைகலக்கமில்லாமற் றேர்வாயிவற்றையெனக்கேட்ட
மைந்தன்வணங்கிக்குருவேயிவ்வழிக்குத் தடையேதுரையென்முன்

வேறு—ஆன்மாவுக்குத் துக்கமின்றெனல்.

பருதியின்முன்ன திருளிரிந்தாப்போற் பரமசித்துருவனுநின்பால்
சுருதியாற்குருவால்விசாரிக்குமிடத்துச் சூழிருடுக்கமேயின்றால்
அரியவித்துக்கமடியனேனெஞ்சத்தணைந்தகாரணமென்னையென்னி
ல், பெரியவோர்தறியைக்கள்ளனென்றெண்ணும்பெற்றிபோலென்
[றறிவாயே. உஎ

சகலதுக்கத்துக்கும் அஞ்ஞானமேகாரணமெனல்.

இந்தவாசனைக ளேதினுலென்னிலிராகாதிகுணங்களினுலே
அந்தவிராக மேதினுலென்னிலபிமானவாசனையாலே
முந்தபிமான மேதினுலென்னினுல் மூடமாமவிவேகத்தாலே
நந்தவிவேக மேதினுலெனிலஞ்ஞானத்தாலென்றறிநீயே. உஅ

வேறு—அஞ்ஞானப்பற்றும்விடுதியுமுரைத்தல்.

அந்தப்பெரியவஞ்ஞான மதுவுமெங்கேயென்றூயேல்
சிந்தைக்கெட்டாதறிவுருவாய்த் திகழ்ந்தவுன்னைமறந்திடமே

இந்தப்பெரியவஞ்ஞான மிரியும்படியிங்கருளென்னில்
முந்தவுரைத்தஞானமுறில் முழுதும்போமென்றறிவாயே. ௨௬

தத்வமசிவாக்கியார்த்தத்தைப் பகுத்துச்சொல்லுகவென்று
சீடன் வினவுதல்.

இந்தஞானப்பொருளடியேற் கியம்பவெழுந்தகுருமணியே
அந்தஞானமணியென்பா லமைந்ததத‌ற்கோரையமில்லை
வந்ததிரிபும்போவதற்கு வகையாய்த்தத்வமசிப்பொருளை
முந்தமொழிந்ததன்றியின்னு மொழியவேண்டுமெனப்பணிந்தான்

வேறு—ஆசிரியர் அதன்மகிமையைக் கூறுதல்

ஆதலிற்பிர்ம்மாதிகட்குமமையானவற்புதமாவாக்கியதே கேட்கவே
ண்டும்,ஏகமுறுவாக்கியங்கள்கேட்கலாகாவிரண்டற்றவத்துவிதான
ந்தரான,போதகுருவினையளிப்போற்றேடிக்கண்டு பொய்யற்றுப்ப
ணிவிடைகள்செய்துஞான, சாதகத்துக்கிடரான விடயமெலாந்தள்
ளிநின்று லுண்மைநிலைதானேயெய்தும். ௩௧

வேறு—இதுவுமது.

அந்தமாவாக்கியத்திலமர்ந்திடுபதமூன்றுகும்
தொந்தமாம்வன்னநான்காஞ் சொன்மனமிறந்துநிற்கும்
முந்துநால்வாக்கியத்தின் முடிபுமப்பதத்தினுண்டாம்
சிந்தனைசெய்யுமாறுன் செவிதனிலுரைசெவோமே. ௩௨

மூன்றுபதார்த்தத்தையும் வற்புறுத்திக்கூறுகவென்றுசீடன்
திரும்பவும்விண்ணப்பஞ்செய்தல்.

எந்தனுக்கருளுமாறிங் கெழுந்தசற்குருவேபோற்றி
முந்துறுதொம்பதார்த்த முடிவுறுதத்பதார்த்தம்
அந்தமாமசிப்பதார்த்த மாகியபதார்த்தமூன்றும்
சிந்தையிற்றோர்ந்துஞானத் திடமுறவுரைப்பாயென்றான் ௩௩

வேறு—அங்ஙனங்கேட்ட சீடனுக்குக்கேட்டல் சிந்தித்தல்
தெளிதலென்னு மூன்றியல்பைபு மெடுத்துக்காட்டி
சொரூபநிலையையுஞ் சாமானியமாய்க் கூறுதல.

உரைக்குமொழிகேட்பதுவேசிரவணந்தானுற்றுணர்ந்துநிற்பதுவே
மனனமாகும், திரைக்கருவியாகுமிருள்போகுமாறுதெளிந்துநிலைநி

ற்றல் நிதித்தியாசனந்தான், பரக்குமொளிபிறக்குமெனிவிருளங்கே
து பார்க்குமிடத்தொன்றுமிலை பாழேயாகும், விரைக்குமொருவித்
தின்றேல்முளைப்பதேது மெய்யனேயெவ்வுயிருநீயேயாவாய். ௬௪

இதுவுமது.

ஆனாலும்பிரமத்துக்கியல்போரெட்டுமரிதானகுறியாறு மாகுங்கண்
டாய், நீநானென்றிரண்டில்லாதெங்குந்தானே நிறைந்த பூரணமாகு
மற்றொன்றில்லை, மோனமேயதுவா முச்சுடருமாகு மூதொளியேச
ச்சிதானந்தமாகும், தானகுஞ்சாசானுபூதியாகித்தன்மயமேயதுவா
குந்தனித்துப்பாரே. ௬௫

வேறு.—சீடன்தொம்பதவுபாதியை வினவுதல்.

அரியநூற்பொருளனைத்து மங்கையிற்கனிபோலெற்குத்
தெரிதரவுணர்த்தவந்த தேசிகவரசேபோற்றி
சுருதிசம்மதமதாகத் தொம்பதவுபாதியேழும்
திரிபுடையனநீங்கித்தெளிந்திடவுரைப்பாயென்றான் ௬௬

வேறு—அதன்வலிவை ஆசிரியர் கூறுதல்.

தொம்பதத்திற்சீவனுக் கங்குபாதிகளர்மேழுந் தொலையாதசாக்கிர
சொப்பனஞ்சுழுத்தியாவும், நம்பினன்சார்போத னிருவகையாமத
னைநட்டாற்றில் விட்டகதையாகநமன்வந்தால், தம்பினன்போனன்
தான் தான்தானேயென்று துக்கமின்றிமார்படித்துத் தூக்கியழுங்
கூத்தைஅம்பலவனறிவான் மற்றாரறிவரையோ வந்தனையறிந்தா
னடியையாரடைவரம்மா. ௬௭

வேறு—பின்னும்சீவவுபாதியேழையும் பிரித்துக்கூறுதல்.

சீவற்குபாதிசரீரமொன்று திகழிந்தியங்களோரொன்று
தாவுங்கரணமீரிரண்டு தயங்கும்பிராணவாய்வொன்று
மேவுமிவ்வேழென்றுரைப்பர்வேத முணர்ந்தோரிவைகழித்துப்
பாவமபாவமறவுன்னைப் பரமாய்க்கண்டுமகிழ்வாயே. ௬௮

வேறு—சீவனுக்கு அவஸ்தைகளும் அபிமானிநாமங்க
ளும் எடுத்துக் கூறுதல்.

அந்தமிலாச்சீவனுக்கங் கவஸ்தைகளோர்மூன்று மபிமானிநாமமொ
ருமூன்றுமெங்ஙனென்னில், சந்ததமுஞ்சாக்கிரத்தின மிசஞ்சொப்
பனமாங் தக்கவதினமிசமேசுழுத்தியிஃதல்லால், பந்தமுறப்புரிந்தி

டுவிச்சுவடுெடுதைசதனும் பகர்பெரியபிராஞ்ஞனுமாமெனப்புகல்வர்நல்லோர், இந்தவிதம்மவஸ்தையபிமானிகடம்மாலே யெப்போதும் பிறப்பிறப்புக்கிடமாகுங்காணே. ௩௯

வேறு—இந்தத்தத்துவங்களைப் பிரித்துச்சொல்லுக
வென்றுவினவுதல்.

ஐயனேயென்னையாளு மருட்பெருங்கடலேபோற்றி
உய்யுமாறுரைத்தவெல்லா முணர்ந்தன னுண்மையென்றே
பொய்யுடலாதியாகப் பொருந்துமேழவஸ்தைதம்மில்
மெய்யிதுபொய்யிதென்ன விரித்துரைசெய்யுமென்றான். ௪0

தேகேந்திரியமுதலியதத்துவங்கள் பிருதிவியின் கூறென்
றும்மனம் வாயுவின் கூறென்றும் நீசித்தென்றுங்கூறுதல்.

அரியதேகேந்தியங்களைநீ யறிவாயுன்னையவையறியா
அரியதேகேந்திரியங்கள துவும்பிருதிவியின்கூறும்
அரியமனத்தைநீயுமெதிர்த் தறிவாயுன்னையஃதறியா
அரியமனமும்வாயுவின் கூறுகவிளங்குமென்றறியே. ௪௧

புத்தி அக்கினியின்கூறென்றும், அகங்காரம் பிருதிவியி
ன் கூறென்றும் அறிவித்தல்.

ஓதும்புத்திதனைநீயே யுணர்வாயஃதுன்றனையுணரா
பேதபுத்தியதினமிசம் பிறங்குமழலின்கூறுகும்
கேதம்புரியுமக்ங்காரங் கேண்மைமுழுதுநீயறிவாய்
ஏதிலுன்னையஃதறியா திதுவும்பிருதிவியின்கூறே. ௪௨

சித்தம் அப்புவியின் கூறென்றறிவித்தல்.

அந்தச்சித்தமதுதனைநீ யறிவாயுன்னையஃதறியா
அந்தச்சித்தமதுதானே யப்புவின்கூறுகுமால்
அந்தநான்குஞ்சம்சயஞ் சலநிச்சயமாமூன்றுமன்றி
அந்தவபிமானமுமாகு மவைநீபலவென்றறிவாயே. ௪௩

(பிராணவாயவு பிருதிவியின் கூறென்றறிவித்தல்.)

அரியபிராணவாய்வுன்னை யறியாததைநீயறிகுவாய்
அரியபிராணவாய்வமிச மதுவும்பிருதிவியின்கூறும்
அரியபிராணனதைப்பிறித்தின் கறியுமிடத்துவேறுகும்
அரியபிராணனதுவுமேயசத் தென்றுணர்ந்துவிடுவாயே. ௪௪

(தத்துவங்கள் முழுதுஞ்சடமென்றும், நீசித்தென்றும்மறிவித்தல்.)

உன்னலறியப்படும்பொருள்களுன்னையறியமாட்டாதால்
உன்னலறியும்பொருளெல்லா முனக்குவிடயமாங்கண்டாய்
உன்னலறியும்பொருளழியு மொருக்காலமுநீயழிவதிலை
உன்னலறியும்பொருளை விடுத்துன்னைவிசாரித்தறிவாயே. சரு

(வேறு—இங்ஙனங்கேட்டசீடன் நானுரென்றுவினவுதல்.)

இத்தனையுநானென்றேயிருந்த வெல்லாமிழிவாக்கிநீயல்ல வென்று
சொன்னீர், அத்தனையுமாரோ தானாரோ தானறியேனேநானறியச்
சொல்லுமென்னச், சத்தியனேசொன்னவெலாஞ்சடமதாகுஞ்சந்த
தமுஞ்சுகசொரூபனுகுமுன்னைப், பத்துபேரெனச்சொல்லுந் திட்
டாந்தத்தைப்பார்த்து நீபிரிந்துணர்வாய்பரமஞானம். (சசு)

(வேறு—தசமன்திருஷ்டாந்தத்தால் பகுத்துக்காட்டுதல்.)

உன்னைநீயறிவதற்கிங் குறுதியாந்தாட்டாந்தங்கேள்
மன்னியதசமனேபோல் மருவியகரணநான்கு
சொன்னவிந்தியங்களைந்து தொகையுறுமொன்பதோடு
உன்னுடன்பத்தென்றெண்ணியுன்னை நீயறிகுவாயே. சஎ

(சீவனுக்கு முக்கியலக்ஷிய முரைத்தல்.)

அந்தவறிவேசைதன்யமதுவேயுன துவடிவாகும்
அந்தவறிவேயுபாதிவசத்தாகும்போ துமுக்கியமாம்
அந்தவறிவேலக்ஷியமாமழுந்து முபாதிதனைப்பிரியில்
அந்தவறிவேநீயாகுமரிய வேதமுடிவிதுவே. சஅ

(சீவனுக்கு சுத்தாசுத்தங் கூறுதல்.)

அசுத்தவுபாதிநானென்னுமந் தவறிவேயசுத்தமாம்
அசுத்தவுபாதிதனைக்கழித்த வந்தவறிவேயசுத்தமாம்
அசுத்தமெல்லாங்கழித்த விடத்தறிவேயன்றிவேறில்லை
அசுத்தந்துக்கஞ்சடமாகுமது வேதேகமறிவலவே. சகூ

இந்த அஞ்ஞானகாரியத்தை யொழிக்குமுபாயங்கூறுக
வென்று சீடன்வினவுதல்.

சொல்லொடுமனத்துக்கெட்டாச் சுந்தரகுருவேபோற்றி
நல்லதுபொல்லாதேது நடுவனுக்கிடமதேது
வல்லிருட்போகமேது மாயையின்செயலனைத்தும்
ஒல்லையிலறிந்துதள்ளுமுபாய மெற்குரைக்கவென்றான். (ருய)

(அஞ்ஞானநீங்கு முபாயங்கற்பித்தல்.)

அறிஞனேன்முன்னோர்சொன்ன வரியநூற்பயனெலாமும்
பொறிவழிசென்றுபோகம் பொசித்திடாதிருக்கத்தானே
மறமொடுகோபமாதி வஞ்சனையொழித்துஞான
நெறிவழுவாமலிந்த நிலமிசைவாழ்குவாயே. ருக

வேறு.

(சாதுசங்கமும்சிவபூசையும் குருபணியும்செய்யவேண்டுமெனல்.)

கொல்லாவிரதங்கைக்கொண்டு குணமேற்கொண்டபெரியோர்கள்
பல்லோருரைத்தஞானநூற் பலவின்கருத்துமென்னென்னில்
நல்லோரிணக்கஞ்சாதுசங்க நண்ணிச்சிவத்தைப்பூசிப்ப
தல்லாற்குரவன்பணிவிடைக ளன்பிற்றினமும்புரிவதுவே. (ருஉ)

(இவையனைத்தும் சாட்சிமாத்திரமாய் விளங்குநிமித்தமேயெனல்.)

நல்லாரிணக்குஞ்செய்வதுவு ஞானநாட்டங்கொள்வதுவும்
கல்லாவனைத்துங்கற்பதுவுங் கனத்தவிசாரம்புரிவதுவும்
சொல்லாச்சொல்லையறிவது வுஞ்சுகமாய்வாழ்கநினைப்பதுவும்
எல்லாமாயல்லவுமாகியிருந்தசாக்ஷியாவதற்கே. (ருங)

அஞ்ஞானவிடுதியும் அந்தவிடுதியில் நீயேசிவசாக்ஷியாகிய கூடஸ்தரென்றும் அதுவேவிட்டலக்கணையென்றுங் கூறுதல்.

பெரிதாமுபாதியத்தையெலாம் பேணியவற்றினீமறைந்தாய்
தெரியவுன்னாலறியுமெலாந் தெளியப்பிரிந்துநோக்குவையேல்
உரியமகனேசாட்சிநீயுற்ற வெல்லாங்கழித்ததினால்
அரிதின்விட்டலக்கணையென் றறைவர்பெரியோரறிவாயே. (ருச)

வேறு—சீடன்திரும்பவும் தத்பதவுபாதியை இன்னும்வற்புறுத்திக்கூறவேண்டுமெனல்.

தரமறியாமலென்னைத்தடுத் தாண்டகுருவேபோற்றி
பெரியதோர்தொம்பதத்தின் பின்னல்களெல்லாமையம்
திரிவறவுணர்ந்தேனின்னந் தெரியவேதத்பதத்தின்
பிரிவெலாமருளவேண்டு மெனப்பினும்வணங்கினின்றான். (ருரு)

வேறு—தத்பதவுபாதிகூறுதல்.

தத்பதத்திலீசனுக்குமேமுபாதிகளாந்தானெவைக்குங்காரணமாய்ச
கலபிராணிகட்கும்,அற்பவுடல்கொடுத்தறிவுக்கறிவாகியூட்டு மவ்வி

ளையாட்டறியாதவசடர்செயுந்தவங்கள்,சொற்பனத்திற்கண்டபொ
ருள்கைக்கெட்டாதது போற்சோர்வதிவுங்கண்டவற்றின்றுகளாறுக்
கமாட்டார், எப்பிறவிதொறுமுயிருக்குயிராகுமீசனெங்குமாமவனை
யொழிந்தொன்றிலையென்றறியே. (ருசா)

ஈஸ்வரவுபாதியேழும் இவையெனல்.

செப்பரியசீவர்மதக் கூட்டுதல்காரணமாய்ச் சிறந்துநின்ற வீசனுக்
கேழுபாதிகளென்னெனனில், தப்பிலாச்சர்வஜ்ஞன்சர்வகாரணனே
ர்வேந்திரியாமியொடுதகுசர்வேஸ்வரனே, ஒப்பிலாச்சர்வசிருஷ்டிச
ர்வஸ்திதியல்லா துயர்ந்திலகுஞ் சர்வசங்காரனெனப்பரிவைதேர்ந்,
தப்பனே யுபதேசவுண்மையமறவாமலனுதினமுஞ் சிந்தைசெயிலகம
மதைவிடுமே. ருஎ

வேறு—சீடன் ஈஸ்வரவுபாதியேழும்பகுத்துக்கூறவேண்டுமெனல்.

சொன்னதோருபாதியேழுந் தொகையதாவறிந்துகொண்டேன்
இன்னுநன்கறிவதாக விஃகிஃதெனப்பிரித்தே
அன்னவனுபாதிதம் மிலமுழுந்துவதமுந்தாதெங்கன்
தன்மயமாவதெங்கன் சாமிநீயுரைக்கவென்றான். ருஅ

வேறு—சர்வக்ஞத்வலட்சணங் கூறுதல்.

இந்தியங்கண்முழுவதுமே யிசைந்தொன்றறிந்தவொன்றறியா
அந்தமுழுதுந்தானறிந்தங் கவற்றைச்சீவர்வினைக்கீடாய்
பந்தித்தசைவித்தூட்டுவித்துப் பரமசிவமாயிலங்குமதால்
முந்தவருசர்வக்ஞனென்று மொழியலாகுமெனத்தேர்வாய் ருகூ

சர்வகாரணத்வ லட்சணங்கூறுதல்.

அறியேன்வினவுஞ்சங்கையெலா மகற்றவெழுந்தகுருநாதா
முறையாயின்னமுளவனைத்து மொழியவேண்டுமெனக்கேட்கில்
குறையாவிந்தியங்களெல்லாங் குணமற்றழிந்துந்தானழியா
துறலாற்சர்வகாரணனென்றுரைப்பர் பெரியோரெனவறியே. சூ௰

வேறு—சர்வேந்திரியாமித்வ சர்வேஸ்வரத்வ லட்சணங்கூறுதல்.

இந்தியங்களுக்கெலாமுள்ளீடாய் நின்றறிகையாலே
சந்ததமந்தவீசன்சர் வேந்திரியாமியாகும்
இந்தவிந்தியங்கட்கெல்லாமேலாய் நின்றிலகுமாற்றால்
அந்தநல்வீசன்சர்வேஸ்வர னெனவறையலாமே. சூக

சர்வசிருஷ்டித்வ சர்வஸ்திதித்வ லட்சணங்கூறுதல்.

தோற்றுமிந்தியங்கடன் னுட்டோன்றுவதாகையாலே
தேற்றவிவ்வீசன்சர்வ சிருஷ்டியுமாகுமென்பர்
ஆற்றுமிந்தியங்கடம்மை யவனோரட்சிக்கையாலே
போற்றுமவ்வீசன்சர்வஸ்திதி யெனப்புகலலாமே. சுஉ

சர்வசம்ஹாரத்வ லட்சணங்கூறுதல்.

இன்னவாறுரைத்ததல்லா லிலகுமிந்தியங்களெல்லாம்
தன்னுக்குளடங்கிநிற்குந் தன்மையான்மறையுணர்ந்தோர்
அன்னவன்றன்னைச்சர்வ சங்காரனென்பரந்தோ
சொன்னவிவ்வேழுமீசன் சொருபமன்றெனக்காண்பாயே. சுங

சீடன் ஈஸ்வராவஸ்தையும் அபிமானிநாமமுங்கூறுகவெனல்.

இந்தநல்லொழுங்கையன் பாலெனக்குபதேசஞ்செய்ய
வந்தசற்குருவேயுன்றன் மலர்ப்பதம்போற்றிபோற்றி
பந்தபாசங்கடீர்ந்த பரனுக்காமவஸ்தையோடு
முந்தபிமானிநாமமுற்று மெற்கருள்கவென்றான் சுச

வேறு—ஈஸ்வராவஸ்தையும் அபிமானிநாமமுங்கூறுதல்

இந்தவகையீசனுக்குக்காரணமாமவஸ்தையியலான துரியமொடுகால பாமதீதம், அந்தமூன்றவஸ்தைதமக்கபிமானியாவா ரழகியவிராட் புருடனுமிரண்யகர்ப்பன், தொந்தவவ்வியாகிருத னென்றுரைப்பர் நல்லோர் துகளிலாநான்மறையின்றுணிவுமிதாங்கண்டாய், சிந்தையினிலிந்தவழிகண்டுதெளிவானுற் சிததியுமுத்தியுமெளிதிற் சேருமிது திண்ணம். சுரு

வேறு—ஈஸ்வரனுக்கு முக்கியலட்சியங் கூறுதல்.

காரணவுபாதியேழாங் காரியநடத்துமீசன்
காரணவுபாதிதம்மிற் கலந்துறுகின்றபோது
காரணமாகுமுக்கியங் கைவிடலிலட்சியந்தான்
காரணமாகவெல்லாங் கண்டுகொண்டிருத்தல்காணே. சுசு

ஈஸ்வரனுக்குச் சுத்தாசுத்தமுறைத்தல்.

அரியகாரணவுபாதி யாகுமோரவஸ்தைமூன்றும்
திரமுறயானென்றெண்ணுந் திசையீசற்கசுத்தமாகும்
பரவியஞானனந்தப் பான்மையிற்றானிருந்து
பெருகுமவ்வவஸ்தைநீங்கும் பெற்றியேசுத்தமாமே. சுஎ

மாயாநீக்கமும் அந்தத்திசையே யீஸ்வரசாட்சியாகிய பிரமமென்று
ம் அதுவேவிடாதலக்கணையென்றுங் கூறுதல்.

மகத்துவமிகும்விசிஷ்ட வாக்கியமதனைக்கண்டு
நிகழ்த்துகாரியவுபாதி நீங்கிக்ககாரணமோரேழும்
அகற்றியங்கவைக்குச் சாக்ஷியாகிவிண்போலிருப்பன்
தொகுத்திடுமிதைவிடாத லக்கணையெனச்சொல்வாரே. சுஅ

அந்த ஈஸ்வரனே மும்மூர்த்திவடிவமாய் உயிர்கள் நிமித்தம்
முத்தொழிலையும் நடாத்துவனெனல்.

இந்தவேழுபாதிக்கெல்லாஞ் சாட்சியாமீசன்முனே
பந்தவான்மாக்களுக்கும் பரகதிக்குதவியாக
விந்தையாய்த்தேகமாதி வினைவழியளித்தேயென்றும்
தொந்தமாய்நின்றுமூன்றுதொழில்புரிந்திடுவனென்முன். சுகூ

இங்ஙனங்கேட்டசீடன்நிஷ்டைகூடிசமாதியில்தொம்பத்சோதனை
செய்துதன்னைச் சாக்ஷிமாத்திரமாய்த்தரிசித்தல்.

குருமொழிமலையிலக்காய்க் கொண்டமாணக்கன்றானும்
அறியவோரேழுபாதியபிமானியவஸ்தைலெல்லாம்
திரிவுடனையந்தீரச் சிந்தித்துக்கழித்தபின்னர்
துரியமதாகிச்சுத்த தொம்பதசாக்ஷியானன். எ0

தத்பதசோதனைசெய்து ஈஸ்வரசாட்சியாகிய பிரமத்
தைத்தரிசித்தல்.

இந்நிலைபெற்றசீட னீசனுருபாதியேழும்
துன்னியவவஸ்தைமூன்றுந் தொடரபிமானிமூன்றும்
பின்னமதறப்பிரித்துப்பிரித்துணர்ந் தெல்லாந்தானய்த்
தன்னிகர்பிரமமாகித் தத்பதசாட்சியானன். எக

அதுவேஇது இதுவேஅதுவெனுந் தற்போதமும்
இழந்து நிற்றல்.

இருவகையாகுமிந்தச் சிவனுமீசனுந்தான்
ஒருமையிற்கொண்டிருந்த வுபாதியோடவஸ்தையெல்லாம்
குருவருநெறியேநின்று கோதறத்தெரிந்தகற்றிப்
பிரிவறவிருந்துசுத்தப் பிரமமாய்மேவினனல். எஉ

சுவானுபூதிமேலீட்டினுள் அத்துவைதானந்தத்தி னின்று
தெளிதல்.

அரியவப்பிரமந்தன்னை யகண்டவாக்கியத்தினாலே
பிரிவறக்கண்டதல்லாற் பேசியசிவசாட்சி
பெருகுமீஸ்வரன்றன்சாட்சியெனும்பிரிவற்றங்கொன்றாய்த்
தாமிலத்துவிதானந்த சமரசசுபாவமானன். எங

இங்ஙனம்தடையற்ற நிரதிசயாந்தத்தைப்பெற்றசீடன்
அடங்காமகிழ்ச்சியால் ஆசிரியரைப்பலவாகத்துதித்து
இன்னமும் அசிபதார்த்தங் கூறவேண்டுமென்னல்.

உரைக்கருமின்பம்பெற்ற வுவகையான்மகிழ்ந்துள்ளாறி
தரைக்குலெற்கருளவந்த தயாளுவேயசிபதார்த்தப்
பெருக்கமுமறிந்துநாயேன் பிறவிநோய்தீரும்வண்ணம்
தெரிக்கவென்றடியில்வீழ்ந்தான் றேசிகனுரைப்பதானன் எச

வேறு—அசிபதார்த்தங்கூறுதல்.

அசிபதார்த்தங்கூறுமிடத் தபிமானிகளாஞ்சிற்சோலிதை
விசுவக்கிராசமாம் பிரசாபத்தியமின்னம் விளம்புங்கால்
இசையும்பொற்புவிசாந்தனெனவியம்புமிவற்றைப்பகுத்தொழிந்து
நசியுமுபசாந்தமுந்தீர்ந்து ஞானம்பரத்திற்களிப்பாயே. (எரு)

(இதுவே விட்டுவிடாதலக்கணையெனல்.)

நிதமுஞ்சீவவுபாதியெலா நோய்ப்பிரித்துக்கழித்துவிட்டுப்
பதியாமீசனுபாதியெலாம் பயிற்றும்தொழிலால்விடாமையினல்
இதுவேவிட்டுவிடாதலக்கணையென்றுரைப்பர் மறைவல்லோர்
அதிநுட்பமதாமிதனையுமுன்னனுபூதியிற் கண்டுணர்வாயே. (எசு)

(வேறு—பின்னருஞ்சுகாதீதநிலையை வற்புறுத்திக்கூறுதல்.)

இந்தவாறுரைத்தயாவு மிடைவிடாதுசாவுநிற்கும்
அந்தமாம்விசாரத்தாலே யதுவிதுவெனுமயக்கம்
சிந்தையிலொன்றுமின்றிச் சிதம்பரமாவாயாகில்
முந்தவேயெல்லாஞ்செய்து முடிந்தவனுகுமென்றான். (எஎ)

(வேறு—பிரமத்துக்காறுகுறியும் இவையெனல்.)

திடமுறத்தேசிகன்மொழிந்ததனுபவத்திற்றெளிந்தே சிற்பாரத்துக்
காறுகுறியென்றதெவ்வாறென்னில், வடிவுமுண்மைமாப்பொருளு

டைமை நிறைவுடனேமன்னுமிரண்டறவிளங்குமுடிவென்றும் பழமை,கெடுதியடையாதென்றும்புதுமையென்றேபகர்வார்க்கேதமிலா நான்மறையின் பொருளுணர்ந்தபெரியோர், தடைபடுசந்தேகவிபரீதமறநீயுஞ் சதாநிஷ்டனாயிருந்து சாதித்துக்காணே. (எஅ)

(வேறு—பிரமத்துக்கெட்டியல்பும் இவையெனல்.)

செப்பியதோர்குறியாறுந் தேர்ந்தேனின்னுந் திடமாகவெட்டியல்பு மருள்கவென்றான், அப்பனேயொருகேள்வியிறந்ததாத லரிதான தரிசனமிறந்ததாதல், எய்ப்பிலாமிகுவீரமிறந்ததாத லெல்லையிலா வானந்தமுடையதாதல், ஒப்பிலெல்லையிலா ஞானமுடையதாத லுயர்காலங்தேசந்திக்கிறந்ததாதல். எகூ

வேறு—இவற்றையனுபவத்திற்றெளிந்து சகசானந்தானுபூதியைப்பெற்று அடியார்க்கேவலசெய்யெனல்.

என்றுரைத்திடுவர்மேலோ ரிவற்றையுன்னனுபவத்தில்
நன்றுறவுணர்ந்துணர்ந்து ஞானவேந்தாகிநேர்வந்
தோன்றுமூன்றவத்தையோ டேழுபாதியுமறக்கழித்து
நின்றுமெய்யடியார்க்காவே னிகழ்த்திடிற்பிறவிபோமே. அய

இங்ஙனமானசீடனுக்கு அகமமதைதொடராதிருக்கும்படிதிருவுளங்கொண்டு ஆசிரியர்முனியாது முனிந்துகூறுதல்.

உலகினிற்சிலபேரிந்த வுபாதிகளின்னதென்று
பலவகையான நூலிற் பார்த்துமேவிட்டதில்லை
இலகிடக்கேட்டநீயு மிழிவுறுதேகபோகம்
நலமெனவெண்ணிவாளா நாளெலாங்கழிக்கின்றாயே. அக

அஞ்ஞானிகளைப்பொதுப்பட இகழ்ந்துகூறுதல்.

ஒப்புரவாகவெந்த வுயிர்களுமுடலைநம்பிக்
கைப்பொருளுடைமைபூமிக் கனதனம்பெண்டுபிள்ளை
செப்பருஞ்செல்வமெல்லாஞ் சிதையாதென்றிறுமாந்தென்றும்
தப்படிநடந்துமாளுந் தகைமையென்சொல்வேனென்றான். அஉ

அங்ஙனங்கூறக்கேட்டசீடன் பயபத்தியோடு திரும்பவும் ஆசிரியர்சந்நிதானத்தில் விண்ணப்பஞ்செய்குதல்.

எடுத்துரைசெய்தவெல்லா மிறைவநின்னருளானன்றாய்
அடுத்ததைதெரிட்டுன்னி யறிந்தனனவற்றையெல்லாம்

விடுத்தவென்னினைவைநோக்கில் வெறுஞ்சிரிப்பாகுமத்தைத்
திடத்துரைசெய்வேன்சுவாமீ திருவுளஞ்செய்குவாயே. அங

(வேறு—இதுவுமது.)

* ஆனந்தமானபரசிவமதனைநாடியோ
ரந்தணன்றவமியற்ற
வருளாலெழுந்தருளு மீசனைவணங்கியவ
னரியவரமொன்றெழிந்தோன்
றீனமுறவேற்கவவ்விறைவன்முனிந்துநீ
யிழிவாஞ் சடாமுனிவனு
யிடுகெனச்சாபமிடவதனையேற்றங்கவனு
மிலகுமோரரசிலேறி
மானமுடனேவசித் தவ்வழியில்வருமவரை
மருவிப்பிடித்தவகைபோல்
மாஞானமுறவுடலெடுத்ததைமறந்துவீண்
மாயைவினையான்மயங்கி
ஊனமுறுநினைவைப்பிடித்துழலுமறிவிலேற்
குன்மனமிரங்கியின்னம்
உளமோகநினைவுபுரி செயலுரைத்தருளுமென்
றுவந்தடிபணிந்தானரோ. அச

வேறு—அங்ஙனம்விண்ணப்பஞ்செய்தநற்சீடனுக்கிரங்கிபின்னரும்
அந்நினைவின்தன்மையையெடுத்து விசேஷமாகக்கூறுதல்.

நினைவின்செய்கையெலாமெடுத்துநிகழ்த்துந்தன்மைநீகேட்பாய்
நினைவின்செயலேயுலகமாய் நிகழ்வதாகுமன்றியிந்த
நினைவின்செயலேனெதியா னெனநீடகந்தைக்கிடமாகும்
நினைவின்செயலேமாமாயை யென்றுநியதிசெய்வாயே. எரு

அந்தக்கரணவழியே சீவன்பொருந்துமெனல்.

பஞ்சகோசமாவதுவே பகருமொருமூன்றவத்தையாம்
பஞ்சகோசமாவதுவே பரவுஞ்சரீரக்கோட்டையாம்
விஞ்சுஞ்சரீரக்கோட்டையினில் விளையுங்கரணநான்குளதாம்
மிஞ்சுமந்தக்கரணவழி மேவுஞ்சீவனென்றறிவாய். அசு

* இது குமாரதேவர்சரித்திரத்திற்கண்டுகொள்க.

நானீயென்னுமகம்பாவ நீங்கவேண்டுமெனல்.

நானீயென்னுநினைவதனா னாமரூபத்தோற்றமாம்
நானீயென்னுநினைவதனா னல்லவறிவுமறைப்பாகும்
நானீயென்னுநினைவொழிய ஞானவிசாரஞ்செய்வாயேல்
நானீயென்னுநினைவொழிந்து ஞானநிலையைப்பெறுவாயே. அஎ

இந்திரியநிக்கிரகம் பண்ணவேண்டுமெனல்.

புற்றாந்தேகக்குகையதனிற் பொருந்திவாழுமோரரவம்
புற்றாந்தேகேந்தியவழிபோய்ப் புலனைமறித்துப்பிடித்திழுத்து
புற்றாங்குகையிற்கட்டுமட்டும் போக்கும்வரவும்விடுவதிலை
புற்றாங்குகையிற்கட்டுண்டபுலனைக் கழித்துவிடுவாயே. அஅ

தேகாபிமானம் நீங்கவேண்டுமெனல்.

தேகமென்றுந்தேகியென்றுந் தெரியாருலகநினைவினரே
தேகமானமொழியாதார் தேகிநிலையுமறியாதார்
தேகமானமொழியாது தேகிநிலையுங்காண்பதிலை
தேகமானமொழித்துன்னைச்சிவமாய்க்கண்டுதெளிவாயே. அகூ

அவஸ்தைகளின்சுத்தாசுத்தம் அறியவேண்டுமெனல்.

அவத்தைமூன்றுஞ்சீவர்கட்கு மரியவீசனார்தமக்கும்
அவத்தைமூன்றுமெய்ப்பொருட்கு மறையுமிந்தமூவகையில்
அவத்தையசுத்தஞ்சீவர்கட்கே யாகுமவர்கட்கிலதாகும்
அவத்தையசுத்தமறிந்துவாழ்வதுவேமுத்திப்பயனாமே. கூ0

தேகபந்தம் விடவேண்டுமெனல்.

தேகமதுவேயுலகமதாய்த் திகழுமதுவேயுருநாமம்
தேகமறிந்தும்பரமறியா தெதுவோவதுவேமாயையாம்
தேகவுதவிச்சாதனங்கள் திடமதாகுமவ்வளவும்
தேகமதனைக்கைவிடலே தீர்ந்தநிலையென்றறிவாயே. கூக

மாயாகற்பிதத்தால் துன்பமெனல்.

இல்லாமாயையுண்டெனவே யிருப்பதெதினாலென்றுணர்வாய்
இல்லாமாயைக்கதிட்டான மெங்கேநிகழ்வதென்றுணர்வாய்
இல்லாமாயையதனாலே யிடரேயில்லையென்றுணர்வாய்
இல்லாமாயைவிணையுளங்கொண்டி டிலங்கதுவேயிடரென்றான். கூஉ

இந்தநினைவினாற்றான்மோசம்போனேன் சுவாமியென்று
சீடனிரங்குதல்.

எந்தாயந்தோவனாதி தொடுத்திந்நாள்வரையிலிந்தநினைவே
தொந்தவியாதியதுபோலத்தொடர்ந்து தொடர்ந்துபற்பலவாம்
விந்தைபுரிந்தென்குடிமுழுதும் வினைநாசஞ்செய்ததால்
முந்துமதனையொழிந்திடென மொழிந்தான்குருநாதனுமொழிவான்

மாயாகற்பிதத்தை வந்தியாபுத்திரன்போலக்கண்டு
சுபாவமாயிருப்பாயெனல்.

இல்லாவுலகமுண்டென்னவிருக்குநினைவேமலமாகும்
இல்லாமாயையுண்டென்ன விருக்குநினைவேமறைப்பாகும்
இல்லாவிந்தவிருவகையு மிழிவாய்க்காணிலிடரில்லை
இலாவிவற்றையின்றென்றே யிருப்பாயென்றுமியல்பாயே. ௩௪

நினைவிறக்கும்படி இன்னமுஞ்சாதிப்பாயெனல்.

நினைவினிடத்திற்பசுபாச நிகழுமதுவேயுலகமாம்
நினைவினுதிப்புமொடுக்கமுமே நேரேநோக்கில்வெளியாகும்
நினைவுநீங்கிற்பாசமது நில்லாதென்பதனுபவமே
நினைவுநீங்கச்சாதனத்தினிற் பாயென்றுநிலையாயே. ௩௫

வேறு—நினைவிறக்க வில்லையேயென்ற சீடனுக் குபாயங்கூறுதல்.

சாதனத்தானினைவிறக்குமென்றுரைத்த சற்குருவேநின்மொழியெ
ன்றலைமேற்கொண்டேன், பேதமறச்சாதனத்திலிருக்கும்போழ்திற்
பிறிந்துபலவழியி லலைகுவதென்னென்னில், மாதவனேமனேநினைவ
ங்குலகதேக வாசனையாறபிரிந்தலைந்துமாறிநிற்கும், ஆதலினாற்குரு
பணியில்விடனைப்போலு மதிவிரகமாகிலந்தவலைவுபோகும். ௩௬

வேறு—பின்னரும் அஃதேவினாவின சீடனுக்கு அந்த
நினைவை இருவகையாய்ப்பகுத்துக்கூறுதல்.

நினைவுநிலைக்கச்சமாதிநிலை நிகழ்த்துங்குருவேநின்னருளால்
நினைவுநிலைக்கச்சமாதியினி னிற்கநிலையாதென்னையெனில்
நினைவையிரண்டுகூறாக்கி னில்லாநினைவும்வெளிப்படுமந்
நினைவைத்தள்ளிநிற்பதுவே நிலைத்தசமாதியென்றுணர்வாய். ௩௭

(இதுவுமது.)

சுருதியெல்லாமிருநினைவாய்ச் சொல்லுமந்தப்பொருடோன்றாச்
சுருதிசீவனினைவுபரனினை வென்றிரண்டாய்ச்சொல்லுமால்

சுருதியுரைக்கும்பொருளுணர்த்தச் சுத்தகுருவும்வேண்டுமால்
திருதியருத்தங்குருவினாற்றெரிந்து சுகத்தைப்பெறுவாயே. கூஅ

(இதுவுமது.)

சுருதிக்கருத்தும்பொருளென்னுமதுவுஞ்சொல்லாய்முடிந்திடுமால்
சுருதிக்கருத்தம்பொருளானாற் றாயகுருவும்வேண்டுவதில்
சுருதிக்கருத்தும்பொருளல்ல வென்றேதுணிந்துமாணாநீ
சுருதிசொல்லும்பொருளதனைச் சுட்டிக்காட்டவறிவாயே. கூகூ

இந்தநினைவிறக்காமல் தவமுடியாதெனல்.

இந்தவுலகஞ்சத்தானா லிந்தநினைவுஞ்சத்தாகும்
இந்தவுலகமசத்தானா லிந்தநினைவுமசத்தாகும்
இந்தவுலகுக்கதிட்டான மிந்தநினைவையன்றியில்லை
இந்தநினைவிங்குள்ளளவுமியற்றுந் தவங்கள்முடியாதே. (ள)

இதுவுமது.

இந்தநினைவேமாயையா மிலங்குமிதுவேயுலகாகும்
இந்தநினைவையல்லா தோரிடருமில்லைச்சாதனங்கட்
கிந்தநினைவையகற்று மியற்றுந்தவத்தாற்பயனில்லை
இந்தநினைவிங்கிருக்குமட்டு மேகநோக்குக்கிடமில்லையே. ளக

இதுவுமது.

இந்தநினைவையறிஞரெலா மிழுத்துவதைக்குந்திறமறிந்தார்
இந்தநினைவின்வலிவதனை யென்னாற்சொல்லவளவுபடா
இந்தநினைவுநீங்காதே லெல்லாஞ்சிவமாய்க்கண்டாலும்
இந்தநினைவிற்சிவமறைந்தே யிருளாயெங்குமருளாமே. ளஉ

இதுவுமது.

இல்லாநினைவென்றறிவதுவும் மியற்றுந்தவத்தின்முயற்சியதே
இல்லாநினைவுமில்லாமற்றானே யெண்ணவேண்டுமால்
இல்லாநினைவுமில்லாம லெப்போதொழியுமெனக்கேட்கில்
இல்லாநினைவுநீங்குதற்கே யிந்தவுணர்விங்குற்றதுவே. ளங

இதுவுமது.

ஒருதன்னினைவேயசுத்தமா மொருதன்னினைவேசுத்தமாம்
ஒருதன்னினைவேபுத்தியா மொருதன்னினைவேசித்தமாம்
ஒருதன்னினைவேயகங்கார மொருதன்னினைவேயுலகமாம்
ஒருதன்னினைவேசங்கற்ப விகற்பமாமென்றுணர்வாயே. ளச

இதுவுமது.

பந்தநினைவுநீங்காதேற் பரமஞானநிலைப்பதிலை
பந்தநினைவுநீக்கத்திற் பரமஞானநிலைக்குமால்
பந்தநினைவுக்கிடமிங்கே பகருமிச்சையதுவாகும்
பந்தவிச்சையொழியாதேற் பாழ்த்தநினைவுமொழியாதே. ௱௫

இந்தநினைவு பெரியோர்க் கேவலாளா யிருக்குமெனல்.

இந்தநினைவையெல்லோரு மெளிதாயெண்ணியிடருற்றார்
தொந்தநினைவைமூதறிஞர் தொடர்ந்துவதைக்கமுயல்வுற்றார்
முந்துநினைவவ்வறிஞர் தமக் கேவலாளாய்முடிந்ததால்
அந்தவறிஞரதுகண்டுள்ளாறி மகிழ்ச்சிமீறினரே. ௱௬

(நினைவின்றீமையுரைத்தற்கரிதெனல்.)

இந்தநினைவையிவ்வளவென் றெடுத்துக்கூறமுடியாதால்
இந்தநினைவின்றீமையையே யெல்லாநூல்கள்மொழிவதுவும்
இந்தநினைவையுரைக்காத நூல்களொன்றுமிலதாகும்
இந்தநினைவுமாய்ந்தவிடத்திலெலா விருளுமாய்ந்திடுமே. ௱௭

(இவற்றில்பரநினை வீதென்றும் உயிர்நினை வீதென்றுங்கூறுதல்.)

நினைவிற்கெங்கேயிடமென்று நினைக்குமதுவேபரநினைவு
நினைவினுடனேபரநினைவு நீங்காதிருக்குந்தன்மையினால்
நினைவேமெழுகுபரநினைவு நிமலமான்பொற்பொடியாம்
நினைவினுள்ளேமறைந்ததனு ணிகழுமிச்சைக்கிடமாமே ௱௮

இச்சாத்தியாகமேயறிவெனல்.

இச்சைநினைவைக்கண்டறிவா ரெல்லாந்துறந்தமெய்த்தவத்தோர்
இச்சைநினைவையிச்சையுளா ரென்றுமறியமாட்டார்கள்
இச்சைநினைவாம்போய்ப்போக மிரியமாட்டாதொருக்காலும்
இச்சைநினைவுநீங்குமிடமெங் கென்றுணர்தலுணர்வாகும். ௱௯

இந்தநினைவையாவராலுந் தடுக்கப்படாதெனல்.

இந்தநினைவைப்பிறிப்பவராரிந்த நினைவைமறிப்பவரார்
இந்தநினைவைப்பிடிப்பவரா ரிந்தநினைவைக்கெடுப்பவரார்
இந்தநினைவைத்தொலைப்பவரா ரிந்தநினைவைக்கெலிப்பவரார்
இந்தநினைவினுரப்பெல்லா மெதிர்க்குமிடத்திற்றோன்றிடுமே. ௱௰

இந்தநினைவின்றன்மை குருமுகத்திலறியவேண்டுமென்னல்.

இந்தநினைவின்கூறெல்லா மெடுத்துமொழூந்தோஞ்சுருக்கமதாய்
அந்தநினைவின்பொருள்விளங்கா தாசானன்றிச்சுருதியினால்
பந்தநினைவின்பொருள்வேறு பகருமுயிரின்பொருள்வேறு
முந்துமறிவின்பொருள்வேறு முதல்வன்பொருளும்வேறுமே. ௱௰௧

வேறு—இந்தநினைவினிடத்திற் பதிபசுபாசமூண்டாகியொடுங் குந்தன்மையறிந்துநீங்கி நிஷ்டாபரனாயிருப்பாயெனல்.

மூலமாநினைவிற் பதிபசுபாச மூன்றுமுண்டாகியேயொடுங்கும், சாலவந்நினைவு நீங்கியவிடத்திற் சகலகேவலங்களுநீங்கும், ஏலவிங்குரைத்த நிலைபிசகாமலிருந்துநிஷ்டாபரனாகிப், பாலனேயுயிகின் மேவுவாயதுவே பரகதியாகுமென்றறியே. ௱௰௨

இதுவுமது.

அசைவாநிற்கிற்பாநிலையாகு மஃதினிற்பிரிவதுசீவன், இசையவிங்குரைக்குமிவற்றினிற்பாச மிலங்குமதறிகுவதறிவே, பசையறுமனத்தனாகியங்கவற்றிற் பழகிநின்றுண்மையையறிந்து, திசைதிசையோடுந்திமிரமுமலத்தின் றியக்கமுமறுத்திடுவாயே. ௱௰௩

அந்தநினைவை யிருவகையாய்ப் பகுத்துக்காணும் உபாயமுரைத்தல்.

முன்னரேமொழிந்தபதிபசுபாச மூன்றுமேயனாதியாய்நிற்கும் முன்னினைவகற்றிப்பின்னினைவாலம் மூன்றையுமறிகுவதறிவே, அன்னினைவிரண்டுமெங்ஙனம் பிரிப்பதவற்றினையருளெனக்கேட்கில் சொன்னமுன்னினைவிவ்வுலகிடையுழலுஞ்சோர்விலாப்பின்னினைவறிவே. ௱௰௪

அந்தஉயிர்நினைவினால் சிவேஸ்வர சகத்துண்டாகுமெனல்.

அறிவெனவறைந்த வதுநன்கதாகுமதுசெயுங்கிரியை யென்னென்னீல், அறிவந்தநினைவிற்கலந்துறுபோழ்தினரும்பரமுயிர்சகமுளவாம்அறிவந்த நினைவைபிறிந்துறுபோழ்தி லபேதமும்பேதமுமிலவாம், அறிவதினிடத்திலந்நினைவிருந்துமப்பனே குற்றமொன்றிலையே. ௱௰௫

வேறு—அனுபவத்திலுள்ளபடிகண்டுசீடன் விண்ணப்பஞ்செய்தல்.

எல்லாமறிந்தகுருநாதா வென்னையிழந்துமுனைவிடுத்தும்
பொல்லாவுடலைநானென்றும் புகழ்ந்தேயிந்நாளமூததெல்லாம்

நல்லாயிந்தநினைவினுலென்றே ஞானசாதனத்தில்
கல்லாப்புலையேனுள்ளபடி கண்டேன்கண்டேன்கண்டேனே. ௱௰௬

அந்தநினைவுநீங்குமிடத்து அஞ்ஞானமுதலியமாயாகற்பித
மெல்லாநீங்குமெனல்.

இந்தநினைவிங்கழியுங்காலே தேததனேடழியுமெனில்
பந்தமாகுமஞ்ஞானம் பகராரோபமத்தியாசம்
தொந்தவகந்தையபிமானந் தொலையாவாசைகோபமொடு
விந்தைமாயாகற்பனைக ளெல்லாம்விடுமென்றறிவாயே. ௱௰௭

மனமடங்கியுலகில்வசிக்கும்படி அடியேனுக்கின்னமும்
உபாயங் கற்பித்தருளவேண்டுமெனல்.

எல்லாம்விடுமென்றெனக்குரைத்த விறையேபோற்றியெனைப்பற்றி
பொல்லாமனந்தன் வயமாக்கிப் போதவென்னைப்பொய்யாக்கி
அல்லோலங்க்ள்செய்யுமதை யடக்குமுபாயமுறையுமெனில்
நல்லோர்செயுஞ்சற்கருமவழி நாமேயுரைக்கநீகேட்பாய் ௧௧௮

(சதாகாலமும்சாதுசங்கசேர்க்கை வேண்டுமெனல்.)

அந்தவழிதானேதென்னி லறிவாய்நீயேயமலமதாய்
முந்தவுரைத்தகாமாதி பகைகண்முழுதுமறவிடுத்துச்
சிந்தையதனைச்சாதுசங்கச் சேர்க்கையறவேசெய்வாயேல்
சந்தச்சாதுசங்கத்தாற்றத்வவிசாரமுண்டாமே. ௧௧௯

தத்வவிசாரத்தில்மனமடங்கிநிற்றற்குத் திருஷ்டாந்தபூர்வக
மாய் தந்திரங்கற்பித்தல்.

அரிதாந்தத்வவிசாரமதுண்டாமென்றுரைத்தகுருமூர்த்தீ
விரிவாமனமவ்விசாரத்தி லொடுங்குமுபாயம்விளம்புமெனில்
சரியாவிஷயமோகளைப்போற் றக்கவிசாரத்துன்னன்பும்
வருமேயாகில்விரியுமனம் வாட்டமுறுமென்றறிவாயே. ௧௨௰

தேகத்திலிருப்பளவும்உலகத்திற்பற்றறுதிருக்கும்படி
உபாயங்கூறுகவென்றுசீடன்வினுவுதல்.

ஆதியந்தஞ்சூனியமாய்நடுவுமின்று யசங்கமாய் நித்தியமாய மலமாகும், போதமேதிருமேனியாகவந்த புண்ணியனே நின்னடியார்க்கேவல்செய்யும், நீதமாநினைவுளதேலனேகஜென்மம் நோக வந்துறினுமெத்தநன்றே, சாதகவிவ்வுடலிலுறுமளவுநாயேன் தற்செயலற்றிருக்கும்வகைசாற்றுமென்றுன். ௧௨௧

(அதற்கு உபாயங்கற்பித்தல்.)

நீதகன்றமாணுநீகேட்டதெல்லாந் தெளிவாகவின்னுநன்ருய்ச் செப்பக்கேட்பாய், சாதனத்தின்முதிர்ந்த நல்லோர்தமையடுத்துத் தக்கவவருரைகேட்டுமெனனஞ்செய்து, நீதமாயவர்க்குரிய பணிகள் யாவு நின்போதமறப்புரிந்துநிலைதப்பாமல், மேதினியிலருளுருவா யிருக்கிலின்பவீட்டினையு முடிவில் நீமேவுவாயே. ௧௦௨

(வேறு—அருளேயாவுமெனல்.)

ஆனவருளேயிகபரத்துக் கப்பாற்பட்டதென்றுணர்வாய்
ஆனவருளேயிகபரங்க ளாகியொடுங்குமதுவன்றி
ஆனவருளேயதிஷ்டான மாகிநிகழுமதுதெரிவாய்
ஆனவருளேபரமமுயி ரதுவேநமதுவடிவாகும். ௧௦௩

(வேறு—நானேபிரமமென்னுமகம்பாவ நீங்கவேண்டுமெனல்.)

பெரிதான்பிரமந்தன்னைப் பேதையர்சிலர்நானென்றே
அரிதாகவுரைப்பரந்த வகந்தையுநீங்காதாகில்
சிரியாரோபெரியாரானோர் சிரிக்குமங்கவரைச்சீறித்
தெரியாமலிகழும்புல்லர் நிரகுறுவரன்றே (௧௦௪)

[அகம்பாவம்பெரியோர்களுக்கில்லையெனல்.]

விரிவானவுலகமெல்லாம் விரிந்துடற்காப்புசெய்து
கரியான்மாநானேயென்று கருதுமிம்மனமாங்காட்டைப்
பெரியோர்களெதிரிட்டிந்தப் பிழையெலாமாகாதென்றே
அரியமெய்ஞ்ஞானவாளா லறுத்ததைச்சாதித்தாரே. ௱௨௫

ஆன்மாவேயாவுமெனல்.

ஆன்மாவையறிவதற்கே யனேகமாந்திட்டாந்தங்கள்
ஆன்மாவையறிவதற்கே யளவிலாவாச்சியங்கள்
ஆன்மாவையறிவதற்கே யகண்டமாம்லக்ஷியங்கள்
ஆன்மாவையறிவதற்கே யருமறையுரைத்ததம்மா. ௱௨௬

வேறு—ஆன்மாவையறிந்தவர் பிரமத்தையறிவாரெனல்.

ஆன்மாவுக்கதிட்டான மரியபரமென்றுரைப்பர்
ஆன்மாவும்பரவெழுத்து மவ்வுமுவ்வுமாமென்பர்
ஆன்மாவின்பொருளும் வேறரியபரம்பொருளும்வே
றுன்மாவின்பொருளறிவா ரரியபரம்பொருளறிவார். ௱௨௭

வேறு—வாசனைக்ஷயமேமுத்தி நிலையெனல்.

வாசனைக்ஷயமேமானசபூஜா மார்க்கமென்றுணர்ந்திடவேண்டும்
வாசனைக்ஷயமேசாதனமாக்கு மனமுதற்பொறிகளுமொழிக்கும்
வாசனைக்ஷயமேயிருவினைபோக்கும் வருமுடனைசமேயாக்கும்
வாசனைக்ஷயமேபிராரத்த நீக்குமலவிருடுணிக்குமென்றறியே. ()

வேறு—மாயாரகிதஈஸ்வரன் சீவனைமுத்திசேர்க்கு நிமித்தம்
மாயாசகிதனைவனெனல்.

இந்தச்சீவனேயெதிரிட்ட விஷயத்திலழுந்தி
இந்தச்சீவனேயிருளினிற் கிடந்துறுபோழ்தில்
இந்தச்சீவனைமுத்தியிற் சேர்த்தருணிமித்தம்
இந்தச்சீவன்மாட்டெழுந் தருளுவன்பரமேசன். ௱௨௯

வேறு—ஈஸ்வரசிருஷ்டியீதென்றும், சீவசிருஷ்டியீதென்
றும், இதுவேநெருப்பாறென்றும், இதைக்கடக்கு
மறிவேமயிர்ப்பாலமென்றுங்கூறுதல்.

ஈசன்சிருட்டிசராசரங்களிந்தச் சீவன்சிருட்டியோ
மோசவகந்தையபிமான மூடவாசைகோபமெனப்
பேசலாமிந்நான்குநெருப்பாறுய்ப் பெருகிமுந்துமால்
பாசவினைநீக்கறிவு மயிர்ப்பாலமாமென்றுரைப்பாரே. ௱௩௰

வேறு—சீடன் கழிந்தநாட்கிரங்குதல்.

நெறுப்பாறுவிடயமென்று மறிவுதன்னை நீடுமயிர்ப்பாலமென்றுஞ்சொன்னீர்மெய்யே, கருப்பாசவலையதனிற்புக்கிப்புக்கிக் கலக்கமுறுமெனைத்தடுத்துக்கருணையாலே, விருப்பாகஞானவழி யெளிதிற்காட்டி வீடுபெறச்செய்தருள்சற்குருவேயிந்தச், சுருக்கமதைத்தெரியாமலிருந்நாள்மட்டுஞ் சுமந்தபொதியுடலளவு சொல்லொணாதால். ௱௩௧

விடயமேநெருப்பாறென்று ஆசிரியருரைத்தல்.

ஐயனே விடயவியல்பின்னுநன்று யருளென்னிலுன்னுடலும் விடயமாகும், வையமிசைமாடுமக்கள்வீடுசுற்ற மனைவிமுதலியவனைத்தும்விடயமாகும், மையலுறுமெவ்வுருவும்விடயமாகு மல்குசராசரமுழுதும்விடயமாகும், கையுறுமிவ்விடைய நெருப்பாற்றைநீந்திக் கரைகாணுமறிவுமயிர்ப்பாலமாமே. ௱௩௨

அறிவேமயிர்ப்பாலமென்றுரைத்தல்.

எண்ணரியவறிவு மயிர்ப்பாலமாமென் றெனக்குரைத்த தேசிகனேயெவ்வாறென்னில், புண்ணியமாஞ்சிவ வேடந்தன்னைப்பூண்டிபுல்லர்சிலர்நான்பரமஞானவானென். கண்ணிலேபந்தமிலையெனப்புலம்பிக்கருத்திலேயனேகபந்தங்கட்டிக்கொண்டு, மண்ணிலேதிரிந்துமண்ணுய்மடிகின்றாம் மதியீனரொடுகூடிவா ழொணுதே. ௩௩

(இதுவுமது.)

முன்னமெடுத்துரைத்ததன்றியின்னங்கேட்பாய்மூடவறி வினருறவுமாள்வேண்டும், தன்னுடையமறைப் பல்லால்மகனேவேறு, தடையுளதாலவைக் கெல்லாந்தலைமையாகும், பின்னவிடுமபி மானம்போகவேண்டும்பேதைமையாமிறுமாப்புஞ் சாகவேண்டும். இன்னமறியாமையகமமதையாவு மிடாகுமவையுமறவிடவேவேண்டும்

(இதுவுமது.)

கன்னல்மொழிமங்கையர் மேலாசையாகாக் கனமானபொன்பூமியாசையாகா, சின்னமுறும் பொய்வேடத்தாசையாகாச் சிறந்தபெரும்புகழதனிலாசையாகா, இன்னமுதாமறுசுவையிலாசையாகாவில்வாழ்விற்றிரும்பவுமேயாசையாகா, அன்னியரோடுறவுசெயுமாசையாகாவபினிகஞ்சாமதுவுண்ணு மாசையாகா. ௩௫

(இதுவுமது.)

அகத்தொன்றும்புறத்தொன்றுங்கருதலாகாவதிசயமாய்க்கண்டொன்றைச்சிரித்தலாகா, மிருத்தவறம்புரிவோரைத் தடுக்கலாகாவேதியரைப்பெரியோரைப்பழிக்கலாகா, செகத்திலபிமான மதைமேவலாகாச்சிவாகமத்தைத்தெய்வத்தையிகழலாகா, தொகுத்தவிவற்றினிற்றேய்ந்துந் தோயாதோங்குஞ்சுயவறிவே மயிர்ப்பாலமென்றுதேரே. ௩௬

வேறு—அறையினுட்பொருளைத் தெரிவிக்கவேண்டுமென்றுசீடன் வினவுதல்.

தேவரீருரைத்தவெல்லாஞ் செப்பமாய்த்தேர்ந்தறிந்தேன்
மேவுநின்றிருவாய்தன்னில் விளையமுதினைப்பொசிக்கும்
ஆவலேமிகுத்துநின்றேற கறையினுட்பொருளுங்காட்டி
ஓவரும்பிறப்பொழிப்பதுன் கடனெனப்பணிந்தான். ௩௭

(அறையினுட்பொருளை யறிவிக்கத்தொடங்கல்.)

பெரியதோருலகுதன்னிற் பெருந்தவமுயற்சியாலே
திரமுறவுற்பவித்துச்சிறந்த நூல்விசாரஞ்செய்து
குருபணிசெய்யவந்த குழகனேயறையின்மேவும்
அறியதோர்பொருளுங்காட்டி யருளுவோமறிந்துகொள்ளே. ௱௩௯

(வெளிப்படையின்றிக் குறிப்பினாலுரைத்தல்.)

அறையிலிருக்கும்பொருளெடுக்க வறிஞனொருவனுட்புகுந்தே
அறையிலொன்றுந்தெரியவில்லையென்றே வெளியில்வந்தறைந்தான்
அறையிற்பொருளுண்டெனச் சொன்னானில்லையென்றவனை நீ
அறையிற்கண்டதுண்டோ சொல்லென்றானிதிற்கண்டறிவாயே. ()

(வேறு—சீடன்தெளிவின்றிப்பின்னருஞ்சங்கித்தல்.)

கண்டறியெனப்புகன்ற கருணையங்கடலேயிந்நாள்
பண்டையூழ்வினைக்காளாகிப் பாதகம்புரிந்துநின்றேன்
தொண்டனென்சிறியனேனைத் தூக்கிநின்கிருபையாலென்
மிண்டெலாமொழியுமாறிச சங்கையும்விளம்புமென்றான். ௱௪௰

வேறு—மேலுங்குறிப்பினால் ஆசிரியர்வினாதலும்சீடன்சங்கித்தலும்

அறையிற்பொருளையெடுப்பதற்கே யப்பாநுழைந்துபார்க்குமிடத், தறையிலென்னகண்டாய்சொல் லந்தோவிருளைவிடவேறே, அறையிற்பொருளுங்கண்டிலனா லையாவுனதுதிருவருளால், அறையிற்பொருளீதெனக்காட்டி யருளவேண்டுமெனக்கரைந்தான். ()

(ஆசிரியர்வெளிப்படையாகவுரைத்தல்.)

அறையிலிருக்கும் பொருளொன்றேயப்பா பரமப்பொருளாகும், அறையிலிருக்கும்பொருட்டெரியு மதுவுமுன்றன்கண்ணாகும், அறையிலிருக்கும்பொருளில்லை யென்றவதுவேயிருண்மலமாம், அறையுமந்தவிருளகற்றி யறையிற்பொருளையறியென்றான். ௱௪௨

சீடன்அறையினுட்பொருளைக்கண்ட நிரதிசயானந்தப்பெருக்கினால்தன்னைக்காணே னென்றிரங்குதல்.

மறைமுடிவனைத்துநாயேன் மகிழ்ந்திடவுரைக்கவந்த
இறைவநின்கிருபைதன்னாலிழிவுயர் வொப்பற்றோங்கும்
அறையினுட் பொருளையங்கைக் கனிபோற்கண்டதிசயித்தேன்
உறைதருமென்னைக்காணே னுரைத் தருள்செய்யுமென்றான். ௱௪௩

அதுவேநீயாய்விளங்கெனல்.

என்னைநான்காணேனென்றிங் கெடுத்துரைசெய்தமாணு
உன்னைநீகாண்பதற்கேழுபாதி யோடவத்தைமூன்றும்
பின்னமதாக்கிஞானப் பெருந்தகைப்பொருளாமுன்னை
அன்னியமின்றியெங்கு மகண்டமாய்க்காண்பாய்நீயே. ௱௪௪

(திரிபுடியையுரைத்தருள்கவென்று சீடன்வினவுதல்.)

அப்பனேயுரைத்தவாறிங்க கண்டமாயென்னைக்கண்டேன்
மெய்ப்படுஞாதாஞானஞேயம தெனமேலோர்கள்
செப்புவதாகுமந்தத் திரிபுடிநிலையுமுள்ளம்
கைப்படுகனிபோற்காட்டியருளெனக் குருவுஞ்சொல்வான். ௱௪௫

(வேறு—இஃதேஞானத்திரிபுடி யெனப்பிரித்துக்கூறுதல்.)

சுத்தஞாதுருசுகமதாய்க் காண்பவனுகும்
சுத்தஞானமேதுலங்கு ம்தறிந்திடுமறிவாம்
சுத்தஞேயமேசுக வுருவாகியேநிகழும்
சுத்தமாந்திரிபுடியிஃதெனச் சொல்வர்நல்லோர் ௱௪௬

(விடயத்திரிபுடி நீங்கிநிற்கவேண்டுமெனல்.)

அசுத்தமாகியதிரிபுடியதனைநீவிட்டுப்
பசித்தபோதுநேரிடுமதைப் பாரிலேற்றுண்டு
விசித்திரங்களாமொன்றையும் விழைந்திடாதோர்பால்
வசித்துநின்னுடலசைவற நிறுத்திவாழ்குவையே. ௱௪௭

(வேறு—விடயத்திரிபுடியீதென்று பிறித்துக்கூறுதல்.)

இந்தவகையின்றிஞாதுருவுஞ்சத்தாதி யெனும்விஷயமாய் விந்தநாமரூபமதாம், அந்தஞேயந்தன்னைஞானத்தாலருந்தி யாகாத வெம்பிறப்போடிறப்பறுவதாகிச் கொந்தவிழும்பூங்கொன்றை வேணியனைநீங்கிக் குவலயமெலாமலைந்து கும்பிக்கிரைதேடிச்,சிந்தையதுமிகவாடித்தியக்குறுவதாகிச் சேராதவிடமதனைச் சேர்ந்துபந்தமாச்சே. ௱௪௮

(வேறு—ஈஷணத்திரயங்களினற்பிறவி நீங்காதென்ல்.)

காதலித்தமனை யவளோர்பந்தமாகும் கருமஞ்செய்பிள்ளையுமோர்பந்தமாகும், ஏதமுறுந்திரவியமோர்பந்தமாகு மிம்மூன்றும் வெளிப்பந்தமாகுங்கண்டாய், ஆதாரமீயொன்றினுக்கொன்றதிகமா

கியகிலமெல்லாமாகி விரிந்தழிவதாகிச், தீதுறுவதாமிவற்றின்செய் கைவாளர் தியக்கமொடுமயக்கமேசெய்யுங்காணே. ௱சசூ

(ஈஷணாத்திரயநீங்கிற் பிறவிநீங்குமெனல்.)

ஆதலினாலிந்தமலப்பந்தமூன்று மகன்றிடுமேன்முத்திநிலை யைய ல்வேறில்லை, ஏதமாம்பவக்கடலில்வீழ்வதில்லை யிறைவனடிக்காளா ய்மெய்ஞ்ஞானியாகிப், போதமே பெறுமடியார் நேசம்பெற்றுப்பு ன்மையெலாம் போக்கியானந்தமோன, சாதகத்திலழுந்திசமரசசு பாவசாக்ஷாத்காரம்பெறுதலுண்மையாமே. ௱௫ய

(வேறு—அபக்குவர்களடையு மார்க்கமேதென்றுசீடன்வினவுதல்.)

உண்மையெனமொழிந்தருளுஞ் சற்குருவேபோற்றி யுத்தமர் களடைவதுவுஞ்சத்தியமேயாகும், எண்ணமிலாமத்திமருமதமர்க ளாய்நிற்குமெவ்வுயிருமிவ்வண்ண மடைவதெங்ஙனமெனில், மண் ணுலகிற்கண்மணியேயுன்னைப்போல்வார்க்கோர் மாத்திரையிறகை கனிபோலமாறுதலொன்றின்றித், திண்ணமதாய்த்தோன்றிடுமால் மற்றையபேர்க்கெல்லாஞ் செப்பம்வழிவேறென்றே சொல்லுவர்ந ல்லோரே. ௱௫க

வேறு—சரியையாதிமார்க்கத்தினின்று பிபீலிகாநியாயம்போல
அவர்களும் முத்தியடைவார்களென்றுகூறுதல்.

வேறாகச்சொல்வரென்ற மொழியங்கேட்பாய் மிகுதருமம்பரி தலொடுசரிதையாதி, கூறியதுமல்லாற்றீக்குணங்கள்போக்கிக்குத் திரமாம்பஞ்சபாதகங்கணீக்கி, ஆறுவகைச்சமையத்திலொன்றுபற் றியண்ணலடியெந்நாளுமன்பாயேத்தித், தேறிநின்றுசாதனமுந்தெ ளிவராகிற்றியக்கமிலாவந்நிலையுஞ்சேர்வர்தாமே. ௱௫உ

வேறு—உயிர்க்குணங்களனைத்தும் நீக்கவேண்டுமெனல்.

இத்தனையாந்துர்க்குணங்கள்விட்டுமெவர்க்கின்னமிழிவுதருவாச னைகளேதுவருமென்னில், உத்தமனேபற்றுமுயிர்க் குணங்களோர் மூன்றுமொருக்காலுமாகாதென்றுத்தமர்களுரைத்தார், சத்தமுதற் றத்துவங்களாந்தொண்ணூற்றாறிற்சடக்கருவி தள்ளுபடியறுபது தானாகும், மெய்த்திடுநற்கருவிகளோர் முப்பதின்மேலாறுமீளாத துயரளிக்குமுத்தியுங்கூட்டிடுமே. ௱௫௩

திருவருளுண்டாகில் முத்தியுண்டாகு மென்றுறுதிகூறுதல்.

இந்தவகைதத்துவத்திற் சீவருறுபோழ்திலே தருமுறுமிச்சையி னுலிறுமாப்புண்டாகிப், பந்தமுறுந்தீமைபுரிந்திறைவனருள்பெரு துபாழானவுலகமதிற்பலபிறப்பிலாழ்வார், வந்தவழிபோனவழிக ண்டறியமாட்டார்வல்விருளிலிடியுண்டுவாதனையாற்சாவார், சந்தத முநம்மாணை திருவருளைப்பெற்றுற் சாரலாமின்பநிலைசத்தியஞ்சத் தியமே. ௱௫௪

வேறு—இன்பதுன்பமற்றிருப்பதே சுகநிலையெனல்.

தோன்றுமுருவனேயமதைத் தோன்றுதொழிந்தபின்னருமே
ஆன்றவகமானு துருவை யறவேயொழிக்குமுன்னருமே
சான்றநீயேசாக்ஷியாய்ச் சாருங்கண்ணும்விடயமுமற்
றான்றுவிருப்பும்வெறுப்புமிலா தோங்குமதுவேசுகநிலையாம். ()

வேறு—சுகநிலை இத்தன்மையதெனப் புகழ்ந்துகூறுதல்.

சுகநிலையின்கருத்தெடுத்துச்சொல்லவுநீகேட்பாய் சுத்தமொடு சூனியமுமுப்பாழுந்தாண்டல், அகநிலை பெற்றனுபவமாய்மோக்ஷ மதாயிருத்தலறிவாகியசைவறவேயாகாயம்போலத், திகழ்நிலையா ய்ச் சத்தாகிப்பூரணமாய்நிற்றல்சித்தசலனந்தவிர்த்துசித்திரம்போ லொளிரும், மிகுநிலையாயுறுதலெனப்புகன்றிடுவர்நல்லோர்விளம்பு மந்தநன்னிலையே சிவநிலையென்றறியே. ௱௫௬

(ஒருமொழியின் பெருமையுரைத்தல்.)

ஒருமொழியேபலமொழிக்கு மிடங்கொடுக்குமென்ற வுண்மை யதே பெரிதாகுமுரைசெயநீகேட்பாய், ஒருமொழியே யுயிரெழுத் தாம் அகாமுடன் இகாம்ஒருமொழியே உகாமுடன் எகாம்ஒகாந் தான், ஒருமொழியே அஞ்செழுத்தும் ஓரெழுத்துமாகும் ஓரெழு த்தேதானுகு முலகமதற்கிடமாய், ஒருமொழியையினிதறிந்துபொ ருளுரைப்பதெங்கே யுத்தமர்க்குப் பணிபுரிந்தவ்வுட் பொருளை யறியே. ௱௫௭

(வேறு—ஒருமொழியைப்பகுத்துக்கூறுகவென்றுசீடன்வினவுதல்)

குருவினையன்றியொருமொழியில்லை கூறியபஞ்சத் வக்கரத்தை
மருவியபேர்க ளொருமொழி நன்றாய்மறப்பறவறிந்தனர்பொல்லா
த,திரிவுறுமனத்தாப்பொருடம்முட்டிப்பக்கறக்காணுறுதழிந்தார்
பாகுருமணியேயப்பொருளென்னுட்பதிந்திடவருளெனப்பகர்வான்

முன்னோர்கூறியமேற்கோளால்ஒருமொழியின்பொருளை யுணர்த்துதல்.

சொல்லாலேபயனில்லைசொன் முடிவறியென்றுரைத்த சூதை யுணரார்களதுசும்மாவென்றுரைப்பார், எல்லார்கண்ணிலுமிருக்கும் யாருமறியார்க ளெடுத்துரைக்குங்குருவருளிலாதறியமாட்டார், பல்லோருமறிவதற்குப் பாடுமெத்தவுண்டு பகலல்லவிரவல்லபாழிடமுமல்ல, வல்லார்களப்பொருளை யிராப்பகலற்றேங்கு மகத்தென்று மொழிவரதை மதித்துன்னுளறியே. ௧௱௯

(வேறு—ஒருமொழியேசர்வமுமெனல்.)

ஒருபொருளதுவே பஞ்சவக்கரமா யுண்மையதாகவேநிற்கும்
ஒருபொருளதுவே பதிபசுபாசமாகி யொன்றாகியேநிற்கும்
ஒருபொருளதுவே சச்சிதானந்த வொருபரமாகியேநிற்கும்
ஒருபொருளதனையுன்னனுபவத்திலுற்றுணர்ந்தின்புறுவாயே. ௧௱௰

வேறு.

சுழிமுனைதரிசிக்கவேண்டுமென்கிற யோகிகளையும், உடல்சித்தி
செய்யவேண்டுமென்கிற சித்தர்களையும் இன்னும்பலவாறாகிய
முத்திரைகளைத்தரிசிக்கவேண்டுமென்கிறஞானிகளையும்,

இகழ்ந்துகூறுதல்.

சித்தராயினோர் தியங்குறுசுழிமுனையதுவே
சித்தமென்றுரைத்ததனையே தெரிசித்துமாய்ந்தார்
மத்தவேடத்தர்சிலரந்த மார்க்கமும்விட்டுச்
சொத்தைதேகத்தினாசியினுனிகண்டுசேர்ந்தார் ௧௱௧

(வேறு—இதுவுமது.)

இந்தமுக்கலைகடம்மை யிடைநடுபின்னையக்கூறி
அந்தமுக்கலையேதாங்க ளென்றெணிச்சிலரழிந்தார்
பந்தமோகத்தாலிந்தப் பாழுடல்சித்திசெய்து
செந்திருவருள்பெறாமற் செத்தபேர்கோடாகோடி ௧௱௨

(வேறு—இதுவுமது.)

ஆதியாமிடகலையுமரிதானபின்கலையுமவற்றின்மேலே
சோதியாஞ்சுழிமுனையுஞ்சுகமாகுமிம்மூன்றுந்தொடர்ந்துநோக்கில்
சூதானநிறமூன்றுமுருமூன்றுங்குறிமூன்றுந்தோன்றுமென்றே
காதலித்திந்நெறியிருந்துசிலர்வீணேவாணாளைக்கழித்திட்டாரே. ()

(வேறு—இதுவுமது.)

நலமாகநாலும்பிள்ளை யுண்டோன்தானே நாதனுவானென்றமு றைகாணுமல், உலகமதிற்சிலமூவர்சிசுக்கடம்மையுரலதனிற்போட் டிடித்துக் கற்பமென்று, நிலைமைபெறமனமுவந்துதின்றுத்தின்று நீணிலத்திற் சாகின்முரையோவையோ, சலனமனமடக்கவல்ல மக னேயிந்தச் சண்டாளருறவைநீதவிர்த்திடாயே. கசுச

(இதுவுமது.)

கருநெல்லிவெண்சாரையென்றுரைத்த கற்பமதை யின்னதெ ன்றுகண்டுநெஞ்சம், ஒருமைபெறத்தெளிந்தறியாதனேகமூட்டுருற்ற மலமூத்திரமேயஃதென்றெண்ணி, விரகறுஞானியைப்போலத்தின முந்தின்றுமேதினியிற்சாகோமென்றிறுமாப்பாகிப், பரம்ஞானிக ளேவற்புரிகிலாதுபாழானறிவரையுநீபதராய்க்காணே. கசுரு

வேறு—அஷ்டவித கருமயோகங்களினல் மனமடங்காதெனவும், அஷ்டவிதஞானயோகங்களினல் மனமடங்குமெனவும், சாமானியமாகக்கூறுதல்.

கரும்மயோகமெட்டாகு மதனுற்சித்திகைகூடும்
பெருகுமதனுற்பெருமையுண்டாம் பெரியதடிப்புமுண்டாகும்
அருமையாகக்கருதொணுத தனுன்மனமுநிலையாதால்
உரியஞானயோகத்தாலுழலு மனமுநிலைத்திடுமே. ௱சுசு

ஞானயோகங்களிவையெனல்.

அரியஞானயோகவகை யெட்டாமதுவுமறையக்கேள்
தெரியுமியமநியமமுடன் றோசதனம்பிராணுயாமம்
பெரியபிரத்தியாகாரம் பினுந்தாரணை தியானத்துடனே
உரியசமாதியென்றுரைப்ப ரவற்றின்பொருளுமுரைத்திடக்கேள்.

இயமலட்சணம்.

காமமாதிபதின்மூன்று பகையுங்கடிந்துசரிதைவழி
நேமமாகச்செய்தறியார் நேசமகற்றிப்பந்தமற்றுப்
பூமியதனிற்பலதருமம் புரிந்துநின்றுதுகளறுத்தல்
ஏமமுறுஞ்சற்சீடனே யியமவகையென்றறிவாயே. ௱சுஅ

நியமலட்சணம்.

பரியுமந்தக்காமாதி பகையையொழிந்தபினுமதன்மேல்
பிரியமாகுநினைவைநன்றாய்ப் பிரித்துப்பிரித்துவிசாரித்து
விரியுந்துர்வாசனைவிடுத்து விரதம்புரிந்துமறைபுகல்சற்
கருமமியற்றிநிற்பதுவே கருதுநியமமெனத்தேர்வாய். ௯௬

ஆதனலட்சணம்.

தீராவுபாதியெழுவகையுந் தீரப்போக்கிஞானநெறி
நேரேயுசாவிநிலைநின்று நிகழ்த்துங்காணசுத்திசெய்து
போராவிடயந்தனிற்போகும் பொறியைப்பிடித்துத்தன்வசஞ்செய்
தோராதனத்திலிருப்பதுவே யுயராதனமென்றுணர்வாயே. ௯௭

(பிராணயாமலட்சணம்.)

புலனாமருபமதைப் பொசிக்கநினைக்குமொருமனத்தை
இலகவெளியிலெழாதகத்தே யிரியவடக்கியிழுத்திழுத்துப்
பலமதபச்செய்துயர்ஞானப் பார்வைமேலீடாகியென்றும்
நலமாயிருக்கு மதுதானேபிராணயாமமெனநவில்வார். ௯௮

புறமுறுவிடயபோகம் பொசித்திடுநெஞ்சந்தன்னை
அறநெறிவிடுத்துமெல்ல மெல்லவன்பினைப்பெருக்கித்
துறவினரேவல்பூண்டு தொடரபிமானம்போக்கும்
நெறியதேபிரத்தியாகார நிலையெனவறைவர்தாமே. ௯௯

தாரணைலட்சணம்.

சீரியவீசன்பாலுந் தெரிவிக்குங்குருவின்பாலும்
பாரியசிரத்தையோடு பத்திவிஸ்வாசஞ்செய்து
நேரதாய்விடயபோக வாதனையனைத்துநீங்கித்
தீரனாயிருத்தலானே திகழுந்தாரணையதாமே. ௧௦௦

தியானலட்சணம்.

விதியினிலன்பர்பூசை மெய்க்குருபூசையாற்றி
சதிசெயுங்காணநீக்கித் தற்சொருபத்தைநாடி
இதமுறக்கண்டேனென்னு மெண்ணமுநழுவவிட்டு
மதுவுண்டவண்டுபோல மன்னுதல்தியானமாமே. ௧௦௧

வேறு—சமாதிலட்சணம்.

அகவிடயம்புறவிடயமற நோக்குமறிவதுமேயங்கமாகி
இகபரத்துக்கெட்டாதவெறுவெளியாய்ச்சித்துருவாயிலகுமோனச்

சுகமதனைக்கைக்கொண்டு துரிசொன்றுமில்லாத துரியமாகித்
திகழ்வதுவேசமாதியெனச்செப்புவர்நான்மறையுணர்ந்தசீரியோரே

வேறு—ஞானிகளிலக்கணமுங் கருமிகளிலக்கணமுங்கூறுதல்.

அறிவிடத்துறைசீவர்களவதியிலழுந்தார்
வெறிமயக்குறும் விரதியர்தங்கடம்பொருளைப்
பறிகொடுத்தெமனாற் படுவார்துயரிந்தப்
பிறிவறிந்துநின்னாள் கழித்திடுவதேபெருமை. ௱௭௬

சற்சங்கத்தைப் பிரியாதிருக்கவேண்டுமெனல்.

உலகில்யாவருமுண்மையை மறந்ததினாலே
அலகிலாவுடலெடுத் தெடுத்தழிகின்றாரையோ
நிலைமையாகவிந்நிலமிசை நீயிருப்பளவும்
புலையொழிந்தமேலவரொடு பொருந்தியேவாழ்வாய். ௱௭௭

துச்சங்கநிவிர்த்திசெய்யவேண்டுமெனல்.

அண்டர்நாயகனடி தொழுமடியவர்தம்மைப்
பண்டையாஞ்சிவ மெனவெணிப்பணிசெயத்துணியா
மிண்டர்நீநர கடைவரென்றுரைக்குமெய்ம்மொழியைக்
கண்டுநீயவர்நண் பொழித்திடுவதேகாட்சி. ௱௭௮

உலகவிச்சையைநீக்கிமூர்த்தி தரிசனஞ்செய்யவேண்டுமெனல்.

ஆடுபாதனை யனுதினமிடைவிடாதவர்கள்
பாடியின்புறுஞ் சிவபதமடைவது திண்ணம்
தேடுமன்பிலார் நீநரகடைகுவரிதனை
நாடிநீயுல காசையைவிடுவதேநன்காம். ௱௭௯

சிவசொரூபமேகுருசொரூபமெனல்.

அப்பணிந்தசெஞ் சடையனேயருட்குருவுருவாய்
இப்பிறப்பிறப் பிடையுழல்மன்பதைக்கிரங்கிச்
செப்பமாகவந் தருளினனெனத்தெளியாதார்
எய்ப்பறுநர கெய்துவரெனப்பறையறைவாய். ௱௮௰

சிவதரிசனத்தால் சித்திமுத்தியுண்டாகுமெனல்.

கொல்லுங்கூற்றனைக் குரைகழலெடுத்துதைத்தருளும்
தில்லைவாணனைத் தினமுமுண்ணினைபவர்க்களவில்

செல்வமுங்கன சித்தியுமுத்தியுமுண்டாம்
வல்லநீயுமிவ் வகைபுரிந்தின்னருள்பெறுவாய். ௱அக

சிவனடியார்களை இகழலாகாதெனல்.

அக்குமாமணி யணிபவனடியிணை பணிவோர்
எக்குலத்தவ ராயினுமவர்களைச்சிவமாய்த்
திக்குநோக்கிநின் றேத்திடாத்தீமையரெல்லாம்
நக்குநாயிலுங் கடையெனப்புகலுநான்மறையே. ௱அஉ

இங்ஙனம் அனுக்கிரகித்தசற்குருவுக்கு கைம்மாறு காணேனென்று சீடனிரங்குதல்.

என்றுபற்பல மார்க்கமுமெடுத்தெடுத்தருளால்
நன்றுசீட னுக்குபதேச வுண்மையைநவின்றான்
பின்றையன்னவன் பொன்னடிவணங்கியெம்பிரானே
இன்றுநான்செய்கைம்மா றொறுங்கண்டிலேனென்றான். ௱அங

தானடைந்தஆனந்தாவேசத்தினுல் சற்குருவைத்துதித்தல்.

அப்பரைக்கரை சேர்த்திடுமடியிணை யிதுவே
செப்புதற்கொணுச் சின்மயரூபமுமிதுவே
ஒப்பில்லாததுமுண்மையதாவதுமிதுவே
தப்பிலாதடியேற்கருள் செய்ததுன்றயையே. ௱அச

தன்வாக்கையிகழ்ந்துகூறல்.

கழுதைகாவெனக்கண்டவர் விசேடமாஞ்சகுனம்
பழுதிலாதிதுவென்றெணிப் பாடியூர்க்கெல்லாம்
எழுதுமோலைவிட்டிருமணஞ் செய்தவற்கிசைவார்
இழிவதாகுமென்கூச்சலில் விசேடமொன்றிலையே. ௱அரு

தன்காயத்தையிகழ்ந்துகூறல்.

கட்டுக்காடையினிடம்வலம் பார்த்ததுகருதிக்
குட்டிமண்சுவர் கோடிபொன்னுமெனக்குறிப்பார்
பட்டிமாடுபோற்றிரியு மிப்பாழுடல்கண்டோர்
திட்டமாமொருகருமமுஞ் செயக்குறியாரே. ௱அசு

தன்நடையையிகழ்ந்துகூறல்.

கண்டுபோன்மொழிமங்கையர் கண்ணினிலாவாழும்
துண்டரோடுறவாகி நின்றுணையடிப்புணையை

விண்டநாயடி யேனினியாகிலும்விதியாய்த்
தொண்டர்மெய்ப்பணி செய்யுநல்லறிவுறத்தொகுப்பாய். ௱௮௭

வேறு—சகலமுநீயேயென்று சற்குருவைச்சரணடைதல்.

வித்திலாதெவையும்விளைந்திடச்செய்யும் விமலனேகமலநான்முகனைப், பத்தியாற்குறைவென்றவன்றலை யொன்றைப்பறித்ததல்லாலவற்குலகில், நித்தியகருமவிழாவறச்செய்த நிமலனேயன்பிலாவடியேன், சித்தினிபாதம் பதிந்திடவளித்ததாணுவே நின்சரண்சரணே. ௱௮௮

வேறு—சற்குருவைத்துதித்தல்.

ஈண்டளித்தவன்னையுநீ யெழிலானதந்தையுநீ
காண்டகுமென்கண்ணுநீ கண்மணிநீகாரணநீ
தீண்டுதற்கெட்டாத திருவழகனுநீபழமலையில்
ஆண்டவனேசற்குருவே யடியேனுன்னடைக்கலமே. ௱௮௯

வேறு—இதுமது.

காதலித்தறஞ்செய்வோர்க்குக் கருணையாங்குமாரதேவே
சாதனமுதிர்ந்தோர்க்கெல்லாஞ் சற்குருகுமாரதேவே
சூதகமனைத்துநீக்குஞ் சொருபனுங்குமாரதேவே
நாதனேயுன்றன்பாத நம்பினேனம்பினேனே. ௱௯௰

அபசாரக்ஷமை.

முன்னோர்களெடுத்துரைத்த முதுமறையருத்தந்தன்னைப்
பன்னூலும்பாராவேழை பதறியேசொன்னேனிந்தச்
செந்நூலின்கருத்தைஞானந் தெளிந்தவரிழிவுகூறு
திந்நூலும்பொருளையன்றி யின்றெனமதிப்பரன்றே. ௱௯௧

வேறு—வாழி.

முதுகிரிமேவுங்குமாரசற்குருவின் முருகவிழ்மலர்ப்பதம்வாழி
சதுமறைவாழிசைவமும்வீரசைவமும் வாழியெங்கோமான்
மதுமலர்ச்சரணம்வாழிமற்றவன் சீர்வழுத்துமெய்யடியவர்வாழி
இதவுபதேசவுண்மையா மிந்நூலிசைப்பவர் கேட்பவர்வாழி. ௱௯௨

உபதேசஉண்மை-முற்றிற்று.

பாயிரமுள்பட செய்யுள் (௨௱௨)



உ

சிவமயம்.

உபதேசஉண்மைக்கட்டளை.

இகபரங்களிலுள்ள ஆத்மகோடிகளுக்குள் தெய்வகதியாய் ஒவ்வொருவருக்குக்கிருதகர்ம புண்ணியபரிபாகத்தினால் இனிப்பிறவாதமுடிந்தபிறப்பில்இந்தத்தேகாதிப்பிரபஞ்சமுதலியவனைத்தும் தோன்றிநின்றழியுந்தன்மை ஏகதேசத்தில் காட்சிப்பிரமாணமாய் விளங்கும்.

அங்ஙனம் விளங்குவதைக் கருத்திலூன்றி விசாரிக்குமிடத்து இதனாற்றுன்பமேயன்றி இன்பமில்லையென்றும், இந்தசசரீரம்உற்பத்தி நாசமடைகின்றபடியால் இதனால்வருஞ்சுகதுக்கம்அனுபவிக்கிறவனே பசுவென்றும், நாமேதேகத்தையறிந்து உற்பத்திசெய்துக்கொள்ளக்கூடாமையினால் ஒருவரிருந்துதனுவாதிகளைக்கொடுத்துவினைவழியே யூட்டிவிக்கின்ற தன்மையினால் அவரேபதியென்றும். பதிக்கும் பசுவுக்குமுள்ள தாரதன்மியங்களைச்சற்றுந் தெரியவொட்டாமல் மறைத்துநின்றதேபாசமென்றும், இந்தத்திரிபதார்த்த நிச்சயமுந்தெரியாமல் அனாதியேமூலாஜ்ஞானத்தினால் பந்தப்பட்டுநின்று அந்தபந்தத்தினால் நால்வகையோனி, எழுவகைப் பிறவியிலும், எண்ணிறந்த சரீரங்களெடுத்து, தாபத்திரயாக்கினியினால்தகிக்கப்பட்டு, துக்கசாகரத்திலமிழ்ந்தினோமென்றும், சாமானியமாகச்சற்றே விவேகமுண்டாகும்.

அங்ஙனம் விவேகிக்குமிடத்து, இப்போதடுத்த தேகத்திலனுபவிக்குந்தாபத்திரயங்களை விசாரிக்கும்படிவரும், அங்ஙனம்விசாரிக்குமிடத்து, தேகமோநாமென்ற நிச்சயத்தினல் இத்தனை துன்பமும்வந்ததென்று தோன்றும், இந்தநிச்சயம் எதினல் வந்ததென்று விசாரிக்குமிடத்து, அவிவேகத்தினல் வந்ததென்று தோன்றும், அவிவேகம் எதினல்வந்ததென்று விசாரிக்குமிடத்து, மூலாஜ்ஞானத்தினல்வந்ததென்றுதோன்றும்.

இங்ஙனந் தோன்றுவது முற்பிறப்பிற் செய்தநிஷ்காம புண்ணியபலத்தினல் ஈஸ்வரானுக்கிரகம் பொருந்திச்சுத்தவாசனையோடுந்தோன்றிய மானிடப்பிறப்பிலன்றி மற்றைப்பிறப்பில் தோன்றாதபடியினல், இந்தமானிடசரீரம்பெற்ற அருமையும், இந்தச்சரீரம் மின்னல்போல விளங்கியழிகின்ற சிறுமையும், விசாரித்தறிந்து, இந்தச்சரீரநீங்குமாகில், எந்தச்சரீரம்வருமோவென்னும்பயத்தினல் இந்தச்சுத்தவாசனை பொருந்திய மானிடதேகத்திலன்றி வேறொரு தேகத்தில் சத்தியோன்முத்தி பெறக்கூடாதென்னுந் திடங்கொண்டு, இந்தத்தேகமிருக்கும்பொழுதே கருணாமூர்த்தியாகிய சற்குருவையடைந்து, அநித்திய அசுத்த துக்கலட்சணமாகிய சரீரதாப நீங்கி, நித்தியசுத்த சுகலட்சணமாகிய சொச்சொரூபத்தைப்பெற வேண்டுமென்கிறதாகத்தினல் உள்ளத்தில் விசாரக்குறிப்புண்டாகும்.

அந்தவிசாரமேலீட்டினல் மலைக்கட்படுந் தீவெப்பத்திலகப்பட்ட அந்தகன், மார்க்கந்தெரியாதுநின்று நீர்தேடுந்தன்மைபோலத் தாபத்திரயாக்கினியினல்வெந்து, இருள்பிணிப்பினல்மார்க்கந்தெரியாமல் அஞ்ஞானதாபந்தணிக்கும்பொருட்டு அறுதிசுபசொருபானந்த ஞானசாரியரைத் தேடுமிடத்து, இவனுள்ளக்குறிப்பையறிந்துஇவனுட்டோய்வறநின்ற சுகசொரூபமேகருணைகூர்ந்துசலமே ஆலாங்கட்டியாய்த்தடித்ததுபோலச் சதேகசீவன்முத்திஅறுதியாகியகுருலிங்கஜங்கமவடிவமாய்த்தடித்து சிவகாருணியம் - ஈசுரபத்தி - பாசவயிராக்கியம் - பிரமஞான மென்னும் நாற்குணங்களுங்குறைவின்றி விசேஷப்பிரசித்த வொழுங்காய்த் திருமேனிகொண்டெழுந்தருளிவரும்.

அதெப்படியென்னில், சூரியவிம்பம்எங்கும்வியாபித் திருந்தாலும் நிருமலமான கண்ணாடியில் விசேஷவிம்பம் பிரதிபலிக்கிற

துபோல சிவம் எங்கும் பரிபூரணமாயிருந்தாலும் சதேகசீவன்முத்தியறுதியாகியகுருலிங்கஜங்கமவடிவத்தில் அகமும்புறமும்விளங்கிமானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோலே மூன்றுகுறியாகியமானிடசொரூபத்தைக்காட்டிச் சற்சீடனைத் தன்மயமாகச் செய்விருக்கும்பொருட்டு, கிருபையினாலெழுந்தருளிவரும்.

அங்ஙனமான தரிசனங்கிடைத்தபோது, மோக்ஷவிருப்பங்கொண்ட அதிதீவரபக்குவமுள்ளசீடனானவன் அதிமோகியைப்போலநிறைந்தபத்தியங்கங்கொண்டு, மூன்றுருவையுஞ்சற்பாவகமாய்ப்பாவித்து தோத்திரவணக்கத்துடன் ஆப்த-அங்க-த்ரான-சற்பாவமென்னு நான்குபணிவிடைகளுஞ்செய்து, ஸ்ரீசற்குருவின் திருவுளப்பாங்காய் நடந்து, அவரது திருவருள் சுரக்குமளவும் எதிர்ப்பார்த்திருக்குமிடத்து, ஸ்ரீசற்குருகடாட்சவீக்ஷணியத்தினாலும, அவரது தரிசன பரிசனபாததீர்த்தப்பிரசாதமகிமையினாலும், சீடனதுமும்மலங்களும் மூன்றுவடிவிற்கரைந்து, இவனும்அந்தமுக்குறியில்லயமாகுமிடத்து உடல்பொருளாவிமூன்றும் குருலிங்கஜங்கமத்துக்கர்ப்பணமாகிசற்குருவுக்குஞ்சீடனுக்குங் கண்ணுமிமையும்போல் உடன்பாடானகையினால்அந்தப்பக்குவத்தில் இருவினையொப்பு மலபரிபாகம்வரும். அதனால்சத்தினிபாதம் பதிந்துதரும். அதனால் ஞானவிசாரமுண்டாம் அதனால் அகண்டபரிபூரணசொரூபசாக்ஷாத்காரநிரதிசயானந்தத்தை யென்றைக்கடைவோமென்கிற ஆவேசமும், கண்ணீர் ததும்பன்முதலிய எண்குணமும்; அரைநோக்கமுதலிய தசாவஸ்தைகளுமுண்டாகும் அதையறிந்துசோதிக்கும் பொருட்டு, சற்குருதினேதினேபரிக்ஷித்துவருவர் அங்ஙனம்பரிக்ஷிக்குமிடத்து, சீடனானவன் உலகத்தின்கண் ஒருவனதுவியாதியை நிச்சயித்துஅவிழ்தங்கொடுத்துத்தணிப்பதுபோல நமக்குஅனேகஜன்மவாசனையாய்வந்துள்ள சகலகேவலமாகிய பவவியாதியை நீக்கும் பொருட்டு, ஒருகைம்மாறிலும்விருப்பமின்றியகுருசுவாமிகள் நம்மைப்பரிக்ஷிக்கின்றது. இதனால்பின்புமாறுதலுக்கிடமில்லையென்றுநிச்சயங்கொண்டு, சுவர்ணமானதுபுடத்துக்குப்புடம்மாற்றேறுதல்போல்ஆசிரியர்பரிக்ஷிக்கப்பரிக்ஷிக்கத்தெளிவடைந்து, சமரசபத்தியங்கத்தினாய்சூரியசந்நிதானத்திலுருகுகின்ற வெண்ணெய்ப்பாவைபோல சற்குருசந்நிதானத்திசலின்று, நாளுக்குநாள்இருட்போதங்கரைந்துருகி, அஞ்லியஸ்தனய தேகத்தைவிட்டுநீங்காதசாயைபோலசற்குருதரிசனத்தைவிட்டுநீங்காதிருப்பன்.

அங்ஙனமான அதிதீவிரபக்குவமுள்ளசீடனுக்கிரங்கி அஸ்தமஸ்தகசையோகஞ்செய்து, திருவடிசூட்டி, பஸ்மகவசந்தரித்து, அந்தக்ஷணமேவிதி நிஷேதசூனியமாகியவேதாந்தசித்தாந்தசமரசபோதமகாவாக்கியமாகிய அதிசூக்ஷமரகசியார்த்தசிரவணதீபத்தை அவனதுபரிபாகமாகிய அகண்டதகளியில்பரபத்தியாகிய ஆச்சியநிறைந்தகருத்தின்வற்றியிலேற்றிஜயந்திரிவாகியகாற்றசைக்காதிருக்கும்படிமன்னமாகியதிரைச்சீலைகட்டுவித்து, சிட்டங்கட்டுதல்போல்அண்டபிண்டங்களில் மவுட்டியமலைவுபீடியாமலிருக்க, நிதித்தியாசனமாகிய தூண்டுகோலால் தூண்டித்தூண்டி அறுதிஅகண்டபரிபூரஞானந்தசாக்ஷாத்காரவனுபவத்திற்கரைந்துநின்று, சகசானுபூதி விளக்கமாய் இருந்தபடியேயிருக்கும்உபதேசஉண்மையை யனுக்கிரகஞ்செய்தருளினார்.

அங்ஙனமானசீடன் பெத்தத்திசையில்இருளில்சொரூபமிருந்துந் தோன்றாமல் மருள்வடிவமேசகசமானதுபோலசுவானுபூதியாகிய முத்தித்திசையில்மருட்சொருப மிருந்துந்தோன்றாமல் அருள்வடிவமேசகசமாகி அவ்வருண்மேலீட்டினால் ஞானானந்தத்தைப்பெற்றுமுடவனுக்குப்பிடிப்பு நீங்கிகைகால்நடக்கவந்தும், திரும்பவும் அது தொடராதிருக்கும்படி உல்லாசமாய்நடந்து பார்ப்பதுபோல இருட்பிடிப்புநீங்கி அருள்நடைநடக்க வந்தும், இவ்வருளில்அவ்விருட்பிடிப்பு வாராதிருக்கும்படி உருளுல்லாசத்தினால்அருள்நடைநடந்துபார்ப்பதுமன்றி, பெத்தத்திசையிற்றகித்த தாபாக்கினிமைக் கிருபாவீக்ஷண்ய ஜலத்தினாற்குளிர்வித்து, பேரானந்தசமுத்திரத்திற் குளிப்பாட்டிய ஸ்ரீசற்குருநாதனுடையதிருவடிப்பிரதாபத்தைப் புகழ்ந்து புகழ்ந்து தேகபதனபரியந்தஞ், சுவானுபூதியைப் பிரியாதிருக்கும்படிபலவாறாகத் தோத்திரஞ்செய்து, மவுட்டிய மலைவாகிய துர்வாசனைகள் தன்னைப் பீடியாமலிருக்க சகசானந்தப் பணியால் சீவன்முத்திசதுஷ்பாத முறைமையாகிய வனுபூதியடைந்து, விதேககைவல்யமுத்தியைப்பெறுவன்.

இங்ஙனமன்றி சற்குரு பரிக்ஷிக்குமிடத்து, பொற்பொடி மெழுகுண்டையில் மறைவதுபோல் மலபோதத்தினால்இருட்டிமிரத்தில் சிரவணாதிகள்மறைந்து, சீடனுக்குச்சொற்சுவையொழியபொருட்சுவைவிளங்காது வராகம்பூமியையுழுது தான்வேண்டியபொருளைவிட்டுவேறொன்றை நாடுதல்போல் தனதுசுகசொரூபானந்தத்

திற்கனுகூலமாகிய பொருளில் கருத்தமுந்தாமல் மல வாசனையால் சுகப்பொருள்சொல்லாய் விளங்குவதை ஆசிரியர் குறிப்பினாலறிந்து, அவனை இடைவிடாமல் குருலிங்க ஜங்கமப்பணிவிடைகளில் விடுத்துகுருதரிசனபரிசனபாத தீர்த்தப்பிரசாதங்களினால் அவனுக்கு இருவினையொப்பு முதலியபரிபாகம்வருவித்து, அத்தியாரோபயுத்தியும் அபவாதயுத்தியுமறிவிக்கத் தொடங்கி, முன்னர் அத்தியாரோபயுத்தியை யருளிச்செய்கின்றார்.

அஃதெப்படியென்னில்.

பழுதையிற்பாம்பும், கட்டையிற்கள்ளனும், கானலிற்சலமும் கிளிஞ்சிலில்வெள்ளியும்போல், சச்சிதானந்த சொரூபமாகிய தன்னிடத்தில் மூலாஞ்ஞானத்தினால் அத்தியாரோபமாய் முக்குணம் பிறந்தது. அவற்றுள்.

சத்துவக்குணத்தில் ஈஸ்வராதிகளும், இராசதகுணத்தில் சீவர்களும், தாமதகுணத்தில் ஆவரணவிக்ஷேபசத்திகளும், அபஞ்சீகிருதபஞ்சதன் மாத்திரைகளும், சூக்ஷ்மசரீரங்களும், பஞ்சீகிருதபஞ்சமகா பூதங்களும், ஸ்தூலசரீரப்பிரபஞ்சங்களு முண்டாயின.

இவற்றுள் பிரபஞ்சம் அனுபவிக்கப்படுகின்றது. சீவனனுபவிப்பவன், ஈஸ்வரன் சீவர்கள் கர்மானுசாரப்படி யனுபவங்கொடுப்பவர்.

ஆவரணசத்தியானது, ஈஸ்வரனையும் ஞானிகளையுந்தவிர மற்றைச் சீவராசிகளனைத்தையுந் திரிபதார்த்தநிச்சயந் தெரியவொட்டாமல் நாஸ்தி நபாதியென்னு மிருமுகத்தினால் மழைக்காலத்து அமாவாசைநிசியின் குமரியிருளைப்போல மறைந்துநிற்கும்.

விக்ஷேபசத்தியானது, பிறவிமுதல் துணைக்காரணமா யிருந்து முன்னர் விடயஞானத்தை விளக்கிப்பின்னர் ஞானசாதனமாயிருந்துசொரூபஞானத்தைவிளக்கிவைத்து அதுவும் அந்தசொரூபஞானத்திற் பிணஞ்சுடுதடிபோல லயமாகிவிடும்.

முற்கூறிய சத்துவத்திற் சத்துவம்பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்த ஈஸ்வரனுக்கு விஷ்ணுவென்றும், இராசதம்பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்த ஈஸ்வரனுக்குப் பிரமாவென்றும், தாமதம்பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்த ஈஸ்வரனுக்கு உருத்திரனென்றும்பெயர். இதுவேமாயை இந்தமாயையும்

அஞ்ஞானமாகிய * சமஷ்டிசீவகாரணசரீரமுங்கூடி ஈஸ்வரனுக்குக் காரணசரீரமாம்-இதுவே ஈஸ்வரனுக்குயவஸ்தை. இதையபிமானித்த ஈஸ்வரனுக்குச் சுழுத்திகு அவ்வியாகிருதனென்றும் பெயர்.

இராசதத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்தசீவர்களுக்கு ஞானநிஷ்டாபரரென்றும், இராசதம் பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்தசீவர்களுக்கு கர்மநிஷ்டாபரரென்றும் தாமசம் பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்தசீவர்களுக்குச் சோம்பல் நித்திரைமயக்கமுடையவர்களென்றும்பெயர். இதுவே அஞ்ஞானம்-இதுவே சீவகாரணசரீரம்-இதுவே சீவனுக்குச் சுழுத்திவஸ்தை இதையபிமானித்த சீவனுக்குப் பிராஜ்ஞனென்றுபெயர்.

தாமசத்தில் சத்துவம் பிரதானமாகும்போது அதிற்பிரதிபலித்த விக்ஷேபசத்தியினால் அபஞ்சீகிருதபஞ்சதன்மாத்திரைகள்பிறக்கும். இந்தஅபஞ்சீகிருத பஞ்சதன்மாத்திரைகளும் சீவர்களதுவியஷ்டி சூக்ஷ்மசரீரங்கூடி ஈஸ்வரனுக்குச் சமஷ்டி சூக்ஷ்மசரீரமாம். இதுவே ஈஸ்வரனுக்குச் சொப்பனவஸ்தை இதையபிமானித்த ஈஸ்வரனுக்கு இரணியகர்ப்பனென்றுபெயர்.

அஃதெப்படியென்னில்.

விக்ஷேபசத்தியின்காரியமாய் சத்ததன்மாத்திரையான ஆகாயம்பிறக்கும், அதில் பரிசதன்மாத்திரையான வாய்வுபிறக்கும், அதில் ரூபதன்மாத்திரையான தேய்வுபிறக்கும், அதில் ரசதன்மாத்திரையான அப்புபிறக்கும், அதில் கந்ததன்மாத்திரையான பிருதிவுபிறக்கும். ஆ தன்மாத்திரைகள்-ரு.

சத்ததன்மாத்திரை-சாத்துவீகசமஷ்டியுடன்கூடினது ஞானம்-இதற்குநிலைபுருவமையம், இராசதசமஷ்டியுடன்கூடினதுசமானவாய்வு-இதற்குநிலைநாபி, சாத்துவீகவியஷ்டியுடன்கூடினதுசுரோத்திரேந்திரியம்-இதற்கு நிலை செவி, இராசதவியஷ்டியுடன் கூடினது வாக்கு-இதற்குநிலை வாய், சத்தம் விடயம்.

---

* சமஷ்டியென்பது வனமென்றும் வியஷ்டியென்பது மரமென்றுமாம்.

ஞானம்-சமானவாய்வு-சுரோத்திரேந்திரியம்-வாக்கிந்திரியம்-சத்தவிடயம்-ஆறும் சத்ததன்மாத்திரையின்கூறு.

பரிசதன்மாத்திரை-சாத்வீகசமஷ்டியுடன்கூடினது மனம்-இதற்குநிலை கண்டம், ராசதசமஷ்டியுடன்கூடினது வியானவாய்வு-இதற்குநிலை சர்வசரீரம், சாத்துவீகவியஷ்டியுடன் கூடினது தொக்கிந்திரியம்-இதற்குநிலை தொக்கு, இராசதவியஷ்டியுடன்கூடினது பாணீந்திரியம்-இதற்குநிலை அஸ்தம், பரிசம் விடயம்.

மனம்-வியானவாய்வு தொக்கிந்திரியம் - பாணிந்திரியம் பரிசவியம்-ஆறும் பரிசதன்மாத்திரையின்கூறு.

ரூபதன்மாத்திரை-சாத்துவீக சமஷ்டியுடன்கூடினது புத்தி-இதற்கு நிலை நேத்திரம், இராசத சமஷ்டியுடன்கூடினது உதானவாய்வு இதற்குநிலைகண்டம், சாத்துவீகவியஷ்டியுடன்கூடினது சட்சிந்திரியம்-இதற்குநிலைநேத்திரம் இராசதவியஷ்டியுடன்கூடினது பாதேந்திரியம்-இதற்குநிலை பாதம், ரூபம்விடயம்.

புத்தி-உதானவாய்வு-சட்சிந்திரியம் பாதேந்திரியம்-ரூடவிடயம்-ஆறும் ரூபதன்மாத்திரையின்கூறு.

இந்ததத்துவங்கள் (உரு) ங்கூடி சீவசூக்ஷ்மசரீரமாம். ஞானத்தைககழித்து (உச) தத்துவங்களென்றுஞ்சொல்லுவர். இதுவேசீவனுக்குச் சொப்பனவஸ்தை,இதையபிமானித்த சிவனுக்குத்தைசதனென்றுபெயர்.

இனி ஸ்தூலசரீரமுண்டான முறைமை யெப்படியெனில்.

தாமசத்தில் தாமதம் பிரதானமாகும்போது அபஞ்சீகிருதபஞ்சபூதத்தினின்று பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்கள் பிறக்கும்,இந்தப்பஞ்சீகிருத பஞ்சமகாபூதங்களும் சீவர்களதுசமஷ்டிஸ்தூலாசரீரங்களுங்கூடி ஈஸ்வரனுக்குஸ்தூலசரீரமாம். இதுவே ஈஸ்வரனுக்குச்சாக்கிராவஸ்தை - இதையபிமானித்த ஈஸ்வரனுக்கு விராட்டென்றுபெயர்.

அஃதெப்படியென்னில்.

பஞ்சபூதங்களையும் பத்தாகச்செய்து அதுகளின்பாதியைநான்குநான்காய்ப்பிரித்து சுயாமிசத்தைவிட்டுஇதராமிசத்திற்கூட்டிப்பஞ்சீகரணப்படுதல் தூலபூதபௌதிகங்களாம்.

	ஆகாசத்தி லாகாசம்	வாயுவி லாகாசம்	தேயுவி லாகாசம்	அப்புவி லாகாசம்	பிருதிவி லாகாசம்
சாத்துவீக சமஷ்டி	ஞாதுரு மோகம்	மனம் தாண்டல்	புத்தி சங்கமம்	சித்தம் சுக்கிலம்	அகங்கார மயிர்
இராசத சமஷ்டி	சமான லச்சை	வியான ஓடல்	உதான சோம்ப	அபான உதிரம்	பிராண நரம்பு
சாத்துவீக வியஷ்டி	சுரோத்தி பயம்	தொக்கு உட்காரு	சட்சு நித்திரை	சிங்குவை வேர்வை	ஆக்கிரா ணதோல்
விஷயம்	சத்த துவேஷம்	பரிச நடத்தல்	ரூப தாகம்	ரச மூத்திர	கந்த மாமிசம்
இராசத வியஷ்டி	வாக்கு ராகம்	பாணி படுத்தல்	பாத பசி	பாயுர் உமிநீர்	உபஸ்தம் அஸ்தி

எப்படியென்னில்.

பிருதிவிற்பிருதிவு அஸ்தி, பிருதிவிலப்பு மாமிசம், பிருதிவில க்கினிசர்மம், பிருதிவில்வாய்வு நரம்பு, பிருதிவிலாகாசம் ரோமம், ஆ ரு-ம் பிருதிவின்கூறு.

அப்புவிலப்பு மூத்திரம், அப்புவிற்பிருதிவு உமிநீர், அப்புவி லக்கினிவேர்வை, அப்புவில்வாய்வு உதிரம், அப்புவிலாகாசம்சுக்கி லம், ஆ ரு-ம் அப்புவின்கூறு.

தேயுவிற்றேய்வுநித்திரை-தேயுவிற்பிருதிவுபசி-தேயுவிலப்பு தாகம், தேயுவில்வாய்வு ஆலசியம்; தேயுவிலாகாசம்சங்கமம், ஆ ரு-ம் தேயுவின்கூறு.

வாயுவில்வாயுவுஓடல், வாயுவிற்பிருதிவுபடுத்தல், வாயுவுலப் புநடத்தல், வாயுவில் தேய்வு உட்காரத்தல், வாயுவிலாகாசம் தாண் டல், ஆ ரு-ம் வாயுவின்கூறு.

ஆகாயத்திலாகாயம்மோகம் ஆகாயத்திற்பிருதிவுராகம், ஆகா யத்திலப்பு துவேஷம் ஆகாயத்தில்தேயுவுபயம், ஆகாயத்தில்வாயு வுலச்சை ஆ ரு-ம் ஆகாயத்தின்கூறு.

ஆ உரு-ங்கூடிஸ்தூலசரீரமாயிற்று. இவைசடமாகையினுல்ப ஞ்சதன்மாததிரைகளின் சாத்துவீககுணத்தினுலும் இராசதகுண த்தினுலும் இராசதகுணத்தினுலுமுண்டான சூக்ஷ்மசரீரமிருப்பத

ற்குப்பேரகஸ்தானமாம். இதுவேசீவனுக்குஸ்தூலசரீரம். இதுவே சீவனுக்குச்சாக்கிராவஸ்தை. இதையபிமானித்த சீவனுக்கு விஸ்வனென்றுபெயர்.

இனிநால்வகையோனியாவன.

அண்டசம்- உப்பீசம்-சுவேதசம்-சராயுசம்-ஆக ச-இவற்றுள் அண்டத்திற்பிறந்தது பக்ஷிபன்னமுதலியதுகள்-பையிற்பிறந்ததுதேவர்-நரர்-மிருகமுதலியதுகள்-வேர்வையிற் பிறந்தது-ஈபேன்மசகமுதலியதுகள்-நிலத்திற்பிறந்ததுமலைவிருக்ஷமுதலியதுகளாம்

சிலசாஸ்திரங்களில்சூக்ஷமசரீரத்திற்கு(யகூ) தத்துவங்களென்றுசொல்லியிருக்க (உச) தத்துவங்களாகச் சொல்லுவானேனென்னில்.

பஞ்சதன்மாத்திரைகளன்றி சூக்ஷமசரீரந்தோன்ற மாட்டாதாகையால் (உச) தத்துவங்களென்றுசொன்னதே பிரமாணம்.

அந்தக்கரணம் (ச) ம் ஞானேந்திரியம் (ரு) ம் ஆக கூ-ம்ஞானசத்தியாகையால் சாத்துவீக குணமென்றும்,வாயுக்கள் (ரு) ம் கன்மேந்திரியம் (ரு)ம்ஆக ய-ம கிரியாசத்தியாகையால் இராசதகுணமென்றும், ஞானேந்திரியங்களும் கன்மேந்திரியங்களும் ஒன்றோடொன்றுசேராமல் வெவ்வேறுறைகையினால் வியஷ்டியென்றுஞ்சொல்லப்படும்- ஆகையால் பஞ்சதன்மாத்திரைகளை விஷயமாகக்கழித்து அந்தக்கரணம் (ச)வாயுவுக்குள் (ரு)ஞானேந்திரியம்(ரு) கன்மேந்திரியம் (ரு)ஆக யகூ-ங்கூட்டிசூக்ஷமசரீரங்களென்றுசிலர்சொல்லுவார்கள்.

இவற்றின்கிரியைஎப்படியென்னில்.

ஞானம் - சமானவாயுவுடன்கூடி சுரோத்திரேந்திரியத்தை அதிஷ்டித்துசத்தவிஷயத்தையறியும். ஆகையால்வாக்குவசனிக்கும்

மனம்-வியானவாயுவுடன்கூடி தொக்கிந்திரியத்தையதிஷ்டித்துபரிசவிஷயத்தை யறியும். ஆகையால்பாணியிடுதலுமேற்றலுஞ்செய்யும்.

புத்தி-உதானவாயுவுடன்கூடி சக்ஷிந்திரியத்தையதிஷ்டித்துரூபவிஷயத்தை யறியும். ஆகையால் பாதம் கமனிக்கும்.

சித்தம்- அபானவாயுவுடன்கூடி சிங்குவையிந்திரியத்தை யதிஷ்டித்து ரசவிஷயத்தையறியும். ஆகையால்உபஸ்தம் ஆனந்திக்கும்.

அகங்காரம் - பிராணவாயுவுடன்கூடி ஆக்கிராணேந்திரியத்தையதிஷ்டித்து கந்தவிஷயத்தையறியும். ஆகையால்பாயுருமலவிசர்க்கஞ்செய்யும். இதுவேஇந்தத்தத்துவங்களின்கிரியைகளாம்இதை அத்தியாரோப யுத்தியென்றுசொல்லப்படும்.

இனிஅபவாதயுத்தியாவதேதென்னில்.

சொரூபமுதல் ஸ்தம்பபரியந்தம் உண்டான முறைமைப்படியே ஒன்றிலொன் றொடுக்கிச் சொரூபமாகக் காண்பதே அபவாதயுத்தியாம்.

இங்ஙனமாகில் அதுநீயாளு யென்னும் அத்துவிதானந்தசுகத்தைப்பெருவதெப்படியென்னில்.

நீயதுவானுயென்றுஆசிரியர் பிரகடமாகஉபதேசித்தருளு முறைமைப்படிமுன்னர்நீயென்னுஞ் சீவனுக்குண்டான சரீரத்திரயமும், அவஸ்தாத்திரயமும், அபிமானத்திரயமும், ஆகூ-ங்கழித்து அதிற்சேடித்துநின்ற சிவசாக்ஷியாகிய கூடஸ்த தரிசனஞ்செய்துபின்னர்அதுவென்னும் ஈஸ்வரனுக்குண்டான சரீரத்திரயமும், அவஸ்தாத்திரயமும், அபிமானத்திரயமும், ஆகூ-ங்கழித்து அதிற்சேடித்துநின்றஈஸ்வரசாக்ஷியாகிய பிரமதரிசனஞ்செய்து அப்பால் ஆளுயென்னும்பதார்த்தமாகிய ஆனந்தாதீதமே தற்சொரூபமாய் கூடஸ்தபிரமமென்னுந்துவிதபாவமுமிறந்து அத்துவிதானந்தத்திலமிழ்ந்து மதுவுண்டவண்டுபோற்சுகித்திருத்தலாம். இதுவேசனகன்-மாவலி பகிரதன்முதலிய பெரியோர்களனுபவித்த சகசானந்தானுபூதியாகும். இதைச்சற்குரு கடாக்ஷத்தாலுண்டாகும் சுவானுபூதிகண்டுகொள்க.

உபதேசவுண்மைக்கட்டளை

முற்றிற்று.



உ

சிவமயம்.

தோத்திரமாலை.

பலவகைச்சந்தங்கள்.

விருத்தம்.

சீராருஞ்செஞ்சடையார் செல்வவுனக்காளாகுஞ்
    சிந்தையாளர்
தாராருங்கொன்றையணி தாணுவேநின்னிருதா
    டலைமேற்கொண்டு
பேராருமானந்தக்கடல் படிந்தாரடியனேன்
    பேதையானேன்
காராருங்கயிலையில்வாழ்கற்பகமேயென்னையுநீ
    காக்கவேண்டும் (௧)

பெருந்தவத்தின் முயன்றவர்களெல்லாரும்
    பேரின்பத்தாசையாலே
வருந்தியுனைப்போற்றியென்றுமாறுதபுண்டரிக
    மலர்த்தாள்சேர்ந்தார்
அருந்தவமிலாவடியேனன்பிலேனின்பதத்துக்
    காசையாகிப்

பொருந்திலேனென்னையுமோர்பொருட்படுத்திப்
புண்ணியவென்,புன்மைதீர்ப்பாய் (உ)
பொய்யுலகவாழ்வதனை மெய்யாகவெண்ணிமனம்
பொருந்துநாளில்
ஐயமதையறுத்தருள வெவராலுமுடியாதென்
னையனேநின்
கையினற்சைகைசெய்துகருத்தறியாநாயேற்குக்
கருணையாலே
உய்யுமாறருளியது முன்னருளேயல்லான்மற்
றொன்றுமின்றே (ங)

பாழானமாயையினற் பட்டகதைமெத்தவுண்டு
பாழ்த்தநெஞ்சால்
வீழாதபடுகுழியில் வீழ்ந்தழுதுநெறியறியா
வீணர்தம்மைத்
தாழாதுதாழ்ந்தொருசாண்வயிறுவளர்த்திடுந் தொழிலே
தலைமையாய்க்கொண்
டாழாததீநரகுக்காளானேன்பரமேநின்
னருள்செய்வாயே (ச)

எல்லையிலாப்பரவெளியா யெக்காலுமோரியல்பா
யிருக்குந்தேவே
நல்லறிவாலடியவர்க ளெல்லாருநின்னடிக்கே
நாட்டமானர்
புல்லறிவாற்சிறியேனுன்பொன்னடிக்கன்பியற்றாது
புலம்புகின்றேன்
ஒல்லையிலென்பிழைகடவிர்த்தோங்காரத்துட்பொருளை
யுணர்த்துவாயே (ரு)

சிந்தையதுன்றிருவடியைச் சேராமற்பாழுலகைச்
சேர்ந்துபெற்ற
விந்தையதையடியேனல்விரித்துரைக்கமுடியாது
மெய்யொன்றில்லாப்
பந்தவிருண்மூழ்குமெனைக்கைவிட்டாலுன்னையன்றிப்
பாவிப்பாரார்
சுந்தரற்காய்ப்பரவையிடந் தூதுசென்றசுந்தரனே
துரியவாழ்வே (சா)

சுத்தபரவெளியென்னச்சொலக்கேட்டதல்லாமற்
சுருதிநேராய்க்
கற்றதிலைகற்றவரையாயினுங்கண்டறிந்துள்ளங்
கரைந்ததில்லை
பெற்றபயன்யாதுமிலை நின்னையன்றியெனைக்காக்கும்
பேரன்பாளர்
சுற்றியமாயொருவரிலை தற்பரனேநின்சரணஞ்
சரணமன்றே (எ)

நில்லாததேகமிதை நினையாகக்கருதிநெடு
நாளாயுண்மை
கல்லாதபுல்லியர்பாற்கலப்புண்டுகிடப்பேற்குக்
கருணைகாட்டிப்
பொல்லாதபிறப்பிலாழாமற்சிவனேமெய்ப்
பொருளையூட்டிப்
பல்லோருங்கண்டுவக்கப்பரகதிக்காளாக்குமுன்
பண்பதாமே (அ)

உண்மைநிலையுணராமலுன்னடியேனென்றுரைப்ப
துனக்கேயல்லால்
தண்மையறிவுடையோர்க்குமாகாதவார்த்தையே
தமியேனிங்குப்
பெண்மயக்கின்மூழ்குவதும்பேராசைகொள்வதுமெம்
பெருமானேயிம்
மண்மயக்கமெய்துவதுந்தீர்ந்திடநின்றிருவருளை
வழங்குவாயே (கூ)

சுத்தவடியார்களுன்பொற்றிருவடிக்கேயாளாகிச்
சுகங்கைக்கொண்டார்
உற்றதுணைமற்றியாவருமைப்போலுமடியேனுக்
குலகிலையா
கற்றதுவுங்கேட்டதுவுங்கையறவிட்டுன்றனருட்
கண்ணேகண்ணுய்ச்
சித்ததுநானுவதற்குஞ்சிற்சுகத்தைப்பெறுவதற்குஞ்
சிந்திப்பாயே (ய)

ஆராமைகொண்டவருக்கருள்சுரக்குமெனச்சுருதி
யறையக்கேட்டும்

போருஞ்சிறுத்தொண்டநாயனர்மனைவியோடு
பெருகுமன்பால்
சீராளனெருமகனையிருந்துமவன்கறிசமைத்துச்
சிவனே நின்பால்
நேராகப்படைத்தகதை கேட்டுநினக்கன்பியற்றே
னீசனேனே. (௰க)

வாசனையாலிந்தவுடல்வந்ததெனவுணராத
மடமையாலே
ஆசையினற்பெண்ணெடுமண்ணரிபதிக்காளாகி
யழியுநெஞ்ச
மோசமறியாமலிந்நாளாளவுமிருட்படுகுழியில்
மூழ்கிநின்றேன்
ஈசனேயினியேனுமுன்னடிக்காளாகும்வகை
யெண்ணுவாயே (௰உ)

அன்னையநீயப்பனுநீயண்ணலுநீகுருவுநீ
யாவுநீயே
கன்னலிலாங்கட்டியுநீ கடிமலரின்மணமுநீ
கனத்தவாசை
மன்னுமனவலியடக்கவல்லவனீயெனத்தெளிந்து
வழுத்துபாயம்
பன்னுவையேற்சிவனேயுன்னடியரடிக்கீழிருந்து
பாடுவேனே. (௰௩)

படிறுசெயுமுலகமதைத்திர மாகக்காண்பதுவும்
பாழாமிந்தக்
கடமதனைக்கற்கோட்டையாவெணிநாள்கழிப்பதுவுங்
கழியநெஞ்ச
மடமையைநீயறப்போக்கிக்குருலிங்கஜங்கமமாய்
மன்னுமூன்று
திடவுருவைப்பூசித்துநேசித்துநிற்கவருள்
தேவதேவே. (௰௪)

குணக்கடலேயருட்கடலேகுறையாதபவக்கடலிற்
குளித்தேயுன்றன்

இணக்கமதையுணர்ந்தறியா தில்லாதமாயைவசத்
தெய்தியிந்தப்
பிணக்குடிலைமெய்யென்று பெண்ணினல்லார்பொய்ப்போ
கப், பிரமைகொண்டேன்
கணக்கறியாதுழல்கின்றேனிம்மயக்கையொழிப்பதுமுன்
கடமையாமே. (௰௫)

அருளுடையாயழகுடையாயானந்தக்கடலுடையா
யழிவிலாமெய்ப்
பொருளுடையாய்மாமாயை வல்லிருளிலெந்நாளும்
புக்கிநிற்கும்
மருளுடையார்மனக்காட்டையறத்தறிக்குஞானவா
ளுடையாய்மோனத்
தெருளுடையாயோங்காரத்துட்பொருளைநாயேற்குத்
தெரிவிப்பாயே. (௰௬)

நித்தனேநின்மலனேநிர்க்குணனேநிர்ப்பயனே
நிலைமையான
முத்தியனேயுனைமறந்து மும்மலத்திலழுந்துமிந்த
மூடநெஞ்சால்
பெற்றபயன்யாதுளதென்றெண்ணியுனைப்பின்றொடர்ந்து
பிதற்றுவேனைச்
சத்தியனேகைவிடுத னின்னருளின்றன்மைக்குத்
தக்கதன்றே. (௰௭)

அருட்கடலிற்குளிப்பவரையன்பினலணைத்தெடுத்திங்
ககண்டஞானத்
தெருட்கடலிற்குளிப்பாட்டிப் பரானந்தவமுதூட்டுஞ்
செயல்போற்பொல்லாக்
கருக்கடலிற்புகாதெடுத்துள்வஞ்சமெலாமறவீட்டிக்
கருணையாலோர்
பொருட்படுத்தியென்னையுநின் பொன்னடிக்கேயடிமை
செயப், பொருத்துவாயே. (௰௮)

அன்னநடைப்பெண்ணுளுன்னடுவிருக்குநீயுமவ
ணடுவுளாவாய்

மன்னுமடியேனடுவுளிருவீருமிருந்தருளு
மாற்றமெய்யேல்
பின்னுமடியேனுமடி யார்நடுவுளிருக்குமருள்
பெருகவைப்பாய்
முன்னவனேநின்னருளின் றன்மையையென்னென்றெ
டுத்து, மொழிகுவேனே. (யகூ)

கண்மணியேகடைக்கண்ணே காதலித்தவடியார்க்குக்
காதலாகும்
உண்மணியேயுயர்க்குயிராயுறைமணியேயுன்னை விட்டிவ்
வுலகந்தன்னில்
பெண்மயக்கிலாழும்வஞ்சப்பேய்க்குரங்காகியமனத்தாற்
பேயாய்நின்றேன்
சண்முகனைப்பெற்றசிவசங்கரனேயெனக்கபயந்
தந்தாள்வாயே. (உய)

ஊரழகன்பேரழகனுடையழகன்விடையழகு
கனுளிர்பூங்கொன்றைத்
தாரழகனுருத்திராக்ஷமார்பழகனுன்னழகைத்
தனித்துநோக்கில்
ஆரழகுஞ்சிவனேநின்றிருவழகுக்கொவ்வாதென்
றறையும்வேதம்
ஓரழகுமில்லாதேனுன்னழகையென்னென்றிங்
குரைசெய்வேனே. (உக)

முத்தருக்கும்பெத்தருக்குமுறைவிடந்தான்வேறுகு
முதல்வனேநின்
பத்தருக்குன்பொற்கமலப்பதநிழலேயிடமாகும்
பாசநீங்காப்
பெத்தருக்குப்பதவிசுடு காடல்லாற்பேசுமிடம்
பிணவேறுண்டோ
சித்தசுத்தியில்லாதசிறுநாயேனின்னருளைச்
சிந்திப்பேனே. (உஉ)

சரியையெனுமொருமார்க்கந்தனிலேனுஞ்சார்ந்திலேன்
சார்ந்தநல்லோர்க்
கரியபணிசெய்துமிலேனின்னடியையருச்சிக்கு
மன்புமில்லேன்

உரிமனைவாழ்க்கையினி லுழன்றுழன்றுநாட்கழித்தே
னுடையாயுன்றன்
பெருமையடியார்களடிக் காட்படுவதெந்நாளோ
பேசுவாயே. (௨௩)

அரியதெனச்சுருதிசொ லுங்கிரியைநெறிக்கருமமெலா
மமையக்கேட்டும்
ஒருபொழுதாயினுமியற்றேனியற்றுமவர்தம்பதமு
முவந்துபேணேன்
கரியகுழன்மடமாதர்கலவியையேயனுதினமுங்
கருதிநின்றேன்
குருபரனேநின்னடியைக் கூடுநாளெந்நாளோ
கூறுவாயே. (௨௪)

யோகமெனவுரைக்குமொழிகேட்டதல்லாலொருகிமிட
மேனுமந்தப்
போகமனுபவித்தறியேனனுபவித்தயோகியரைப்
போற்றுகில்லேன்
சாகுமவர்தம்முறவே யுறவாகவெண்ணியெண்ணிச்
சலித்துநின்றேன்
ஆகெடுவே னுடையாயுன்னடைக்கலமேயல்லாதொன்
றறிகிலேனே. (௨௫)

ஞானமாம்பெரும்பேற்றைநாடியதையனுஷ்டித்த
நல்லோர்நெஞ்சில்
மோனபஞ்சாக்ஷரமாம்வித்தூன்றிஞானமுளை
முளையச்செய்வாய்
தீனனும்மனைப்பாசந்தனிலுழலுஞ்சிறியேனைத்
தேவர்போற்றும்
வானநாயகனேநின்பொன்னடிக்காளாக்குவதெவ்
வாறேசொல்வாய். (௨௬)

தந்தைதனைத்தாளறுத்தவெந்தைபிரான்றன்னைநீ
தனித்தாட்கொண்டு
சிந்தைகலங்காதவழிசெய்துபவம்போக்கியருட்
டேறலீந்தாய்

எந்தையேநாயடியேனேதுபிழைசெய்தாலு
மிரங்குவாயேல்
முந்தவினைவிடுத்தவிடஞ்சேர்வதற்கோரையமிலை
முக்கணனே. (உஎ)

நாதனேயுன்னைவிடுத்திவ்வுடலைநானென்று
நம்பிவீணே
பாதகத்துக்காளாகிப்பலபிறப்பிலாழ்ந்தழலும்
பாழ்த்தநெஞ்சின்
தீதகற்றியுன்னடியார்க்குற்றேவல்செயக்கருணை
செய்குவாயேல்
ஓதநீர்க்கடல்புடைசூழுலகிலுறுமோகமெலா
மொழிந்துபோமே. (உஅ)

அம்மையேயப்பாவென்றன் பிணல்வாழ்த்தினருக்
காண்டஞானச்
செம்மையாஞ்சிவபதத்தையுகந்தருளும்பெருமானே
சிவபிரானே
மும்மையாமலத்தழுந்தியிருவினைக்கேயாளாகு
மூடநாயேன்
இம்மையேமவுனசுகந்தனைப்பெறநின்றிருவுள்ளத்
தெண்ணுவாயே. (உகூ)

மன்னுமெனைமடிபிடித்துவலிவிலிழுத்திழுத்துள்ள
மறப்பையெல்லாம்
பின்னமுறச்செய்ததுவுமல்லாமலழிவுறுமிப்
பிணசரீரம்
இன்னமுந்தான்வாராதவழிபுரிந்தநின்பெருமை
யெவரேசொல்வார்
கன்னியுமைக்குருகியொருபுறமளித்தவருண்முகிலே
கருணைக்குன்றே. (௩௰)

தருமநெறியுணராமற்சந்ததமும்பொருட்டேடித்
தக்கவன்பர்
அருமையறிந்தேத்துகிலா வென்னையுமோர்பொருட்படுத்
தி, யன்பனுக்கித்

துரியநிலையறிவித்துச்சுத்தவடியாரடியிற்
றன்னைவைத்த
பெருமையனேயுன்னைவிடுத் தினிமேலுமொருவரைநான்
பேசுவேனோ. (௧௧)

நல்லோர்களுறவுசெயும்பசையிலாப்புல்லியர்பா
லசையேசூழ்ந்த
பொல்லாவென்னெஞ்சகத்தைத் திருத்தியுன்றன்பொன்ன
டியைப், புகழவைத்தாய்
எல்லாருங்கண்டுவப்பச் சனகன்முதனால்வருக்கீ
யிரங்கிமேனாள்
கல்லாலின்கீழமர்ந்தகற்பகமேமெய்ப்பொருளே
கயிலைவாழ்வே. (௧௨)

இத்தனைநாளிவ்வுலகிலிருந்துமுன்றனடியவரோ
டிணக்கமாகிப்
புத்திவழியறிந்தின்பப்போதநூலாய்ந்தவற்றின்
பொருளுஞ்சாவி
முத்திவழிதேடறியாமூடநெஞ்சாலலைப்புண்டு
மோசம்போனேன்
அத்தனேயினியேனுங்கைநெகிழவிட்டிடா
தருளுவாயே. (௧௩)

பொய்யானவுலகமதைமெய்யாகவெண்ணியதிற்
புகுந்தோர்பாற்சென்
றையாவென்றேத்தியவர்க்கிதங்கூறிவயிறுவளர்த்
தலையுமாற்றம்
பொய்யாக்கியென்னையுமோர் பொருளாக்கிப்புன்மையெ
லாம், போக்குவாயேல்
செய்யாவுன்றிருவடியையடைவதற்கிங்குரியவொரு
தேகமீதே. (௧௪)

சித்திரையென்றுரைக்குமொழிகேட்டதன்றியதன் பொரு
ளை, நியதிசெய்து
புத்தியினாலுற்றறியக்கூடாமலிருந்தவெனைப்
புனிதனாக்கி

அத்தநீயளவில்பாா னந்தவாழ்வதனிலனு
  தினமும்வாழ
வைத்ததற்கோர்கைம்மாறு புரியும்வகையறிகிலேன்
  மாசிலானே. (கரு)

சாதுசங்கச்சேர்க்கையினாற் சகலமொடுகேவலமுஞ்
  சாராதென்று
மாதவர்கள்பற்பலரு மறைநூலி லுரைத்தமொழி
  வழங்கக்கேட்டும்
பாதகமேபுரிந்துழலும் பாதகரோடுறவுசெயும்
  பண்பிலேனை
நீதனேயுன்னடியா ரொடுகூட்டியருளுவதுன்
  னீதியாமே. (கசா)

விண்ணவனேமுற்பிறப்பி னற்கருமம்பலமுயன்ற
  விமலருன்னைக்
கண்ணினாற்கண்டுவந்துஞ் சாலோகமாதிபதக்
  காட்சிபெற்றும்
மண்ணிலேபிறந்துமண்ணோர் மதித்திடமண்ணுண்டுமுற்று
  ரவ்வாழ்வெண்ணும்
எண்ணமேயெண்ணே னென்பவநோய்மாத்திரந்தொலைக்க
  வெண்ணுவாயே. (கஎ)

இருவினையாற்பவமெய்து மெனநெஞ்சத்திழுக்குநடை
  யின்மையாகித்
தெரிவையர்கள்புரிமயலாற்றிடுக்க மொடுநடுக்கமுற்றுத்
  தியங்குவாயேன்
கருவழியக்கடைக்கணித்துக் கண்ணுதலேயுன்னருளைக்
  காட்டவேண்டும்
பரசிவமேமறைமுதலே மலமறுத்தமெய்யடியார்
  பங்கில்வாழ்வே (கஅ)

சுருதியொருநான்குமுப விடதமோரெண்ணான்குஞ்
  சொல்லுமாற்றம்
விரிவுபெறக்குருவருளாற்கேட்டிருந்துமையமுற்று
  வீணாகத்

திரியுமெனக்கறிவருளி யழிவிலாச்சிவஞானந்
தெளியவைத்த
அருமையை யென்னென்றெடுத்து மொழிகுவேன்சிவமே நின்
னடியனேனே. (௩௯)

பொன்னுலகுந்தனைப்புரக்கும் புரந்தரனாதியவானோர்
பொறைமிகுந்தே
மன்னுமாதவமுனிவர்சித்தரிருடிகண்ஞான
மகிமைபெற்றோர்
இன்னவரெலாமிருக்க வென்னையொரு பொருளாக
வெண்ணியாண்ட
தென்னவதிசயம் புகல்வாய்பரமே நின்னருளியல்பை
யென்னென்பேனே. (௪௰)

வேறு.

பழையவடியாரெல்லாரும் பரனேயுன்னைப்பரவியன்பால் [றோர்
அழுதேயுள்ளங்குழைந்து குழைந்தலறி யுலர்ந்துன்னருள்பெற்
முழுதுமுணர்தலாதியாய் முன்னவருமெண்குணத்தோனே
இழுதையெனநின்றனைப் பணியேனென்னையிறுமாந்திருப்பேனே
புரங்கண்மூன்று நகைத்தெரித்த புனிதாவுனதுபுகழினையே
மருங்காய்ப்பாடுமன்பரெலா மாறாவின்புற்றிருந்தார்கள்
இரங்காமனத்தைநம்பிநம்பி யெவர்க்குமிடரேபுரிந்திந்நாள்
குரங்காய்த்திரிந்தேனென்செய்கேன் கொடியோர்க்குபாயங்கூறாயே.

ஆ ௪௨.

வேறு.

ஆதரவெனக்கிங்காரு மறிகிலேனின்னையல்லால்
பாதகஞ்செய்தபாவி பாவியுன்னடியிற்சேரேன்
ஏதமேபெருக்கியெல்லாம் யானெனதென்னவெண்ணும்
தீதினையகற்றியாளுஞ் சிவசிவதேவதேவே. (௧)

பெருந்துறைக்கதிபனான பெருமநின்னடியைப்பற்றித்
திருந்தியவடியாரெல்லாந் திருப்பணியியற்றிமூவா

அரும்பதமடைந்தாரந்தப் பேற்றினையடியனேனும்
பொருந்துதற்கருளவேண்டும் பூரணானந்தவாழ்வே. (௨)

சூத்திரப்பஞ்சகோசக் குகையினிலகப்பட்டையோ
பத்திசெய்யாமற்பஞ்ச பாதகந்தனக்காளானேன்
அத்தனேயடியேனுன்ற னடியிணைக்காளாதாகச்
சித்தமதிரங்கவேண்டுஞ் சின்மயானந்தவாழ்வே. (௩)

பத்தர்களெஞ்சகப்பூம்பங்கயமலரின்மேவும்
வித்தகவிமலாவுன்றன் மெய்யடிக்கன்புசெய்யும்
புத்தியுமில்லேன்ஞான போதகமில்லேனந்தோ
முத்தியெவ்வாறுசேர்வேன் முதல்வநீயருளுவாயே. (௪)

வஞ்சனைபுரியுநெஞ்சால் வருந்தினேனடியேனுன்னைத்
தஞ்சமென்றடைந்தேனையா தண்ணருள்புரிந்துதீராச்
சஞ்சிதக்குவையனைத்துந் தலையறமாய்த்துக்காப்பாய்
பஞ்சினிற்படுத்தீப்போலப் பவமெலாமொழிக்குந்தேவே. (௫)

திண்ணனார்வேட்டையாடித் திருந்தியமிருகபாகம்
உண்ணுநின்கண்ணினீர்தா னுறக்கண்டுதன்கண்சாத்தக்
கண்ணப்பாவென்றழைத்த காக்ஷிபோலடியனேன்சொல்
விண்ணப்பந்தனக்கிரங்கி வீட்டின்பமருளுவாயே. (௬)

அப்பரைக்குருவாய்க்கொண்ட வப்பூதிநாயனார்தம்
செப்பருஞ்சுகர்நால்வர்க்குட் சிறந்தவனிறக்கவப்பர்
மெய்ப்புரவெழுப்பப்பாடு மேன்மையைக்கேட்டவேழை
எப்படிபாடுவேனுன் னிணையடிக்கேலாதன்றே. (௭)

பாண்டியனடித்ததன்றி பரிவுறுவிசயன்றானும்
காண்டிவங்கொண்டடித்தான் கல்லெறிபத்தனாரும்
தாண்டிவந்தடித்தாரிந்தத் தகைமையாலவர்க்களித்தாய்
ஆண்டவாவென்றுகூவு மடியேற்குமருளுவாயே. (௮)

தாழ்ந்தவனுயர்ந்தோன்றன்னைத் தாங்குவனெனுஞ் சொன்மாறி
வீழ்ந்தசந்திரனைநீதான் விரிசடைமீதில்வைத்தாய்
சூழ்ந்துமாதவர்களேத்துந் தூய்யனேயுலகவாழ்வில்
ஆழ்ந்தவென்மனமுநின்று ளமைவுறவருளுவாயே. (௯)

உன்னையேயன்றியொன்று முணர்கிலாவருவினேனும்
அன்னையேயப்பாவென்றுள் ளழுதழுதுருகுவாரும்

வன்னமென்மலர்த்தாள்சேர்ந்து மாறுதவாழ்வுபெற்றார்
முன்னரேயுன்னைவிட்ட மூடனுங்கூடுவேனே. (௰)

அன்பர்நின்னடியாரெல்லா மரகரவென்றுபோற்றி
இன்புறுஞ்சுகத்தைப்பெற்று ரேழையேனென்புநைந்து
புன்புலால்யாக்கையோடுன் புகழினைநாவாற்சொல்லும்
தென்புகொண்டிலனென்செய்கேன் சிற்பரானந்தவாழ்வே. (௰க)

ஆக்குவாய்காப்பாய்கார்த்தங் கழிப்பாய்பின்னவற்றை யெல்லாம்
தூக்குவாயுயிர்கள்செய்யுந்துன்பமாம்பவமனைத்தும்
நீக்குவாய் நிமலனேயுன் னிணையடி வழுத்தாநெஞ்சைப்
போக்கியிங்கருளவேண்டும் பொய்யிலாமெய்யர்வாழ்வே. (௰உ)

[ஆ௲ருச.

வேறு.

உம்பர்கட்கரசே போற்றி யுமையிடப்பாகாபோற்றி
எம்பெருமானேபோற்றி யென்னுயிர்த்துணைவாபோற்றி
அம்பரவுருவேபோற்றி யாருயிர்க்குயிரேபோற்றி
தம்பிரானென்னையர்ளுந் தாணுவேபோற்றிபோற்றி. (க)

திங்கள்வேணியனேபோற்றி தீனரட்சகனேபோற்றி
மங்கையோர்பாகாபோற்றி மான்மழுதரித்தாய்போற்றி
பங்கயப்பாதாபோற்றி பழமறைக்கரியாய்போற்றி
எங்கணுநிறைந்தாய்போற்றி யேகனேபோற்றிபோற்றி (உ)

அண்டருக்கரியாய்போற்றியாலயமமர்ந்தாய்போற்றி
சண்டனையுதைத்தாய்போற்றி சஞ்சலமறுப்பாய்போற்றி
மிண்டரைக்காய்ந்தாய்போற்றி விளக்கொளிபோற்றிநீல
கண்டனேபோற்றியெங்கள் கண்ணுதல்போற்றிபோற்றி (ங)

அன்னையேயப்பாபோற்றி யாகமத்தலைவாபோற்றி
பன்னருமொளியாய்போற்றி பரகதியளிப்பாய்போற்றி
மன்னுநல்லருளேபோற்றி மாமறைப்பொருளேபோற்றி
என்னையாள்பவனேபோற்றி யீசனேபோற்றிபோற்றி. (ச)

முப்புரமெரித்தாய்போற்றி முத்தொழில்புரிவாய்போற்றி
ஒப்புறுஞ்செல்வாபோற்றி யொருசிவக்கொழுந்தேபோற்றி

செப்பரும்புகழோய்போற்றி சின்மயவொளியாய்போற்றி
இப்பிறப்பொழிப்பாய்போற்றி யெந்தையேபோற்றிபோற்றி. (௫)

கரியுரிதரித்தாய்போற்றி காலருத்திரனேபோற்றி
அரியயற்கெட்டாய்போற்றி யகண்டபூரணனேபோற்றி
திரிபுரதகனபோற்றித் தில்லையம்பலவாபோற்றி
நரிபரிசெய்தாய்போற்றி நம்பனேபோற்றிபோற்றி. (௬)

சோதியேபோற்றிஞானச் சுயம்பிரகாசாபோற்றி
கோதிலெண்குணத்தாய்போற்றிக் கொக்கிறகணிந்தாய்போற்றி
ஆதியேபரனேபோற்றி யகவிருடுணிப்பாய்போற்றி
நீதியேபோற்றிஅன்பர் நேசனேபோற்றிபோற்றி. (௭)

அம்மையையொழிப்பாய்போற்றி யரும்பதமளிப்பாய்போற்றி
மும்மலங்களைவாய்போற்றி முக்குறும்பறுப்பாய்போற்றி
மம்மர்நோய்தீர்ப்பாய்போற்றி மலைமகள்பாகாபோற்றி
செம்மலர்ப்பதனேபோற்றிச் சிவசிவபோற்றிபோற்றி. (௮)

தேவர்கடேவேபோற்றித் திருச்சிற்றம்பலனேபோற்றி
மூவர்கண்முதலேபோற்றி முச்சுடரொளியேபோற்றி
பாவனாதீதாபோற்றிப் பரமசிற்சொரூபாபோற்றி
மேவரும்பரனேபோற்றி விமலனேபோற்றிபோற்றி. (௯)

அருள்பொழிமுகிலேபோற்றி யருட்பிரகாசாபோற்றி
மருளொழிப்பவனேபோற்றி மாசிலாமணியேபோற்றி
தெருளுறுமொன்றேபோற்றி தெய்வநாயகமேபோற்றி
இருளறுத்தென்னையாளு மிறைவனேபோற்றிபோற்றி. (௰)

ஆ௨ சுசு,

வேறு.

வெண்பா.

அறிவுக்கறிவா யரும்பொருளதாகிக்
குறிவைத்திழுத்தகுருவே—முறியாகக்
கொண்டசிவமே கொடியேனெதிர்தோன்றிப்
பண்டைவினையொழியப்பார். (௧)

எடுத்தசனனங்க ளெத்தனையோவீணே
விடுத்துத்திரிந்தேன் விமலா-தொடுத்து
வருமென்றடுத்தேன் மகானுவேயென்னை
அருமைபுரிவாயறிந்து. (௨)

உன்னையறியே னுனக்குவமைசொல்லறியேன்
என்னையறியேனிதனுக் கென்செய்கேன்-மன்னுமுனை
விட்டதுவுநானேதான் வீழுடலைநம்பிநம்பிக்
கெட்டதுவுநானே நீ கேள். (௩)

கெட்டாயினித்திரும்பாய் கேடிலான்பொற்பாதம்
விட்டாலினிப்பிழைப்யாய் வேறுவாய்-முட்டப்
பகற்பொழுதையல் லென்னும்பாழ்நெஞ்சேயுன்றன்
விகற்பமெலாம்விட்டு விடு. (௪)

அல்லற்படுமுடன்மீ தாசையதுமேலீடாயத்
சொல்லைப்பெருக்காகத் தோன்றுமிதை-வெல்லக்
குருபாநீயல்லாற் குவலயத்தில்யாரே
அருள்பெருகச்செய்வா ரறை. (௫)

பொல்லாப்பிறவிதனக் கீடானபொய்யுலகை
வெல்லாவெறும்பாவி யானேனே-நல்ல
குணமெனக்குன்பேரருளாற் கூடுமோஞான
உணர்வெனக்கிங்காமோ வுரை.

பாடிப்படித்துணர்ந்துன் பான்மையறியாவேழை
தேடித்திரிந்ததனாற் றேறுவனோ-நாடிப்
பொருளுரைக்கும்புண்ணிய நின்பொன்னடிக்காளகி
மருளறுத்துநிற்குமதே மாண்பு. (எ)

ஊரறியேன்பேரறியே னுற்றதுணையறியேன்
சீரறியேனுன்னடியைச் சேரறியே-னீரணியும்
முன்னவனேநின்னடியை முற்றுணர்ந்தநாயேனுக்
கின்னமுண்டோபொய்யாசையே. (அ)

தற்பரமேசிற்பரமே தாணுவேநீயியற்றும்
அற்புதத்தையாரே யறிகுவார்-சொற்பொருளைக்
காட்டியெனையிழுத்துக் கையாலுமெய்யாலும்
நாட்டினுய்மோன தலம். (௯)

கன்னல்மொழிமடவார் கண்வலையிற்பட்டுன்னை
முன்னைவிட்டதல்லால் முழுதும்விட்டேன்-மன்னும்
வகையறியேனுன்னடியில் வாழவொட்டாதின்னும்
பகைசெயுமென்னெஞ்சமது பார். (௰)

அறியாமைதன்னா லமலாநின்றாளைக்
குறியாப்பிடித்தறிவைக் கூடேன்-பொறியின்
வழியையடைத்தால் மனமுமடங்கிநிற்கும்
அழுதுன்னருள்பெறுவேனுய்ந்து. (௰க)

உன்னுங்கருத்தறியே னோதுமுறையறியேன்
அன்னம்பசிக்கி லருந்துவேன்-மன்னும்
பொருளாகுந்தற்பரநின் பூங்கழற்காளாக
வருளாய்சிதம்பரத்து ளாய். (௰உ)

மாயாவுலகமதின் மன்னிப்பொருளிழந்து
காயாபுரிக்கோட்டை கைக்கொண்டே-தூயதாம்
உண்மைநிலைமறந்தே னுன்னடியைப்பூசிக்கும்
வண்மையருள்வாய் மகிழ்ந்து. (௰௩)

குருவுளத்தினுட்பொருளைக் கொள்ளையிட்டேனென்றன்
கருவழித்துமற்றதன்மேற் காமுற்-றுறையாவும்
இல்லாதெனவுரைத்தேனின் பமதுக்குடித்தேன்
எல்லாமெய்யல்லதில்லை. (௰௪)

சொற்பெரியதற்பொருளைத் தோற்றுப்பரிகொடுத்தே
அற்பவுடலைநிதமாதரித்துக்-கற்பாந்த
காலமிருக்கு மெனக்காரணனேயெண்ணியுனை
ஞாலந்தனின் மறந்தேனுன். (௰௫)

பூட்டிலாக்கோட்டையினுட் பொல்லாமணிவிளக்கை
நாட்டும்வகைதேர்கிலாநாயானேன்-சேட்டையெலாம்
பாழாகவேண்டிப் பராகுருவேயென்னெஞ்சம்
தாழாதுன்பொன்னடியிற்றான். (௰௬)

புலையுங்கொலையும் பொருந்தவொழித்துன்
தலைநிற்கவென்னாற்றாமோ-மலையுமன
வாதனையைப்போக்கும் வகையெற்கருள்செய்குரு
நாதாபரிபூரணா. (௰௭)

தத்துவத்தைநன்றாய்த் தனித்துப்பிரித்துரைக்கும்
வித்தகனேயுன்னடிக்கீழ்மேவினேன்-மெய்த்த
உனக்கிணையாவா ரொருவருண்டோவடியேன்
மனக்கவலைமாற்றுவதுன்மாண்பு. (௰அ)

முன்னறியேன்பின்னறியேன் மூடனேனிவ்வுலகப்
பின்னலிலேகட்டுண்டுபேயானே-னின்னமுமித்
தேகப்பொதிசுமக்கச் சிந்தைசெயேன்றெய்வமே
ஆகம்பிரித்திங்கருள் (௰௯)

செத்தபிணத்தருகிற் சேர்ந்தினிமேற்சாம்பிணங்கள்
கத்திக்கதறுங்கணத்தறியே-னித்தலத்தில்
சாகாதிருக்கவரஞ் சம்புவேநீயளிக்கில்
ஆகாதோ சொல்வாயமர்ந்து. (உ௰)

வேதப்பரிநடத்து மெய்யனேவேலவனார்
தாதையேநாயேற்குந்தாதையே-யோதும்
முடிவறியேனின்பாதமுண்டகத்தே னுண்ணும்
படியுன்றிருவருட்கண்பார். (உக)

சுந்தரற்குத்தூதுசென்ற சுந்தரனேநாயினேன்
பந்தமறுத்தல்வெகுபாரமோ-வுந்தன்
திருவடிக்கேயாளாகுந் தீனனேற்கின்னும்
கருவிருப்பதாகாதுகாண். உஉ

துன்பந்துடைத்துத் துடிப்படக்கிமாறாத
இன்பந்தருமவனை யெய்துவார்-வன்பிங்
கணுகாதுநம்மையகமேயுலகை
அணுவாயவமதிக்கலாம். உங

உன்னையொருபொருளா யுன்னுவாயுன்னுளே
மன்னுபொருள்வேறாய் மதித்திடுவா-யென்னை
இருபொருளுமொன்றா யிருப்பையெனி னெஞ்சே
சரியாமிருவருக்குந்தான். உச

அத்தனடியையனுதினமுஞ்சிந்திக்கில்
சித்தஞ்சிவமாய்த்திகழுமே-முத்திப்
பரசுகமுமேவும் பரிவாகநெஞ்சே
குருவருளூ மாகுங்குறி. உரு

கூற்றைக்கடக்கக் குருவருளேயன்றிவெறும்
காற்றைத்தடுக்கிற்கடப்பரோ- கூற்று
வருவதற்குமுன்னரேவன் னெஞ்சேயிந்தப்
பரிவுடலினாசை விடப்பார். ௨௬

பெரியோர் துணையாற் பிறப்பின்பிணிபோம்
விரியாமானமொடுங்கும் வீணே திரியாமல்
ஐயா விமலாவானே யவரேவல்
செய்யாமற்செய்ய வருட்செய். ௨௭

பாழுடலையாதரித்துப் பன்னாளுநெஞ்சமே
தாழும்வர் தம்மடியிற் றாழாமற்-சூழும்
துணையருளேயென்றெண்ணிச் சோர்வுறாதெந்தை
இணையடியைப் போற்றியிரு. ௨௮

உள்ளும்புறமு மொருமையிலாப்பாவியேன்
கள்ளந்தவிர்த்தருணீ நாட்டுவாய்- துள்ளி
எழுவேன்விழுவே னெழுந் துள்ளுருகி
அழுவேன் கருணாலயா. ௨௯

முப்பாழும்பாழாய் முதற்பாழ்வெறும்பாழாய்
அப்பாலுக்கப்பானின்றாடுவான்-மெய்ப்பாகும்
ஒண்முகமைந்துள்ளானு கந்தவரைநெஞ்சமே
மண்முகத்திற் சேரான்மதி. ௩௰

காற்றுத்துருத்தியெனக் கேட்டுங்கடையனேன்
சோற்றுத்துருத்தி சுமப்பேனோ-ஊத்தைச்
சடமதனைவேறாக்கித் தற்போதம்போக்கித்
திடமுறுத்தலுன்றன்செயல். ௩௧

நில்லாதித்தேகநெடு நாளிருக்கவிச்சை
புல்லாதொழிந்தென்புலைநெஞ்சே-வல்ல
குருவின்றிருவருளைக் கூடுவாயாகில்
அரியபதவி பெறலாம். ௩௨

எப்போது முன்னை யிடையறாதேயிருந்து
முப்போதும்பூசை செயாமூடனே-னெப்போதும்
பூசிக்கவென்றாலென் பொல்லாதநெஞ்சநினை
நேசிப்பதில்லையையனே. ௩௩

கானனீராயுலகைக்கண்டு வக்கச்செய்தரிக்கட்
பானல்லா ரிச்சைவெறும் பாழாக்கிக்-கோனேநீ
ஆட்டிடையன் போலவடியேனைமேய்த்தின்ப
வீட்டிலடைக்கவிரும்பு. ௩௪

உலகப்பேராசை யொழியுமோநாயேற்
கிலகுமறிவுதயமாமோ-நிலவுமது
பொய்யென்றென்றறிந்து மறப்போக்காகிருந்திடுமிவ்
ஐயமதையையாவகற்று. ௩௫

விட்டபொருள தனைமேவுவனோநாயடியேன்
பட்டப்பகலாகப்பார்ப்பேனோ-விட்ட
பொருளெனக்குங்கிட்டுமோ போதகுருவே
அருளெனக்கிங்காமோவறை. ௩௬

கண்ணையசைத்தெனக்குக் காட்டினான்கண்ணொளியே
விண்ணிலொளியாய் விளக்கினான்-விண்ணதனை
நாயேனும்பார்த்து மலைக்குநாயைப்போலப்
பேயாயலைந்தேன்பிரிந்து. ௩௭

வந்தகுருபரனை மானிடனென்றேமதித்த
மந்தமதிக்கென்செய்கேன் வள்ளலே-முந்த
உரைக்குமொழிகேட்டு முன்னாதிருந்தேன்
திருக்கறுக்வேண்டுந்தெரிந்து. ௩௮

இவனேசிவமுமவனேயருளும்
அவனேயுலகமனைத்து-மவனேதாம்
ஆனவரேசொன்னா லவரேகுருவாகும்
நானவனாய்வாழ்குவேனங்கு ௩௯

தானந்தவமறியேன் றற்பரத்தைநாடறியேன்
ஞானமறியே னென்னைநானறியேன்-மோனம்
பெறுந்தன்மையுண்டோ பிரானேபவமும்
அருத்தண்மையுண்டோ வறை. ௪௰

இருளாமென்னெஞ்சை யிழுத்துவெளியாக்கி
மருளாவகைபுரிந்த வாறே-தெருளாகச்
செய்யுங்குருவே சிறியேன்பிறவியொழிந்
துய்யும்படிநீ யுரை. ௪௧

கூடிப்பிரிந்திருந்த கொள்கையறியாமல்
தேடித்திரிந்து திகைத்தேனே-நாடியுனைப்
பார்க்கவருளிப் பரனேபிரிவறுத்துச்
சேர்க்கைநினது செயல். சஉ

சாதனையில்லாமற் றாணிதனிற்பலவாம்
வாதனைகளாலே வருந்தினே-னாதா
வருமோபெருவாழ்வு மாறுதவின்பம்
தருமோவடியேன் றனை. சஙு

அழியும்வாழ்வை யாராய்ந்துபாரா
திழிவையுயர்வாக வெண்ணிக் கழியும்
உருவத்தைமெய்யென் றுகந்தாய்மனமே
பருவந்தளர்வதுநீ பார். சச

ஈட்டும்பொருளாசை யென்றுமொழியாது
நாட்டிலலைந்துழலு நாயானேன் றேட்டம்
ஒழித்தற்கறிகிலே னுத்தமனேயுண்மை
வழுத்தற்கருளுவதுன் மாண்பு. சரு

ஆனந்தமோன மமையுமோநற்றரும
தானந்தவமினிதிற் றங்குமோ-மோனக்
குருவேகருணைக் குறைபடாஞான
உருவேயடிமை யுளத்து. சசு

ஆக்கைநிலைமை யறியாமடமையேன்
றீக்கைநிலைமை தெளிவனோ- மோக்கம்
அருளும்பரகுருவே யன்பிலேனெஞ்சம்
தெருளும்படியருணீ செய். சஎ

சின்மையனேதன்மையனே சிற்பரனேதற்பரனே
நன்மையனேசிற்சத்தி நாதனே-புன்மையேன்
பொல்லாமடமையறப் போக்கிநீகாத்தருள்வாய்
எல்லா முனதுசெயலே. சஅ

பத்திகுறைந்து பாதவிக்குநாயேனை
எத்திறமுக்கிலஃ தேற்காதோ-முத்தி
அடையும்படியருளு மத்தாவிமலா
கடையன்பவமொழியைக் காண். சகூ

சித்தம்பிரகாச மாகுமோசிற்பரனே
தத்தம்பொருளழியத் தான்வருமோ-நித்தனே
என்றைக்குனைச்சேர்ந் திரண்டற்றயானந்தத்
தொன்றிநிற்பேனுசை யுளேன். ருய

பொல்லாக்கொலையும் புலையுங்களவுமே
கல்லாப்பெருங்கயவ னானேனே-நல்லாய்கேள்
கற்றற்பொருளாகுங் காணுவேனென்னை மயல்
உற்றற்றெருள்வருமோ வோது. ருக

உனக்குமெனக்கு முறவாம்பரனே
சினக்கொருமையா னுன்னைச் சேரேன்- மனக்கவலை
நீக்கியருளிநிமலனே மும்மலத்தைப்
போக்குமுபாயம் புகல். ருஉ

அகந்தையபிமான மதமாசைகுரோதம்
இகந்தவர்கள்சேர்வதுவே யின்ப-முகந்துநீ
இத்தனையுமாகாதென் றெண்ணுவையேநெஞ்சமே
அத்தன்கருணை நமக் காம். ருங

கூடவறியேன் குணமறியே—னடி
நிமலநின்னன்பர் நிகழ்த்தும்பணிபுரிய
அமலனேகண்பார்த் தருள். ருச

ஆறாயிரம்.

எந்நாட்கண்ணி.

அத்தியுரிபோர்த்தருளு மண்ணலார்க்கென்குறையைப்
பத்திபுரிநெஞ்சே பகருநாளெந்நாளோ. க

அந்தித்திருநடன மாடுவான்பொன்னடியைச்
சந்தித்துநீபோய் தரிசிப்பதெந்நாளோ. உ

அந்திபகலில்லா வகண்டபூரணவொளியையைச்
சிந்தித்துநெஞ்சேநீ சேருநாளெந்நாளோ. ங

அங்கையினெல்லிக்கனிபோ லண்ணலருளுணர்ந்து
மங்கைநல்லார்மோகமயக் கொழிவதெந்நாளோ ச

ஆதியந்தமின்றி யமர்ந்தவெளியில்
ஆதாரவாய்நீபோய மருநாளெந்நாளோ ௫

ஆக்கைபிரியுமுன மண்ணலாரைந்தெழுத்தின்
தீக்கைபெற்றுநெஞ்சே திகழுநாளெந்நாளோ ௬

எங்குமவனுயிருக்கு மியல்பறிந்து
துங்கமுறுநெஞ்சே துதித்திடுவதெந்நாளோ ௭

அடியாருளத்தி லமருவான்பாதக்
குடியாயிருந்து குலவுநாளெந்நாளோ. ௮

இருளையறுத்தருளு மீசனார்தாளில்
மருளையறுத்துநெஞ்சே மன்னுநாளெந்நாளோ. ௯

அந்தக்கரணமறநோக்குவானடியே
சொந்தமாவெண்ணிக் சுகிக்குநாளெந்நாளோ ௰

கொடுத்தவுடல்தனைக் கொள்ளுவான்றுளில்
விடுத்ததைநெஞ்சே விளம்புநாளெந்நாளோ. ௰௧

அகவிருளைநீக்கியரு ளத்தன்வரவுதனைச்
சுகநிலையாய்க்கண்டு துயரொழிப்பதெந்நாளோ. ௰௨

மதுரைவளநாட்டில் மணசுமந்துநின்றோன்
பதமலரைநெஞ்சேநீ பார்க்குநாளெந்நாளோ. ௰௩

எல்லாமுந்தானு யிருப்பானியல்பறிந்தென்
பொல்லாதநெஞ்சே புகழுநாளெந்நாளோ. ௰௪

காணுதகாட்சிபெறக் காளத்திநாதரடி
பேணுதநெஞ்சே பிழைக்குநாளெந்நாளோ ௰௫

விட்டுத்துறந்தனைத்தும் வேதாந்தமார்க்கமதைக்
கிட்டாதநெஞ்சேநின் கேடொழிவதெந்நாளோ ௰௬

இரவுபகலில்லாவிட மதனைக்கண்டு
பரிவுபெறுநெஞ்சே பரவுநாளெந்நாளோ. ௰௭

அக்கறுகுகொன்றைதும்பை யம்புலியுஞ்சூடுகின்ற
சொக்கர்திருத்தாளிணையிற் ரேயுநாளெந்நாளோ ௰௮

அப்பணியுஞ்செஞ்சடையானை யனுதற்கண்ணுடையான்
செப்புரியசெல்வனிடஞ் சேருநாளெந்நாளோ. ௰௯

அண்டர்தொழுந்தேவ னரியசுடுகாட்டரசன்
சண்டனுக்குச்சண்டனிடஞ் சாருநாளெந்நாளோ ௨௰

அச்சனவன்பிச்சனவ னன்னையவனப்பனவன்
இச்சைதருமடியை யெய்துநாளெந்நாளோ ௨௧

அத்தன்பெருந்துறையா னழலேந்துங்கையுடையான்
சித்தனவன்பதத்திற் சேருநாளெந்நாளோ ௨௨

அம்பொன்மலைவில்லா னண்ணல்மலைமருகன்
செம்பதுமத்தாளிணையைச் சேர்ந்துறுவதெந்நாளோ ௨௩

ஆருமறியாமலென்னை யங்கையார்சைகைசெய்த
சோரனவனிடம்போய்த் தூங்குநாளெந்நாளோ ௨௪

ஆக்கைமிகவாடி யங்கபங்கமானவெனைத்
தூக்கியெடுப்பானைத் துன்னுநாளெந்நாளோ ௨௫

ஆதிநடுவந்தமில்லா வண்ணலார்பொன்னடியில்
சாதிகுலந்தடியேன் சாருநாளெந்நாளோ ௨௬

ஆடிபதிற்றன்னிழலென் றுய்ந்தறியாய்போல
வோடியிளைத்தோயா துணையணைவதெந்நாளோ ௨௭

ஆலைக்கரும்பதுபோ லன்னைகருக்குழியில்
சாலக்குலைவேன் றளர்வறுப்பதெந்நாளோ ௨௮

ஆகாப்பெரும்பாவி யையனடிபரவி
சாகாக்கால்கண்டு தனித்துநிற்பதெந்நாளோ ௨௯

தாபத்திரயந் தகிக்கச்சகிக்கவொணா
ஆபத்தகற்றியருள் பொழிவதெந்நாளோ ௩௰

இந்திரற்குமெட்டா விணையடியேன்சென்னிவைத்த
சுந்தரன்சீர்பாடித் துகளறுப்பதெந்நாளோ ௩௧

இருக்குமுதனல்வேத மின்னமறியாத்
திருக்கழலைக்கண்டென் றிருக்கறுப்பதெந்நாளோ ௩௨

இருந்துநினைப்பேனிருள றுக்கப்பூந்தாள்
வருந்தவந்ததேசிகனை வாழ்த்திநிற்பதெந்நாளோ ௩௩

கைகாட்டியென்னையவள் காதல்கொளவிசைத்து
மெய்காட்டுவானடியை மேவுநாளெந்நாளோ ௩௪

கண்மூடிக்கண்டிறந்தக் கடுவெளியுளானிடம்போய்
விண்மூடிஞானவிண்ணில் மேவுநாளெந்நாளோ ௧௫

கண்மாயைக்காட்டிக் கடியமயல்பூட்டும்
பெண்மாயைவிட்டிப் பிழைக்குநாளெந்நாளோ ௧௬

சத்தனவன்சித்தனவன் சமரசானந்தனவன்
முத்தனவனென்று முறையிடுவதெந்நாளோ ௧௭

ஊருமிலான்பேருமிலா னுற்றூருறவுமிலான்
ஆருமிலானென்னை யணையுநாளெந்நாளோ ௧௮

எங்குநிறைந்தபரி பூரணனைக்கண்டேத்தி
அங்கங்குழைந்துபதைப் பற்றிருப்பதெந்நாளோ ௧௯

ஆவிக்குளாவியாமத்தன் றிருவடியைப்
பாவித்துநின்று பவமொழிப்பதெந்நாளோ ௨௰

வாயைத்திறவா மவுனகுருபரனை
ஓயாக்கவலைவிட்டே யுற்றிருப்பதெந்நாளோ ௨௧

பட்டப்பகலிற் பரம்பொருளைப்பாழ்நெஞ்சால்
விட்டேனதனிடம்போய் மேவுநாளெந்நாளோ ௨௨

பாடுமவளருத்திற் பாதமதைத்தூக்கிநின்
றாடுமவன்கருணைக் கன்புறுவதெந்நாளோ ௨௩

ஒன்றுமிரண்டுமொழித் தொன்றுமிரண்டுமலா
தொன்றாயிருந்தவொன்றை யுற்றறிவதெந்நாளோ ௨௪

அஞ்சிலிரண்டகற்றி யானந்தவெள்ளத்தே
துஞ்சியிருந்து சுகம்பெறுவதெந்நாளோ ௨௫

கையசைத்துக்காட்டியென்றன் கட்டழியப்பார்த்தானை
மெய்யசையாதுறறிருந்து மேவுநாளெந்நாளோ ௨௬

காலைப்பிடித்திழுத்துக் கட்டுண்டுசாகாமல்
மூலத்தைக்கண்டு முடிவறிவதெந்நாளோ ௨௭

அருட்சத்திதானே யருட்குருவாய்வந்து
விருப்புற்றநாயேற்கு வீடளிப்பதெந்நாளோ ௨௮

கூடாமற்கூடியென்றன் கூட்டமறுப்பானை
நாடாமனாடி நலம்பெறுவதெந்நாளோ ௨௯

சுழிமுனையென்றே யறிஞர்சொற்றபொருட்டெளிந்து
பழுதறுவாயுவைவிடுத்துப் பரமாவதெந்நாளோ ௫௰

தூண்டியிருளறுத்துத் தூண்டாவிளக்கேற்றி
நீண்டாமயக்கொழிந்து நின்றிடுவதெந்நாளோ ௫௧

என்னைப்பொருளாக்கி யின்பப்பொருளளித்தோன்
சொன்னவகையே சுகங்காண்பதெந்நாளோ ௫௨

சச்சிதானந்தமது தானென்றுணறிவால்
அச்சிதாகாச மறிந்தணைவதெந்நாளோ ௫௩

மாயைக்குலமாய்க் கவந்தென்னகத்திருக்கும்
தாயையறிந்து தரிசிப்பதெந்நாளோ ௫௪

மாயைக்களைகளைந்து மாமணிபோலாவதற்கு
காயப்பழக்கங் கடிந்தொழிப்பதெந்நாவோ ௫௫

அறிவுக்கறிவாய கண்டவொளியாகி
நெறியொத்திருக்கு நிலையறிவதெந்நாளோ ௫௬

பஞ்சாங்கஞ்சொல்லிப் படித்துமயலுற்றேனை
அஞ்சாதேயென்றறையி லாரவைப்பதெந்நாளோ ௫௭

வாக்கியத்தைநான்கு வகையாய்ப்பிரித்துரைத்துத்
தாக்குமயலறுத்தோன் றாளணைவதெந்நாளோ ௫௮

தத்துவத்தின்பூட்டறுத்துத் தானேதானாகியிருத்
தத்துவிதானந்த மடையுநாளெந்நாளோ ௫௯

வீட்டிருளைப்போக்கி வெளியிலொளியாகுமுனை
நாட்டிலறிந்தருளை நண்ணுநாளெந்நாளோ ௬௰

வண்ணாத்தியம்மாள் மலரடிக்கேயாசைகொண்
டுண்ணாடிப்பார்த்தென் னுரையழிவதெந்நாளோ ௬௧

சிவசங்கரநாதச் செல்வன்றிருப்பணியை
அவலமறப்புரிந்திக் காட்படுவதெந்நாளோ ௬௨

அந்தமாந்தன்னடிக்கே யாளாக்குந்தேசிகனைச்
சொந்தமாய்ப்பாடித் துரிசறுப்பதெந்நாளோ ௬௩

எந்நாட்கண்ணி-முற்றும். ஆகூ ௱௰

பூங்குயிற்கண்ணி.

அன்பருளத்திருக்கு மாநந்தநாயகனை
என்புருகிநாயடியே னென்றணைவேன்பூங்குயிலே க

நட்டுக்கதிகாரி ஞானம்பிகைக்கொழுநன்
ஆட்டைத்தரிசித் தமர்வேனோபூங்குயிலே உ

சிந்தைகலக்கந் தெளியமொழிந்தவனை
எந்தன்குறைதீர வெய்துவனோபூங்குயிலே ங

கொட்டாவிகொண்டு குறுகுறுத்துப்பாழுடலை
விட்டேகுமுன்பரனை மேவுவனோபூங்குயிலே ச

புல்லறிவினாலே பொருண்மறந்தபாவியேன்
நல்லறிவுபெற்றருளை நாடுவனோபூங்குயிலே ரு

சுட்டறுத்தானந்த வெள்ளந்தோய்ந்து துளைந்தாடிநிற்க
விட்டகுறைவந்தெனக்கு மேவுமோபூங்குயிலே சு

சாதகத்தைக்கையகன்று சாட்சியாய்நானிருந்து
போதகனார்பொன்னடியைப் புல்லுவனோபூங்குயிலே எ.

உலகஞ்சிரிக்க வுவந்துகவிகூர்ந்
திலகுமறிவா யிருப்பேனோபூங்குயிலே அ

காட்டுக்கதிகாரி கண்ணழகன்றாள்பணிந்தும்
நாட்டார்நகைப்பதற்கு நாணுவனோபூங்குயிலே கூ

கூட்டைச்சுமந்து குணமழிந்தநாயினேன்
வீட்டைப்பொருந்திமகிழ் மீறுவனோபூங்குயிலே ௰

கங்கைச்சடையான் கரிசிலான்பொற்பதத்தை
அங்கபங்கமாமுன் னணைவனோபூங்குயிலே ௰க

கோலாலமாகிக் குரைகடல்வாயன்றுதித்த
ஆலாலமுண்டா னருள்வருமோபூங்குயிலே ௰உ

அஞ்சலிரண்டையொழித் தஞ்சுருவுமோருருவாய்த்
துஞ்சியவன்சேவடியிற் தூங்குவனோபூங்குயிலே ௰ங

தொண்டர்பணிந்தேத்துந் தூயசிற்றம்பலத்தே
விண்டவனைச்சேர விளம்புவாய்பூங்குயிலே ௰ச

நந்திகுருபரனை நாட்டமுற்றார் தம்மடியை
இந்தவுடல்விழுமுன மெய்துவனோபூங்குயிலே ௰௫

வசவேசர்சந்நிதியில் வாழ்ந்தபெரியோர்பதத்தில்
அசையாதிருந்தடியே னார்வேனோபூங்குயிலே ௰௬

தக்ஷிணாமூர்த்திபதந் தாழுமவர் தாட்கமலம்
பக்ஷமாய்க்கண்டு பணிவேனோபூங்குயிலே ௰௭

வாதவூராளியெனு மாணிக்கவாசகரை
ஆதரவாயுள்ளத் தணைகுவேனோபூங்குயிலே ௰௮

திருவள்ளுவனார் திருவடியைமாறாக்
கருவிள்ளுமாறகத்திற் காண்பேனோபூங்குயிலே ௰௯

வீறுசாரங்கனடி மேவுமவருள்ளுடையும்
ஆறங்கலிங்க மணைவனோபூங்குயிலே ௨௰

சிற்றம்பலநாடிச் சீகாழியூரமர்ந்தான்
அத்தன்கருணைவெள்ளத் தாழ்வேனோபூங்குயிலே ௨௧

பட்டினத்துப்பிள்ளையார் பத்திரகிரிவேந்தர்
மட்டவிழும்பொற்றாள் மருவுவனோபூங்குயிலே ௨௨

கண்ணுடையவள்ளலார்க் கன்புவைத்தகண்ணாளர்
நண்ணுபதஞ்சிறியே னணுகுவனோபூங்குயிலே ௨௩

நிசசொருபானந்த நிமலகுருபாதத்
தசையாதிருக்குமருள் வருமோபூங்குயிலே ௨௪

தத்துவராயர் சரணடைந்தநல்லோரை
நித்தந் துதித்திருளை நீங்குவனோபூங்குயிலே ௨௫

திருநீலகண்டருளஞ் சேர்த்தவயிராகத்
தருமையினைநானு மறிவேனோபூங்குயிலே ௨௬

திருநாளைப்போவார் திருவடிக்கேயாளாம்
பருவமீதென்று பதைப்பேனோபூங்குயிலே ௨௭

குகைநமசிவாயரருள் கொள்ளைகொண்டார்தம்மை
அகமுருகிமெய்ச்சோர்ந் தணைவேனோபூங்குயிலே ௨௮

எங்கள்குருநமசி வாயரிருபாதம்
துங்கமாய்க்கண்டு தொழுவேனோபூங்குயிலே ௨௯

காபாத்திரமூர்த்தி காக்ஷிபெற்றார்தம்போல்
அரைநோட்டநாயேற் கமையுமோபூங்குயிலே ௩௰

மவுனகுருநாதன் மலரடியைப்போற்றும்
தவமுனிவர்பாதந் தலைவருமோபூங்குயிலே ௩௧

பாலையனாந்தவடி பாடுவார்பொன்னடிக்கே
ஆலயமாயென்னெஞ் சமையுமோபூங்குயிலே ௩௨

சிவப்பிரகாசன் றிருவடியைப்போற்றி
அவப்பிரயாச மகற்றுவனோபூங்குயிலே ௩௩

தூளிதங்காளத்திமுத்தன் றூயவடிக்கென்னாளும்
ஆளாகி நானுமணைவேனோபூங்குயிலே ௩௪

சீர்மேவுசாந்தலிங்க தேசிகற்காளானோரை
ஆராமையாய்க் கண்டணைவேனோபூங்குயிலே ௩௫

பழனிமாதேவனடி பாடுமடியாரைத்
தொழுதுமனமுருகித் தோய்வேனோபூங்குயிலே ௩௬

கருணைப்பிரகாசக் கண்மணிபொற்பாதத்
தருமையாயென்னெஞ் சமையுமோபூங்குயிலே ௩௭

குருவாயெனையடிமைகொள் குமாரதேவன்
அரிதாயென்னெஞ்சிலமர்வானோபூங்குயிலே ௩௮

போரூர்ச்சிதம்பரனார் பொன்னடியென்புன்றலைமேல்
போதிருக்கப் பெறுவேனோபூங்குயிலே ௩௯

அருணாசலதேவர்க் கன்புசெய்துவாழும்
கருணாகடாக்ஷமது காணுமோபூங்குயிலே ௪௰

ஆறுமுகதேவனடிக்கன்பு புரிந்துநெஞ்சம்
தேறுவதுமுண்டோநீ செப்புவாய்பூங்குயிலே. ௪௧

பாதிரிஞானம்பாளின்பங்கய பொற்பாதமே
ஆதரவாயெண்ணியணைவேனோ பூங்குயிலே ௪௨

விருத்தகிரிச்சிதம்பரேயனார் மென்றாள்
வருத்தமறக்கண்டு மகிழ்வேனோபூங்குயிலே. ௪௩

தாயுமானாரடியிற் றாழுமவர்தம்மடிக்கீழ்
ஓயாதநெஞ்சகமு மோய்ந்துறுமோபூங்குயிலே ௪௪

கூவாக்கத்தேசிகனர் கூறுங்கருத்ததனை
ஆவாவென்றென்னு ளறிவேனோபூங்குயிலே சரு

சின்முத்திராங்குசங்கொள் தேசிகன்வேலாயுதன்றாள்
நன்முத்திவாழ்வுபெற நாடுவனோபூங்குயிலே சசு

குருவாகவந்த குழந்தைவேலையன்
திருவாய்மொழியென்னுட் டேறுவனோபூங்குயிலே சஎ

ஆ உஉஎ.

பூங்குயிற்கண்ணி-முற்றும்.

என்னேயோவென்கண்ணி.

எல்லாநீயென்றுரைத்த வென்குருவேநின்னருளால்
எல்லாநானனவியல்புதா னென்னேயோ. (க)

இருட்கடலில்மூழ்கு மெனையீர்த்துவெளியாக்கி
அருட்கடலில்மூழ்கவைத்த வாச்சரியமென்னேயோ. (உ)

பொய்யுலகின்மெய்யாய்ப் புகுந்தவெனைத்தூக்கி
ஐயனடிக்கீழ்வைத்த வாச்சரியமென்னேயோ. (ங)

வீடுமனைவிமக்கள் மெய்யென்றிருப்பேனை
ஆடுமவனடிக்கீழாக வைத்ததென்னேயோ. (ச)

திருவடியைநாடாச் சிறியேனையன்பால்
அருகிலழைத்த அதிசயந்தானென்னேயோ. (ரு)

பத்திநெறியில்லேன் பரஞானமில்லேனை
அத்தனழைத்திட்ட வதிசயந்தானென்னேயோ. (சு)

கறுத்தமலமாயைவலி கண்ணெதிர்தோன்றாமல்
அறுத்தெனையாட்கொண்ட வதிசயந்தானென்னேயோ. (எ)

மெய்யர்திருவடியின் மேவாதநாயேனுக்
கையனருளுமதிசயந்தா னென்னேயோ. (அ)

பவமதனுக்காளாக்கிப் பாழாக்குநெஞ்சத்
தவமதனைசசெற்ற வதிசயந்தானென்னேயோ. (கூ)

ஆ உஙசு.

என்னேயோவென்கண்ணி-முற்றும்.

ஆனந்தக் களிப்பு.

ஆனந்தம் ஆனந்தம் தானே - பரம
ஆனந்தம் ஆனந்தம் தானே.

வானோர்க்கரிதாம்பொருளே - என்னை - மலரடிக்காட்செய மாறு
ளத்தெண்ணி - தானேகுருவுருக்கொண்டு - இந்த- தரணியில்
வந்து சமைந்ததுதோழி. (ஆனந்தம்) ௧

அந்தக்குருமூர்த்திதன்னை - நானும் அன்பாற்பணிந்தஞ் சலியாகி
நின்றேன் - சொந்தமாயென்புன்றலைமேல்-பதம் - சூட்டியொ
ருமொழி யூட்டினான்தோழி (ஆனந்தம்) ௨

ஊட்டுங்குருசந்நிதியில் - என்றன்-உடல்பொருளாவியொருமூன்று
மீந்தேன் - காட்டுமுனையறியென்றான் - அவன்- காருண்யமெ
ன்று கருதினேன்தோழி (ஆனந்தம்) ௩

ஒல்லையிலவன்பாதந்தன்னை-பணிந்-தொடுங்கிநடுங்கிநா னாரென்று
கேட்டேன்- எல்லாநீயே யென்றுரைத்தான் - நான் - எப்படி
யெல்லாமென் றேத்தினேன்தோழி (ஆனந்தம்) ௪

உனக்கென்னேயெதிர்நிற்பதென்றான்-அந்த - உளவறியாமலுலகம
தென்றேன் - கனமாமுலகமதெங்கே - அது - கண்டுரைசெய்
யென்று சொன்னாண்டிதோழி (ஆனந்தம்) ௫

எந்தனினைவினிலென்றேன் - நன்றாய் - எண்ணியுலக வுருவத்தை
நீக்கி-அந்தநினைவைப்பா ரென்றான் - அதை-அறிகிலேனென்
றுரை செய்தேண்டிதோழி (ஆனந்தம்) ௬

அந்தநினைவையல்லாமல் - உலகாதியுருவமதெங்குளதென்றான்-
இந்தவுருவுமில்லென்றேன்- ஆகில் - இந்தவுருவமு மெங்குள
தென்றான் (ஆனந்தம்) ௭

எந்தனினைவினிலாகும்-என்றே - ஏத்திச்சொன்னேனஃ தெங்குள
தென்றான் எந்தனிடத்தினிற்றானே- அன்றி- எங்குநான்கண்
டிலனென்றேண்டி தோழி (ஆனந்தம்) ௮

ஆதியாமுன்றன்னினைவை - நன்றாய் - அகற்றிப்பின்னுன்னைப் பா
ரென்றுமொழிந்தான் - சோதியேநானென்றுரைத்தேன் -அப்
பா-சொன்னசொல்லேயுண்மையென்றுரைத்தாண்டி (ஆ) ௯

கண்டவிடத்தினிற்சாக்ஷி - அது- கண்டுரைசெய்யென்றுபின்னுமு
ரைத்தான் எண்டிசையெல்லாந்துதிக்கும்-உன்றன்- இணையடி
யலதொன்றுமின்றென்றேன்தோழி (ஆனந்தம்) ௰

உற்றதுகூறென்றுசொன்னான்-சுவாமீ-ஒத்தவிடத்தினி னித்திரை
செய்தேன்-சத்தியமாயென்னுருவம்-சித்து-தானேயென்றுறு
தியாய்ச் சாற்றினேன்தோழி (ஆனந்தம்) ௧௧

சித்தென்றுசொன்னசொற்கொண்டே-இன்னும்- சிந்தனைக்கெட்டா
ச்சிவத்தையறிந்து - மூற்றுமுணர்ந்தருளென்றான் - நானும்-
மூதறிவாயுன்னிப்பார்த்தேண்டிதோழி (ஆனந்தம்) ௧௨

பார்த்தவிடத்தினிலெங்கும் - நல்ல-பரவெளியாகிப் பரசுகந்தானே
கோத்துப்பிடித்திழுத்தென்னை - அது - கூட்டிமுடித்ததைக்
கூறிலேன்தோழி (ஆனந்தம்) ௧௩

எல்லாமறிந்ததுமில்லை -நான் - எல்லையிலாவொளிபெற்றது மில்லை
பொல்லாமணிவிளக்காகி-எங்கும் - பூரணமானநான்பொய்யே
டிதோழி (ஆனந்தம்) ௧௪

சத்துச்சித்தானந்தமெய்யே-அந்தத் - தன்மையறிந்துநான் சார்ந்த
தும்பொய்யே-சித்துவிலாசமுமெய்யே- அந்தச்-சித்தையறிந்
தநான்பொய்யேடிதோழி (ஆனந்தம்) ௧௫

நீயுமறிவாயேமானே-ஞான-நீதியைக்கைவிட்டு நிலையாதவாழ்வில்
மாயுமனத்தைப்பிரித்தே- ஐயன் - மலரடிசேர்த்ததுமானந்தந்
தோழி (ஆனந்தம்) ௧௬

வாழைமடலுரித்தப்பால்-நல்ல-வளமானதண்டையுங்கண்டதுபோ
லப்-பாழுமுடலைப்பிரித்தே-அதைப்- பார்க்கச்சொன்னான்பற்
றிப் பார்த்தேண்டிதோழி (ஆனந்தம்) ௧௭

பார்த்தவிடமெல்லாம்பாழே- அதிற் - பரசுகமொன்றுமே மேலாகு
மந்தக் கூத்தைநான் பார்த்ததுமில்லை-அந்தக் - குறிசொல்ல
வெவராலுங் கூடுமோதோழி ஆனந்தம் ௧௮

நானென்றுநீயென்றுமுண்டோ-இங்கே - நடுவேயிருந்தமறைப்பை
யகற்றில்-நீநானென்றெண்ணும் விகற்பம் நீக்கி-நிஜானந்தமா
க நிகழ்ந்ததுதோழி ஆனந்தம் ௨௰

உடலென்றுமுயிரென்றுமுண்டோ - இந்த - உடலைப் பிரித்துநானு
ண்ணாடிப்பார்க்கில் - மடலவிழ்பாதமே யல்லால்-அங்கே-மற
றொன்றுங்கண்டு மதித்திலேன்தோழி (ஆனந்தம்) உக

ஜென்மசாபல்லியமானேன்-யார்க்கும் - சிந்தனைக்கெட்டாச் சிவரூப
மானேன்-தன்மயமாகத்திகழ்ந்தேன்-எங்கும்- தடையற்றவான
ந்தந் தானானேன்தோழி (ஆனந்தம்) உஉ

காடுஞ்செடியுமலையும் - சுடு - காடுமருமலர்ச்சோலையுங் குன்றும்-
நாடுநகரமும்வீடும் - எங்கும் - நாடிலெனையன்றி வேறில்லை
தோழி (ஆனந்தம்) உங

பட்டப்பகலிலிக்கோட்டை - தன்னைப் - பார்த்தேகொடுத்துப்பர
வெளியானேன்-விட்டவிடத்தையடுத்தே-நான் - மேவியிருந்த
போ தானந்தந்தோழி (ஆனந்தம்) உச

குருவைப்பணியாதிருந்தும் - ஞானக் - கொடிபோட்டிருந்தேனிக்
குவலயந்தன்னில்-அருவுருவாகுமென்னையன்-அதை - அறுத்
துக்கைகாட்டி யருளினான்தோழி. (ஆனந்தம்.) உரு

ஆனந்தக்களிப்பு-முற்றும். ஆ உளசுக.

தோத்திரமாலை-முற்றிற்று.

புதியபதிப்பு ! வெளிவந்து விட்டது !!

- - வேதாந்தக் - -

கட்டளைக் கொத்து.

அனாதிமுத்தனாகிய முதல்வன் அனாதிபெத்தர்களாகிய ஆன்மாக்களின் கன்மத்திற்கீடாகப் பலசமயங்களை வேதத்தில் வகுத்து வைத்தனர். அவ்வேதங் காரணமாகவே அவ்வச்சமத்தினர்கட்கு ஏற்பட்டுள்ள சாஸ்திரங்களும் பலவாயின. அவ்வச்சாஸ்திரங்களிற் பிரதிபாதிக்கப்படும் ஆன்ம இலக்கணங்களையும், பரமான்ம இலக்கணங்களையும், தெரிந்துகொள்வதற்குக் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அவ்வச்சமயங்கட்கேற்றவாறு பரிபாஷா கலப்பினால்சுலபத்திலறிதற்கேலாதபடி யிருக்கின்றமையினைக்கருதி அவ்வச்சமயங்களில்வல்லவர்களாகிய பெரியோர்கள் தங்கள் தங்களுக்குரிய சாஸ்திரங்களுக்குச் சோபானமாக எளிய வசன நடையில் யெழுதி நல்ல காகிதத்தில் அச்சிட்டிருக்கிறோம்.

இதன் விலை ரூபா	1	0	0
ஷை கிளேஸ் காகிதம்	1	8	0

பகவத்கீதை வசனம்.

பாக்கெட் சயிஸ்.

18 - அத்தியாயங்களும்

வெகு சுத்தமாய் படங்களுடன் அடங்கியது.

இதில் வேதாந்த ரஹஸ்யத்திற்கு உபமானமாய் ஸந்தர்ப்பாசாரமாய் உபநிஷத் வாக்யங்கள் ஆங்காங்கு உபஹரிக்கப்பட்டிருக்கின்றன.

யோகஜ் ஞானங்களை விளக்கிக்காட்டும் நூற்களில் இவைகளே முதன்மை, பெற்றனவாம். அலையுமனத்தை அகத்தில் அடக்குவதற்கு அரியபெரியகருவிகளாகும். கற்றோரேயன்றி மற்றோரும் களிப்புடன் வாசிக்கத்தககனவாம். ஏழைகளும் எளிதில் வாங்கும் பொருட்டே பாக்கிட் சயிஸ் விலை மிகவும் சகாயமாய் ஏற்படுத்தப் பட்டது. இதன் விலை அணா 0 8 0

T. சாரதா புத்தகசாலை,

நெ 23-பாளையப்பன்தெருவு, மின்ட் போஸ்டு, மதறாஸ்.

நிஷ்டானுபூதி - - -

மூலமும் உரையும்.

அகண்டபரிபூரண சச்சிதானந்த சாக்ஷாத்காரமாயபரமசிவ னார்பார்வதியாருக்கு, உபதேசித்தருளிய நிஷ்டையின் உண்மைவிதி யை, உலகோர்தெளிந்து உணர்ந்து முமுக்ஷுத்துவத்தையடைய திருக்கோவலூர் ஆறுமுகசுவாமிகளால், மூலமாகவியற்றப்பட்ட தை அவதாரிகைமுதலிய வைந்திலக்கணமாக பகுத்து நூதனமாக முத்துகிருஷ்ண பிரம்மத்தினால் அருளிச்செய்யப்பட்ட உரையுடன் சுத்தப்பதிப்பாக அச்சியற்றியிருக்கிறது அஷ்டமாசித்திகளைபெற விரும்பும் யோகநிஷ்டாபரர் ஒவ்வொருவரும் இந்நிஷ்டானுபூதி யை வாசித்தே தேருதல்வேண்டும்.

இதன் விலை ரூபா 1 0 0

ஷி. கிளேஸ் ,, 1 4 0

நானாஜீவ வாதக்கட்டளை

அரும்பொருள்விளக்க விசேட விருத்தியுரை என்னும்

இரகசியார்த்த தீபிகை மூன்று படங்களுடன்

ஜீவர்கள் யதார்த்த சொரூபத்தை யறிந்து கிருதார்த்தர்களா கும்வண்ணம் ஸ்ரீசேஷாத்திரி சிவனார் பெருங்கருணையா லருளிச் செய்த[illegible]தாந்த கட்டளையென்பதனுள் தத்துவரகசியத்தைத் தெள் ளிதில் விளக்கும் [illegible]னநூல் அதி அத்தியாவசியமாக யாவரும் பிரதமத்தில் ஓதியுணரத் தக்கதாகும். இதன் மூன்றாவிலுள்ள ஆந் திரா (ரகசியார்த்தத்தைச் சிறுவர்களும் எளிதிலறிந்து கொள்ளும் வண்ணம் இந்நூலில் மிகத்தெளிவாக விளக்கியுள்ளதுந்தவிர பல நூற்களினின்றுந் திரட்டிய (மேற்கோள்) உதாரண கவிகளை ஆங் காங்கு குறிப்பிட்டு வியாக்கியானமுஞ் செய்யப்பட்டிருக்கின்றது அன்றியும் காரியசரீரபாவனை, சூட்சும சரீரபாவனை பிரம்மநியம் சிவசைதன்ய பிரம்ம சன்னிதானத்தர்சோபேபடங்களும் சேர்க்கப் பட்டு தத்துவ நிலயவிகமங்களை நன்குவிளக்கி காட்டப்பட்டிருக்க லால் இந்நூல் யாவருக்கும் பெரிதும். பிரயோசனத்தைத்தரவல்ல தான ஒப்பற்றதத்துவ ஞானசாஸ்திரமேயாகும் இந்தத்துவக்கட்ட ளையின் உட்பொருளை ஸ்பஷ்டமாக அறிந்து [illegible] ஆசிப்பவர் களுக்கு இவ்விரகசியார்த்த தீபிகை ஒன்றே இருளைப்போக்கி அறி வைப் பிரகாசிப்பிக்கச் செய்யவல்லதென்று துணிந்துகூறலாம்.

இதன் விலை அணா 8. ஷி கிளேஸ் அணா 10.

டி. சாரதா புத்தகசாலை,

நெ. 23, பாளையப்பன்தெரு, தங்கசாலைபோஸ்டு, மதராஸ்.